ISSN 2424-6654



தமிழ்த் தூது

# தாயக ஒலி

THAYAKA OLI

இரு திங்கள் ஏடு

33



## இரா உதயணன் இலக்கிய விருது விழா - 2017



பொங்கும் மங்களம் எங்கும் பொங்குக...



பொங்கல் சிறப்பிதழ்

தை - மாசி 2018

விலை ரூபா 100/=

# செல்வராஜா

கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்



உங்கள் எண்ணம் போல் நகைகளையும் புடைவைகளையும்
தெரிவு செய்து கொள்ளுங்கள்

பொன்னுருக்கலுக்கான வசதிகள்
செய்து தரப்படுவதுடன் தாலிக் கொடிகள்
அனைத்தும் தங்கத்தின் விலைக்கே
செய்து தரப்படும்

கூறைப் புடைவைகள் பட்டுப்புடைவைகள்
மற்றும் சீக்கூன் அனைத்தும்
30% விலைக்கழிவில்!

## SELVARAJA
**Gold House & Textiles**

Exclusive Designer Jewellery & Sarees

You are the best
For you we are the best

**162B, Mitcham Road, London SW17 9NJ**
**Tel : 020 8767 3795 | 07825 005 269**

திருமண நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட உங்கள்
குடும்பத்திற்கு தேவையான முழுமையான ஆடைகள் அனைத்தும் இனி ஒரே இடத்தில்...




317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. | T: +94 11 250 4470, 250 0098 |
F: +94 11 2508934 E: info@littleasia.lk | www.littleasia.lk | skype: little.asia.emporium
73, Main Street, Colombo 11. | T: +94 11 2391592, 2391593 |
F: +94 11 2391745 E: info@littleasiasilk.com | www.littleasiasilk.com | Skype: little.asia.silk




134/A, Galle Road, Colombo 06

011 4181378 | 011 2360334 / 011 2360338

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# தாயக ஒலி

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2048 தை - மாசி - 2018 வில்-06 ஒலி-33

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்

## தாயக ஒலி

**பிரதம ஆசிரியர்**

த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)

தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**

தாயகன் (இலண்டன்), சி.பவன் ( இலங்கை)

**மதியுரைக் குழு**

பேராசிரியர் சபா ஜெயராசா
பேராசிரியர் வ.மகேஸ்வரன்
வவுனியூர் இரா உதயணன்
சைவப்புலவர் சு.செல்லத்துரை
ந.கருணை ஆனந்தன்
எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**

மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
கதிரவேலு மகாதேவா
செ.ராஜேந்திரா
இ.ஜீவகாந்தன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :**

| | | |
|---|---|---|
| கனடா | : | முருகேசு கிருபாகரன் |
| | | அ.பற்குணன் |
| இலண்டன் | : | இ.பாலேந்திரநாதன் |
| அமெரிக்கா | : | வே.பிரேமதயாளன் |
| அவுஸ்திரேலியா | : | தி.திருநந்தகுமார் |
| பிரான்ஸ் | : | ச.சச்சிதானந்தம் |

**ஐரோப்பிய நாடுகளுக்கான
விடேச ஒருங்கிணைப்பாளர்
திருமலை பாலா**

தொ.பேசி : 0044(0) 7956486014

தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை
தொ.பேசி. : 0094(0)112364124
Email : editorthayakaoli@gmail.com

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்

- ஆசிரியர்

## உள்ளே ஒலிப்பவை

பேனா முனையிலிருந்து... 02

**கட்டுரை :**
- கலை இலக்கியங்களும்... 03
- மாணவர் விசா 06
- பேராசிரியர் க.கைலாசபதி 08
- காலம் கடந்து நிற்கும் படைப்புகள் 16
- என்பார்வையில் புதுமைப்பித்தன் 23
- நவீனத்துவம் 37
- புதுக்கவிதை வளர்ச்சி 45
- உண்மையைப் புரிந்துகொண்டு... 47

**சிறுகதை :**
- கறுப்பும் வெள்ளையும் 12
- விடியுமா? 13

**கவிதை**
- ஏர்முனை 15
- நல்லாசிரியர்கள் 21
- வீடு 25
- வராதே!, மாட்டாரே! 26
- புது உலகம் படைப்போம் 36

**நூல் அறிமுகம்**
- சாதனை படைத்த சரித்திர நாயகி 43

**விருது விழா**
- இரா உதயணன் இலக்கிய விருது விழா 27

**ஆன்மிகம்**
- சிக்கெனப் பிடித்தேன் 31

**நாடகம்**
- அரங்கமும் மனிதமேம்பாடும் 33

**அறிந்ததைச் சொல்ல வந்தோம் :**
- வல்லிக்கண்ணன் 39
- மூளை வளர்ச்சி குன்றியுள்ளனர் 44
- ஒக்ஸ்பாம் நிறுவகத்தின் அறிக்கை 49

**கதைகள் :**
- கிளியின் கதை 07
- நகைச்சுவைக் கதைகள் 30

**ஏனையவை :**
- இப்படியும் வேடிக்கை மனிதர்கள் 17
- உண்மைச் சங்கதிகள் 20
- தரிசனம் 39
- தனிமை பற்றி ஒரு எழுத்தாளர் 41
- வாய்விட்டுச் சிரிச்சால்... 42

**உங்கள் விருந்து :**
- முற்போக்குச் செல்நெறி தொடும் ஏடு 50
- தாயக ஒலி 51
- வாழ்த்துப்பா 52

**பேனா முனையிலிருந்து....**



# வறுமையில் வாடுகின்றோம்

முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் சிக்கி மீளமுடியாதநிலையில் மூன்றாம் உலகநாடுகள், இருப்பதைத் தெரிந்தும் தெரியாத போக்கில் இருப்பது அறியாமை என்று சொல்ல முடியாது. உலக முதலாளித்துவம், உலக மயமாக்கல் என்ற போர்வைக்குள் நின்று நாடுகளைக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருப்பது கண்கூடு. பல்தேசியக் கொம்பனிகள் இலாபநோக்கை அடிப்படையாகக் கொண்டு நாட்டையும், மக்கள் சமுதாயத்தையும் சுரண்டிக்கொண்டிருக்கின்றன. கல்வியும் வியாபாரப் பண்டமாக்கப்பட்டதன் விளைவாக சமுதாய ஏற்றத்தாழ்வுகள் மக்களிடையே குரோதங்களை உருவாக்கி விட்டுள்ளன. வர்க்க உணர்வுகள் மேலோங்கிக் காணப்படுகின்றன. ஏழைகள் எல்லாவகையிலும் சுரண்டப்படுகின்றார்கள்.

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தளவில் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதி சொல்லணா வேதனைகளின் வெளிப்பாட்டை உணர்த்தி நிற்கின்றது. இடப்பெயர்வு, புலப்பெயர்வு காரணமாகத் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற வைத்ததுமல்லாமல், அகதி வாழ்க்கையும் மக்களை உடல் உளரீதியாகப் பெரும்பாதிப்பை உண்டுபண்ணியிருக்கின்றது.

இருப்பிட வசதி அற்றநிலை, தொழில் இன்மை, உணவுப்பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத பொருளாதார முடை, வாழ்வாதாரப் பிரச்சினைகள், சமூகச் சீரழிவுகள் போன்ற இன்னோரன்ன காரணங்களால் சாதாரண மக்களின் வாழ்க்கை கேள்விக் குறியாக இருப்பதை அவதானிக்க முடிந்துள்ளது. விளிம்பு நிலை மக்கள் பல துன்ப துயரங்களை அனுபவித்த வண்ணம் வாழ்வா? சாவா? என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மனவிரக்தி ஏமாற்றம் காரணமாகப் பலர் தற்கொலை முயற்சிகளிலும் பங்காளிகளாயினர். கடன் சுமை தாங்கமுடியாமல் வாழ்வதற்கு எதுவித வழியுமற்ற நிலையில் பல குடும்பங்கள் தற்கொலையைத் தவிர வேறுவழியை எண்ணமுடியாத நிலையில் பல நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.

இத்தகைய பின்னணியில்த்தான் தமிழ்ப்பேசும் மக்கள் பெருந்தொகையாக வாழும் வடமாகாணம் இலங்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்கள் தொகையைக் கூடுதலாக் கொண்டு முதலிடத்தில் இருப்பதாகப் புள்ளிவிபரங்கள் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன. குடிசனமதிப்புத் திணைக்களமும் புள்ளிவிபரத் திணைக்களமும் இணைந்து அண்மையில் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விபரங்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன.

இதன் பிரகாரம் வறுமைக்கேட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் கூடுதலாக இருக்கும் மாவட்டமாக கிளிநொச்சி முதலிடம் பெற்றுள்ளது. மொத்தச் சனத்தொகையில் 18.2 வீதமானவர்கள் அங்கு இருப்பதாகச் சொல்லப்பட்ட அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் 12.7 வீதமானவர்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 7.7 வீதமானவர்களும் வறுமையில் வாடுகின்றார்கள். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 11.3 வீதமனாவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருக்கிறார்கள். வறுமை காரணமாக பள்ளி மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியாத நிலையில் இடைநடுவில் விட்டுச்செல்லும் நிலையும் தோன்றியுள்ளது.

வெள்ளநிவாரணம், வறட்சிநிவாரணம், சமுர்த்திநிவாரணம் அத்துடன் வேறு பெயர்களிலும் வழங்கப்பட்டு வரும் நிவாரணங்கள் முறையாக வேண்டப்படுபவர்களுக்குச் சென்றடைவதில்லை என்ற குற்றச் சாட்டுகளும் மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

மக்களின் மீட்சிக்கான, முறையான வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டுச் செயற்படுத்தாதவரை வறுமைநிலை கூடிக்கொண்டு போகுமே தவிர குறைய வழிபிறக்காது.

“தைபிறந்தால் வழிபிறக்கும் என்று சொல்லுகின்றார்கள்” வருடா வருடம் இதைத்தானே சொல்லிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் வழிபிறந்ததாகத் தெரியவில்லையே!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்....

**- ஆசிரியர்**

பேராசிரியர் சபா.ஜெயராசா

# கலை இலக்கியங்களும் அழகியல் உளவியலும்



கலை இலக்கிய ஆய்வுகளில் "அழகியல் உளவியல்" பற்றிய நோக்கு அண்மைக் காலமாக மேலோங்கத் தொடங்கியுள்ளது. கலைகளும் இலக்கியங்களும் உளவியல் சார்ந்த வெளிப்பாட்டு வடிவங்களாகின்றன. மனவெழுச்சி கலந்த படிமங்களும் சொல்லாடல்களும் அவற்றுக்கு அழகை ஏற்றுகின்றன. கட்டடக்கலை உளவியலின் அண்மைக் கால வளர்ச்சி, கலைக்கும் உளவியலுக்குமுள்ள தொடர்புகளை மேலும் ஆழப்படுத்தி வருகின்றது.

தியோடர் லிப்ஸ், ஹென்றிச் வூல்பின், வில்கெம் வெரிஞ்சர், வைக்கோட்சி முதலியோர் கலை இலக்கிய அழகியல் உளவியல் துறையில் விரிவான புலமைப் பங்களிப்புக்களைச் செய்துள்ளனர்.

கலைகளால் மனித மனம் புடமிடப்படும் செயற்பாட்டை துன்பியல் நாடகங்களை அடியொற்றிய தொன்மையான கிரேக்கச் சிந்தனைகள் வெளிப்படுத்தின. இந்திய மரபிலே தோற்றம் பெற்ற "இரசக் கோட்பாடும்," தமிழ் மரபிலே உருவாக்கம் பெற்ற "மெய்ப்பாடுகள்" பற்றிய சிந்தனைகளும் கலைகளுக்கும் மனவெழுச்சி வெளிப்பாடுகளுக்கும் உள்ள தொடர்புகளை வெளிப்படுத்தின.

தொன்மையான தொழில் முறைகளும், சடங்குகளும் மனித உணரச்சிகளும் ஆக்க வடிவிலே சங்கமித்த நிலையில் கலைகளும் இலக்கியங்களும் மேற்கிளம்பின. சடங்குகளில் இடம்பெற்ற கலைப்பண்புகளொடு இணைந்த அழகியல் உளவியல் மனச்சுகத்தை வழங்கிற்று. அந் நிலையில் சடங்குகள் உளவளத்துணை செய்யும் சீர்மியக் கருவிகளாகவும் பயன்பட்டன.

நாடகமும் அதற்குரிய அழகியலும் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பது தொடர்பான மூன்று கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை :

(1) சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது.
(2) தொன்மையான குலக்குழுக்களுக்கிடையே நிகழ்ந்த போர் ஒத்திகைகளில் இருந்து நாடகம் தோன்றியது.
(3) செய்யும் வேலைகளையும் தொழிற்பாடுகளையும் மேம்படுத்த மேற்கொண்ட ஒத்திகைகளில் இருந்து நாடகம் பிறந்தது.

கலை இலக்கியங்கள் தொடர்பான அழகியல் உளவியலை விளக்க வந்த கோட்பாடுகளுள் உளப்பகுப்பு உளவியல் முக்கியமானது. நனவிலி மனத்தின் அழகியல் சார்ந்த வெளிப்பாடாக கலை இலக்கியங்கள் உருவாக்கம் பெறுவதாக உளப்பகுப்பு உளவியல் விளக்குகின்றது.

நிஜவாழ்க்கையிலே நிறைவேற்றிக் கொள்ளப்பட முடியாத பாலியல் இச்சைகள் நனவிலி என்ற ஆழ்மனத்திலே அழுத்தங்களுடன் அடக்கி வைக்கப்படுகின்றன. அவற்றை வெளிப்படுத்தி மனச்சுகம் காணலுக்கு கலை இலக்கிய ஆக்கங்கள் துணை செய்கின்றன என்று குறிப்பிடப்படுகின்றது.

உளப்பகுப்பு உளவியல் சிந்தனை மரபில் வந்த ஒரு முக்கியமான ஆய்வாளர் கார்ல்யுங், தொன்மக் கதைகளில் உளவியல் மற்றும் அழகியற் பண்புகளை அவர் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினார். அவற்றை அடிப்படையாகக் கொண்டு "கூட்டு நனவிலி" (Collective Unconscious) என்ற கருத்தாக்கத்தை முன்மொழிந்தார். காலங் காலமாக மக்களின் ஆழ்மனங்களிலே பதிய வைக்கப்பட்ட எண்ணங்கள் கூட்டு நனவிலியிலே இடம்பெற்றுள்ளன. அவை தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வருகின்றன. தொன்மக் கதைகள் அழகியற் பெறுமானங்களுடன் அறிவூட்டும் பரிமாணங்களையும் கொண்டுள்ளன.

உளப்பகுப்பியல் கருத்துக்கள் தொடர்ச்சியான திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருதலைக் குறிப்பிட வேண்டியுள்ளது. எரிக்புரோம் உளப்பகுப்பு இயலையும் மார்க்சியத்தையும் தொடர்புபடுத்தும் முயற்சிகளை மேற்கொண்டார்.

கலை இலக்கிய உளவியலில் ஆழ்ந்து பேசப்படும் ஓர் எடுபொருளாக "அழகியல் அனுபவம்" என்பது அமைகின்றது. அது சுவையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. சுவைத்தல் அகவயப்பட்ட செயற்பாடாக இருப்பினும் அதிலே புறவயக் காரணிகளின் செல்வாக்கும் உண்டு. கலைப்படைப்புக்கள் சுமந்து நிற்கும் மனவெழுச்சிக் கோலங்கள் அழகியல் அனுபவத்தை விசைப்படுத்துகின்றன.

சுவைப்பவர்களுக்குரிய அழகியல் உளப்பாங்கும் (Aesthetic Attitude) சுவைத்தலிலும் அனுபவ உருவாக்கத்திலும் செல்வாக்கை ஏற்படுத்துகின்றது. உளப்பாங்கின் உருவாக்கம் ஒருவரது சமூக இருப்புடனும் வாழ்நிலை அனுபவங்களுடனும் தொடர்புபட்டு மேலெழுவதாக மார்க்சிய உளவியல் குறிப்பிடுகின்றது.

அழகியல் உளவியல் தொடர்பாக முழுமைப்புல (Gestalt) உளவியலாளரின் கருத்துக்கள் வேறுபட்டவையாக அமைந்தன. கலை உருவாக்கத்திலும் அனுபவத்திலும் சுவைப்பிலும் கலைக் கூறுகள் ஒன்றிணைந்து முழுப்பெருளாக நிற்பதன் முக்கியத்துவம் அவர்களால் வலியுறுத்தப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக ஒர் இசைக் கச்சேரியில் இசைக்கருவிகள் ஒவ்வொன்றினதும் இசையும் பாடுவோரின் மிடற்றிசையும் ஒன்றிணைந்த முழுவடிவில் அழகியற் சுவையை உருவாக்குகின்றது. ஓர் இலக்கியப் படைப்பில் உள்ளடக்கமும், எடுத்தியம்பும் உருவாக் கோலங்களும் நீக்கமற ஒன்றிணைந்து முழுமைப் பெருளாகி அழகையும் சுவையையும் உருவாக்குகின்றன. முழுமைக் கோலத்தை வலியுறுத்தும் அவர்கள் கலைகளுக்கும் சமூகத்துக்குமுள்ள தொடர்புகளைக் கண்டறியத் தவறிவிடுகின்றனர்.

அழகியல் உளவியலையும் கலையாக்கத்தையும் அறிகை உளவியலாளர் அறிவுத்தளத்திலே நோக்குகின்றனர். ஒவ்வொருவருக்குமுரிய முன்னைய அனுபவங்கள், அறிவின் திரட்டல், குறித்த படைப்பைப் புலக்காட்சி கொண்டு மனத்திலே கட்டுமை(Construct) செய்யும்திறன், முதலியவை கலையாக்கத்திலும் சுவைப்பிலும் செல்வாக்குச் செலுத்துதலை அவர்கள் முக்கியத்துவப்படுத்துகின்றனர்.

கலைகள் உருவமானவை என்றும் அருவமானவை (Abstract) என்றும் பாகுபடுத்தப்படுகின்றன. அவற்றை விளங்கிக்கொள்ளல் அறிகைச் செயற்பாட்டுடன் தொடர்புடையது. அருவம் உருவம் இரண்டு விதமான கலைகளிலும் பொருள் கோடலில் பன்மை நிலை காணப்படுகின்றது. பல வாசிப்புக்கு உரியவாறு அவை தோற்றம் பெற்றுள்ளன. கலைப்படைப்புக்களில் இடம்பெறும் பல பொருளுக்கு இட்டுச்

செல்லும் பொருள் விரிகை (Ambiguity) நிலை அழகைக் கொடுக்கின்றது. அதேவேளை முரண்பாடுகளுக்கும் உளமோதல்களுக்கும் இட்டுச் செல்கின்றது.

பொருள் அறிதலிலே சிக்கல்கள், குழப்பங்கள், இடர்கள், அழுத்தங்கள் முதலியவற்றை உருவாக்கும் கலைகள் பொதுவாக விரும்பப்படுதல் இல்லை என்பதை "கொடுமை முகாமைக்கோட்பாடு" (Terror Management Theory) வலியுறுத்துகின்றது. ஏர்னஸ்பெக்கர் என்ற மானிடவியலாளரால் அந்தக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. ஆபத்துக்கள், பிரச்சினைகள், அழுத்தங்கள், சிக்கல்கள், முதலியவற்றுக்கு முகம்கொடுக்காது அவற்றைத் தவிர்க்கும் செயற்பாடுகளில் மனிதர் ஈடுபடுதலை அக்கோட்பாடு விளக்குகின்றது. இறப்பை அடியொற்றி உருவாக்கம் பெற்ற அந்தக் கோட்பாடு இன்று வேறு துறைகளுக்கும் பரவலாக்கப்பட்டுள்ளது.

கலை இலக்கிய வடிவங்கள் சிக்கலான தன்மைகளையும் கொண்டிருக்கும். அருவ ஓவியங்கள், அபத்த நாடகங்கள், குறியீட்டுக் கவிதைகள், மர்மங்கள் நிறைந்த நாவல்கள், முதலியவை இயல்பாகவே சிக்கலாகிய தன்மைகளைக் கொண்டிருக்கும். கல்வியிலும் சிக்கலாகும் பண்பு உண்டு. "அறிக்கைச் சிக்கல் அமைப்பாக்கம்" என்ற உளவியற் கோட்பாடு சிக்கல் தன்மையின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது.

அறிவு உச்சங்களை நோக்கி நகர்ந்து செல்லும் பொழுது இயல்பாகவே சிக்கலான வடிவத்தை எடுக்கும். உதாரணமாக ஆரம்ப வகுப்புக்களிலே பயிலப்படும் காரணத்தைக் காட்டிலும் உயர்வகுப்பிலே பயிலப்படும் கணிதம் அதிக சிக்கலானதாக அமைந்திருக்கும். இது எல்லாப் பாடங்களுக்கும், எல்லா அறிவுத்துறைகளுக்கும் பொருந்தும்.

சிக்கலின் இயல்புகள் பற்றி உளவியல் விரிவாக ஆராய்கின்றது. சிக்கலுக்கும் ஆற்றலுக்கும் தொடர்பு உண்டு. சிக்கலுக்கும் சுவைக்கும் தொடர்பு உண்டு. சிக்கலுக்கும் அழகுபடுத்தலுக்கும் தொடர்பு உண்டு. எளிமையான பொறிகளைக் காட்டிலும் சிக்கலான பொறிகள் அதிக செயலாற்றலைக் கொண்டிருக்கும். இந்திய அழகியலில் சிக்கலான கூறுகளால் உருவாக்கப்பட்ட முழுமை "சம்பூரணம்" எனப்பட்டது. உதாரணமாக "சாகுந்தலம்" நாகடத்தில் இடம்பெற்ற சிக்கல் நிலைவரங்கள் அதற்குரிய அழகை உருவாக்குவதிலே பங்குகொண்டது.

சிக்கலாகிய ஒரு கலைவடிவம் அதிக அளவான உறுப்புக்களை அல்லது அலகுகளைக் கொண்டிருக்கும். அவற்றுக்கிடையே கூடுதலான ஊடாட்டங்களும் நிகழ்த்தப்படும். நவீன உலகின் சிக்கலாகிய நிலவரங்களை அடியொற்றிய வடிவமாக அருவ ஓவியங்கள் தோற்றம் பெற்றன. தொழிற் புரட்சி உருவாக்கிய மேலைப்புலச் சமூகத்தின் கலை வெளிப்பாடாக அது அமைந்தது. கலையும் அழகியலும் பற்றிய உளவியல் சிக்கற்பண்பை ஆழ்ந்து நோக்குகின்றது.

மனித அழகியற் செயற்பாடுகளின் நீட்சி "பிரயோகக்கலை" (Applied Art) என்பதைத் தோற்றுவித்துள்ளது. எத்தகைய பொருட்களையும் அழகியல் சார்ந்த முறையில் உருவாக்குதல் பிரயோகக்கலை என்ற செயற்பாட்டினால் குறிப்பிடப்படுகின்றது. மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் செயற்றிறனைக் கொண்டிருத்தல் மட்டுமல்லாது, அழகியல் இன்பத்தைத் தருவதாகவும் இருத்தல் வேண்டும் என்று குறித்துரைக்கப்படுகின்றது. உளவியலடிப்படையில் கூறுவதனால் அழகு நுகர்ச்சியில் கிடைக்கப்பெறும் இன்பம் அதனுடன் இணைந்து செய்பாட்டிலும் ஊக்கத்துடன், உற்சாகத்தையும் வழங்கும். ■

# மாணவர் விசா

எங்கள் ஊரிலே படித்து பல்கலைக்கழகம்(??) கிடைக்காதோரும் படிப்பை தவிர்த்து பல்கலை(!!) கற்றோரும் மேற்படிப்பிற்காக எழுதும் பரீட்சை மாணவர் விசா இதில் சிலரைத் தவிர்த்து பலர் சித்தியடைந்து விடுவார்கள். அந்த சிலர் வங்கியில் பணம் போட்டு காட்ட முடியாதவர்கள்.

அந்தப் பலரில் சிலர் மட்டும் படித்து பட்டம் பெற வேண்டும் என்று சர்வதேச தகுதி வாய்ந்த(??) பல்கலைக்கழகம் செல்வோம். முதல் வருடம் பிரச்சனை இல்லாமல் போகும் ஏனென்றால் முதல் வருட கட்டுப்பணத்தை தகப்பன் கட்டியிருப்பான் அல்லது வெளிநாட்டிலிருப்பவர் திருப்பி தர வேண்டும் என்ற உறுதி மொழியோடு கட்டியிருப்பார்.

அதற்குள் மாணவர் விசா விதிப்படி பகுதி நேர வேலையை எப்படியாவது எடுத்து விடுவோம் அல்லது தங்கியிருக்கும் வீட்டுக்காரர் எடுத்து தந்து விடுவார். அப்படியென்றால் தான் வீட்டு வாடகைப்பணம் வாங்கலாம். அந்த ஒரு வருடத்திற்குள் படிப்பதற்கு ஒரு மடிக்கணினி, ஊருக்கு கதைப்பதற்கு ஒரு கைத்தொலைபேசி. நன்றாக ஆர்வத்துடன் படிக்கத் தொடங்குவோம்.

இரண்டாம் வருடம், அங்கே தான் பிரச்சினை ஆரம்பிக்கிறது. ஏனென்றால் நாம் சர்வதேச மாணவர் அல்லவா? எமது ஒரு வருட பல்கலைக்கழக கட்டணத்தில் ஊரிலே ஒரு வீடே வாங்கலாம். யாரிடமும் பண உதவி கேட்க முடியாது.

ஆனால் வட்டிக்கு பணம் வாங்கலாம். அப்போ வட்டி கட்ட வேண்டும். அதற்கு உழைக்க வேண்டும். அதற்கு மாணவர் விசா விதியை மீற வேண்டும் அல்லது கையில் பணத்திற்கு வேலை செய்ய வேண்டும் எங்கேயாவது குடியேற்ற எல்லை அதிகாரிகளிடம் மாட்டுவோமோ என்ற பயத்தில்,

இப்போ படிக்கிற நேரம் குறைந்து வேலை செய்யும் நேரம் கூடும் படிப்பில் ஆர்வம் குறையும். அதற்குள் பணம் தந்தவர் அவசரமாய் அதை கேட்கிறார் என்ன செய்வது படிப்பை விட்டு முழு நேரமும் வேலைதான். ஆக கிடைக்கிற நேரமெல்லாம் உழைக்க வேண்டியது தான். ஊரிலே இருப்பவர்களும் அடிக்கடி செலவுக்கு பணம் அனுப்ப கேட்பர் மறுக்கவும் முடியாது, பள்ளிக்குப் போகவும் முடியாது.

அப்படியே சிறிது காலத்தில் மாணவர் விசாவும் முடிந்துவிடும் திரும்பி ஊருக்கும் போக முடியாது, விசாவை நீடிப்பு செய்ய பள்ளி போயிருக்க வேண்டும், அதனால் வேறொரு கல்லூரியில் மாணவராய் பதிந்து உண்மையான போலி பத்திரங்களை பணம் கொடுத்து செய்து விசா நீடிப்புக்கு கடவுச்சீட்டை அனுப்பினால் நான் பத்திரங்கள் செய்த பள்ளியை குடியேற்ற எல்லை அதிகாரிகள் போலி பள்ளி என மூடி எனது விசா நீடிப்பு அனுமதியை நிராகரித்து விட்டார்கள்.

அப்படியும் விக்கிரமாதித்தன் போல் முயற்சியை விடாது இன்னோர் கல்லூரியில் சேர்ந்து மீளவும் விசா நீடிப்பு அனுமதியை பெறுவதற்குள் போதுமென்றாகி விடும். இப்போது கடன் இரண்டு மடங்காகி


விடும். சரி இனியாவது கடனை கட்டிவிட்டு படிப்போம் என்றால் வேலை செய்யும் போது கையும் களவுமாக குடியேற்ற எல்லை அதிகாரிகள் பிடித்து விட்டார்கள்.

இப்போது எனது விசா அனுமதியை ரத்து செய்து என்னை நாட்டுக்கு அனுப்பப் போகிறார்கள். எனது எதிர்காலம் எனது கனவுகள் நொறுங்கிற்று. இது எனது பிழையா? அல்லது மாணவர் விசா தந்தவர் பிழையா? அல்லது வளர்ந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையிலான இடைவெளியின் காரணமா? அல்லது முதலாளித்துவமா?

**- யதுசன் லண்டன்**

**படித்ததும் சுவைத்ததும்**

# கிளியின் கதை



ஆசிரியர் ஒருவர் ஆசையாய் ஒரு கிளி வளர்த்தார். அவர் மொழியாசிரியர் என்பதாலே தன் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதைப் போலவே, கிளிக்கும் சொல்லிக் கொடுத்தார். கிளியும் வேகமாகவே கற்றுக்கொண்டு வந்தது. நிலைக்கண்ணாடி முன்னால் கம்பீரமாக நின்றுகொண்டு பேசிப்பேசிப் பழகியது. ஒரு சமயம் அது ஏதோ ஒரு சொல்லைச் சரியாக உச்சரிக்காமல் போகவே, ஆசிரியர் தன் மாணவர்களுக்குத் தண்டனை கொடுப்பதைப் போலவே அந்தக் கிளியின் மண்டையில் 'நங்' என்று குட்டி விட்டார். மறுநாள் காலை கிளி கண்ணாடி முன்னால் நின்று பாஷை பழக ஆரம்பித்தது. ஆனால் அதனால் முயலவில்லை. காரணம் கண்ணாடியில் தெரிந்த அதன் பிம்பத்தைப் பார்ப்பதற்கு அதற்கே அருவருப்பாக இருந்தது. அதன் மண்டையில் இருந்த எல்லா முடியுமே உதிர்ந்து போய் வழுக்கை மண்டையாகப் போய் விட்டது. தன் முடி வளத்தை நேற்று வரை கண்ணாடியில் பார்த்து ரசித்த கிளி தனக்கு ஏற்பட்ட கதியைப் பார்த்து நொந்து வெந்துபோயிற்று.

சாப்பிடுவதையே நிறுத்தி விட்டது. வாயைத் திறந்து பேசுவதையும் நிறுத்தி விட்டது. ஆசிரியர் என்னென்ன மருந்தெல்லாமோ வாங்கி வந்து தடவிப் பார்த்தார். சிறகடித்து சுதந்திரமாய் இருந்த கிளி இப்படி ஒரு மூலையில் முடங்கிப் போய்க் கிடப்பதைக் கண்ட ஆசிரியர் எப்படியெல்லாமோ மன்னிப்புக் கேட்டுப் பார்த்தார். ஒன்றும் நடக்கவில்லை. அது பழைய நிலைமைக்கு மீண்டும் வருவதாகவும் தெரியவில்லை.

நாட்கள் ஓடின. கிளி துரும்பாக இளைத்துப் போய்க் கொண்டே இருந்தது. ஒரு நாள் மதியம் ஆசிரியரைத் தேடி இதுவரை வராத நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவரைப் பார்த்த உடனே கிளி தன் இறக்கைகளை நீளமாக விரித்து தனக்குத் தெம்பேற்றிக் கொண்டு வீடு முழுக்க இங்கும் அங்கும் 'கிரீச்', 'கிரீச்' என்று சப்தம் போட்டுக் கொண்டு கட்டுக் கடங்காமல் பறக்க ஆரம்பித்து விட்டது. அதுவும் என்ன சொல்லிக் கொண்டு பறந்தது தெரியுமா?

“ஆஹா! ஓஹோ! ஹி! ஹி! உன்னோட ஆசிரியரும் என்னோட ஆசிரிரைப் போலத் தானா? உன்னோட தலையில் குட்டி முடியில் லாமல் செய்து விட்டாரா?” என்று கிண்டலாகச் சொல்லி பறந்துகொண்டிருந்தது. அதற்குப் பிறகு அது ஒழுங்காகச் சாப்பிட ஆரம்பித்தது. அதன் தலையில் முடி வளர்ந்தது. மீண்டும் கண்ணாடி முன்னால் நின்று பேசிப்பேசி தன் மொழி ஆற்றலை வளர்த்துக்கொண்டது கிளி.

**குறிப்பு : இந்தக் கதையை வாசித்ததும் உங்கள் எண்ணத்தில் தோன்றும் கருத்துக்களை எமக்கு எழுதியனுப்புங்கள். வாழ்க்கையின் புதுப்புது அர்த்தங்களை புரியவைப்பதே கதைகள் என்பதால் உங்கள் ஆழ்மனத்து வெளிப்பாடுகளை அறியத்தாருங்கள்.**

**- ஆசிரியர்**

த.சிவசுப்பிரமணியம்

# பேராசிரியர் க.கைலாசபதி



கலை, இலக்கியம் சமுதாய முன்னேற்றத்துக்காகவே என்ற தத்துவப் பின்னணி கொண்ட, மார்க்சியக் கோட்பாட்டின் முதன்மைப் பிரதிநிதியாகச் செயற்பட்ட பெருமைக்குரியவராகப் பேராசிரியர் க.கைலாசபதி முகிழ்ந்து நிற்கின்றார். அவருடைய அனைத்து ஆய்வுகளும் அறிவுலகச் செயற்பாடுகளும் உன்னத மானிடத்தை உருவாக்கவே என்பது கைலாசபதி அவர்களின் சிந்தனையாகவும் செயற்படாகவும் விளங்கியுள்ளது. சமுதாயத்தைப் புறக்கணித்து நிற்கும் எதையும் மானிடம் புறக்கணிக்க வேண்டும். புறக்கணிக்கும் என்பது அவரின் செயல்வடிவமாக இருந்துள்ளது. 'இலக்கியம் மக்களுக்காகவே' என்ற மேலான கொள்கைப் பிடிப்புடன் நின்று இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அறிமுகமாகித் தொடர்ந்து முப்பது ஆண்டுகள் நிகழ்த்திய கைலாசபதியின் ஆய்வுகள் பெரும் அதிர்வுகளைத் தமிழ் ஆய்வுலகில் ஏற்படுத்தி நிற்கின்றன.

1933 இல் மலேசியாவில் பிறந்த கைலாசபதி அவர்கள் தொடக்க நிலைக் கல்வியைக் கோலாலம்பூரிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் பயின்றார். இந்துக் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து கல்வியை மேற்கொண்ட காலத்தில் கவிஞர் இ.முருகையனின் தொடர்பு ஏற்பட்டது. யாழ் இந்துக்கல்லூரியில் மு.கார்த்திகேசன் அவர்களின் வழிகாட்டல் பொதுவுடமைத் தத்துவத்தை கைலாசபதி அவர்களுக்கு அறிமுகப்படுத்தியது. உயர்கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியில் நிறைவு செய்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி - தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதல்தர மாணவராகத் தேர்ச்சி பெற்றார். பின்னர் பேர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலங்களில் பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், சு.வித்தியானந்தன் போன்றோர் அவருக்கு வழிகாட்டிகளாக இருந்துள்ளனர்.

பட்டதாரியாக வெளிவந்த க.கைலாசபதி அவர்கள் 1957 தொடக்கம் 1961 வரை தினகரன் பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் பின்பு அதன் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இவர் பணியாற்றிய அக்காலகட்டத்தில் ஈழத்துப் பத்திரிகைத்துறையிலும், படைப்பிலக்கியத் துறையிலும் விமர்சனத்துறையிலும் மறுமலர்ச்சி தோன்றக் காரணமாக இருந்துள்ளார். பல எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்து ஊக்குவித்த வகையிலும் அவரது பணி பெருமை பெற்றிருந்தது.

1961 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பதவியேற்றார். 1962 இல் பல்கலைக்கழக வெளியீடான 'இளங்கதிர்' இதழில் கைலாசபதி அவர்களின் **'நாடும் நாயன்மாரும்'** எனும் புகழ்பெற்ற கட்டுரை வெளிவந்தது. இக்கட்டுரையே இவரைக் கணிப்புக்குரிய ஆய்வாளராக ஆய்வுலகத்திற்கு அறிமுகப்படுத்தியது. 1963 இல் உயர்கல்விக்கான விடுமுறை பெற்று இங்கிலாந்து சென்று பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டார். அங்கு அவருக்கு

வழிகாட்டியாக மார்க்சியப் பேரறிஞர் ஜோர்ஜ் தோம்ஸன் இருந்தார். சங்கப் பாடல்களையும் கிரேக்கப் பாடல்களையும் ஒப்பீடு செய்து 'தமிழ் வீரயுகப் பாடல்' 'Tamil Heroic Poetry' என்னும் ஆய்வேட்டைச் சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். மீண்டும் 1966 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும், 1969 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பணி யாற்றி 1974இல் பல்கலைக்கழக தமிழ் இந்து நாகரிகத்துறைகளின் தலைவரானார். 1974 இல் யாழ்ப்பாணத்தில் புதிய பல்கலைக்கழகம் அமைக்கப்பெற்றபோது அதன் தலைவராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் பொறுப்பேற்றார். இந்தப் பல்கலைக்கழகத்தையும் சமுதாயத்தை யும் இணைக்கின்ற பல திட்டங்கள் இவர் காலத்தில் உருவாக்கப் பெற்றன. அவை நடை முறைப்படுத்தவும்பட்டன. 1977 அயோவாப் பல்கலைக்கழகம் படைப்பாக்க எழுத்தாளர்க் கான நிதியுதவி வழங்கி அவரை அழைத்தது. பின்னர் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் வருகைதரு பேராசிரியராகவும் பணியாற்றினார். 1978இல் சீன அரசின் அழைப்பை ஏற்றுச் சீனாவுக்கும் சென்று வந்தார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங் கம், தேசிய கலை இலக்கியப் பேரவை முதலான பல்வேறு சமூக இலக்கிய இயக்கங்களில் தம்மைப் பிணைத்துக் கொண்டவர் பேராசிரியர் கைலாசபதி. முற்போக்குச் சிந்தனைத் தளங் களில் செயற்பட்ட தமிழக இலங்கை இதழ்கள் பலவற்றோடு இவருக்குத் தொடர்பு உண்டு. சமதர்ம சமுதாயம் ஒன்றினை இலங்கையில் உருவாக்கும் நீண்டகாலக் கனவுடனும் தெளிந்த பார்வையுடனும் செயற்பட்டவர்களுள் பேராசிரி யர் க.கைலாசபதியும் ஒருவர். ஈழத்தமிழர் பண்பாடு, இலக்கியம், தேசியம் முதலியவற் றைக் கட்டமைப்பதில் தீவிர ஈடுபாட்டை கொண்டு விளங்கினார். ஈழத்துத் தமிழிலக்கியம், ஈழத் துப்பாடல்கள் ஆகிய கருத்துருவாக்கங்களுக்குப் பின்னணியாகவும் கைலாசபதி அவர்கள் திகழ்ந் தார். தமிழர் இலக்கியம், பண்பாடு, வரலாறு முதலியவற்றை மறுவாசிப்புச் செய்ய வேண்டிய கடமையும் அவருக்கு இருந்தது. தமிழ் மொழி இலக்கியப் பரப்பின் அனைத்துத் துறைகளிலும் அவர் கவனம் செலுத்தினார். கலை இலக்கிய எல்லைகளுக்கு அப்பால் அனைத்துலக அரசிய லிலும் அவர் கவனம் செலுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

இவ்வாறு பன்முகப்பட்ட ஆளுமைகளு டன் திகழ்ந்த பேராசிரியர் க.கைலாசபதி அவர் கள் மார்க்சிய வழிநின்று தமது விமர்சனங்களை முன்வைத்தார். பேராசிரியர் வானமாமலையும் இவர் வழிநின்று விமர்சனத் துறையை முன்னெடுத்துச் சென்றார் என்பது வரலாறு.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் 1953 முதல் 1982 வரை தொடர்ச்சியாக இலக்கியத் துறையில் ஈடுபாடுகொண்டு உழைத்து வந்தார். முப்பதாண்டுகால இலக்கிய வாழ்க்கையில் கைலாசபதி அவர்கள் நிகழ்த்திய சாதனைகள் பலவாகும். இருநூறுக்கு மேற்பட்ட கட்டுரை களையும் இருபது நூல்களையும் தந்தது மட்டு மல்லாது வானொலி உரைகள், நூல்களுக்கான முன்னுரைகள், அணிந்துரைகள், மதிப்புரை கள், வாழ்த்துரைகள், படைப்பிலக்கியங்கள் என ஏராளமான எழுத்துப் பணிகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

பேராசிரியர் தமது பள்ளிப் பருவத்தி லிருந்தே பல்வேறு படைப்பாக்கங்களில் கவனம் செலுத்தி வந்துள்ளார். சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம் முதலிய ஆக்கங்களைத் தந்துள்ளார். தமிழ்மணி, இந்து சாதனம், சுரபி, கிருதயுகம், பிரசண்ட விகடன், வீரகேசரி, கற்பகம் ஆகிய ஏடுகளில் அவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இலங்கை வானொலிக்காகப் பல நாடகங்களையும் எழுதியுள்ளார். தமது நெருங்கிய நண்பர்களுக்கு எழுதும் கடிதங்கள் 'கடித இலக்கிய வகைக்கு' எடுத்துக்காட்டாக அமைந்துள்ளதை அறிஞர்கள் சுட்டிக்காட்டியிருந் தமையை இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்.

கைலாசபதி அவர்கள் ஆங்கிலத்தைத் தழுவி எழுதிய 'திறந்த கல்லறை' என்ற நாடகம் வானொலியில் ஒலிபரப்புப் பெற்றதாகவும் அந்த நாடகம் சிறப்பினை உடையதாகவும் அதில் தான் நடித்துள்ளதாகவும் பேராசிரியர் தில்லைநாதன் குறிப்பிட்டுள்ளார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்தில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை எழுதிய நாடங்களில் கைலாசபதி அவர்கள் நடித்துள்ளார். தொடக்க காலங்களில் இதுபோன்ற படைப்பாக்கங்களில் ஆர்வம் கொண்டிருந்த இவர் பின்னர் திறனாய்வுத் துறையில் ஆர்வம் கொண்டவரானார். ஒப்பியல் ஆய்வுத்துறையில் கைலாசபதி அவர்களின் ஆய்வுகள் புதிய கோணத்தில் முக்கியத்துவம் பெற்றவைகளாக அமைந்திருந்தன.

கைலாசபதி அவர்களின் படைப்புகள் ஆய்வுகள் என்று நோக்கும் போது அவர்கள் எழுதி வெளியிட்டனவாகப் பட்டியலிடப்பெற்ற 238 கட்டுரைகளில் 60க்கும் மேற்பட்ட கட்டுரைகள் ஈழம் பற்றியவை. ஈழத்து ஆக்கங்கள் என்று பொதுமைப்படப் பேசினாலும் அவற்றில் ஆய்வுகள், படைப்புக்கள், இதழியல், கல்வியியல், பண்பாட்டியல், சமயம், சமூகம் முதலான பல்வேறு கூறுகளும் அடங்குவதை அவதானிக்க முடிகிறது. இக்கூறுகள் யாவற்றினும் ஊடாக ஈழத்தேசியம் அடிப்படையாகி இருப்பதை உணரமுடிகின்றது. கைலாசபதி அவர்களின் தமிழிலக்கிய ஆய்வுகளுக்கும்கூட இத்தேசிய உணர்வே அடிப்படையாகி உள்ளது.

கைலாசபதி அவர்கள் இதழியல் துறையில் செய்த சாதானைகளாக அறிஞர்கள் மூன்றினைச் சுட்டியுள்ளனர். முதலாவதாக ஈழத்து எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் அவர் பெற்றுத் தந்த மரியாதையையும் ஊக்கத்தையும் குறிப்பிட வேண்டும். இரண்டாவதாக ஈழத்து வாசகர்களின் வாசிப்புத் தரத்தை மாற்றியதையும் மேம்படச் செய்ததையும் கூறுதல் வேண்டும். மூன்றாவதாக ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்று சிறப்பாகச் சுட்டிக்காட்டத்தக்க ஒரு இலக்கிய வளர்ச்சியை உருவாக்கியதையும் கூறவேண்டும். தாம் வாழ்ந்த காலம் முழுவதும் வடக்கு கிழக்கு மலையகம் வாழ் தமிழர்கள் அனைவரின் பண்புகள்துலக்கமுறும் வகையிலும் மண்வாசனை மிளிரும் வகையிலும் இலக்கியங்கள் வெளிவரத் துணைபுரிந்துள்ளார். நவீன ஈழத்துத்தமிழ் இலக்கியத்தின் முழுப் பரிமாணத்திலும் கவனம் செலுத்திய கைலாசபதி அவர்கள் ஒவ்வொரு பகுதி மக்களின் வாழ்க்கை முறையையும் இலக்கியமாக்கும் படைப்பாளிகளை இனம்கண்டு அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து எழுத வைத்தார்.

கல்வி என்பது ஒரு நாட்டின் இயற்கை வளங்களுடனும் மக்களின் தேவைகளுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு அவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதாக இருத்தல் வேண்டும் எனக் கைலாசபதி அவர்கள் விரும்பினார். இதுவே அவரின் கல்விக் கொள்கையாகவும் இருந்தது. யாழ்ப்பாணப் பல்லைக்கழகம் அமைத்த போது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் மண் வளம், பயன்பாடு பாதுகாப்புத் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடிய பல்கலைக் கழகமாக அது அமைய வேண்டும் என வலியுறுத்தினார். யாழ்க் குடாநாட்டில் உள்ள உவர் நிலம், விவசாய உற்பத்தி இவற்றைக் கருத்திற் கொண்டே பட்டதாரிகளை உருவாக்கவும் பாடுபட்டார்.

தமிழ்இலக்கியம் குறித்துப் பரவலாகவும் ஆழமாகவும் ஆய்வுகளை மேற்கொண்ட வேளையில் பாரதியைப் பற்றியும் நாவல் இலக்கியம் பற்றியும் விசேடமான கரிசனையைக் கொண்டிருந்தார். பிற்காலத்தில் பாரதியியல் ஆய்வுக்கு உந்துசக்தியாக இருந்து செயற்பட்டார். பல்லைக்கழகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பாரதியியல் ஆய்வாளர் பலரையும் உருவாக்கியுள்ளதையும் குறிப்பிட்டுக் கூறல் வேண்டும்.

பாரதியியல் ஆய்வுக்கு அடுத்தபடியாக நாவல் இலக்கிய ஆய்வுகள் முதன்மை பெற்றிருப்பதை அறியமுடிகிறது.1968ஆம் ஆண்டில்

**'தமிழ் நாவல் இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள்' நூல்** இவரால் வெளியிடப் பெற்றது. இலங்கைப் பல்கலைக் கழகத் தேர்வை முடித்து விட்டு ஓய்வில் இருந்த காலங்களில் படிக்கப் பெற்ற ஏராளமான நாவல்களே பின்நாளில் நாவல்பற்றிய ஆய்வை நிகழ்த் தத்துணை செய்துள்ளன. 1954 ஆம் ஆண்டில் கைலாசபதி அவர்கள் தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சி யும் என்னும் கட்டுரைத் தொடர் ஒன்றை வீரகே சரி இதழில் எழுதியுள்ளார். 'தமிழ் நாவலின் தோற்றத்தையும் வளர்ச்சியையும்' இன்றியமை யாத வரலாற்றுச் செய்திகளுடன் இணைத்துப் படிமுறை வளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டுவதே இவரது நாவல் ஆய்வுகளில் இழையோடியுள்ள மையை எடுத்துக் காட்டலாம். ஐரோப்பியரின் வர வால் கிடைத்த வடிவமே நாவல் என்ற நிலையில் இருந்து தமிழ்க் காவிய மரபின் மறுவடிவமே நாவல் என்ற ஆய்வுப் போக்கை இவரது கட்டு ரைகளில் காணமுடிகின்றது. தமிழ் இலக்கியங் களை முன்நிறுத்துவதில் அவருக்கு நிகர் அவரே!

கைலாசபதி அவர்களின் பண்டைய இலக்கிய ஆய்வுகளில் சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், சோழர்கால இலக்கியம் ஆகியன முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. இந்த வகையில் **'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்', 'அடியும் முடியும்', 'ஒப்பியல் இலக்கியம்', 'தமிழ் வீரயுகப் பாடல்கள்'** போன்ற தொகுப்புக்கள் கவனத்தை ஈர்க்க வல்லன. மேலும் **'அழிவும் ஆக்கமும், அறமும் அரசியலும்', 'நாடும் நாயன்மாரும்', 'பேரரசும் பெருந்தத்துவமும்', 'தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி', 'அடியும் முடியும்'** எனும் கட்டுரைகளும் சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளன.

அனைத்துலக அரசியல்சார் நிகழ்ச்சி களிலும், உள்நாட்டு அரசியலும் ஒடுக்கப்பட்ட மக்கள் பக்கமாவும், அவர்களது போராட்டங்கள் பக்கமாகவும் நின்று செயற்பட்டுள்ளார். இதனை அவரது பல்துறைசார்ந்த நடவடிக்கைகளிலும் அவரது அரசியல்சார் நடவடிக்கைகளிலும் இருந்து அறிய முடியும். இரண்டாம் உலகப் போரில் பாசிசம் பெற்ற வீழ்ச்சியிலிருந்து எழுச்சி பெற்ற தேசிய விடுதலை இயக்கங்களோடு மார்க்சியமும் பெரும் எழுச்சி பெற்றது. உலகம் முழுவதிலும் உள்ள முற்போக்குவாதிகள் இத்தத்துவத்தால் கவரப்பட்டனர். அவர்களுள் பேராசிரியர் க.கைலாசபதியும் ஒருவர். பல்கலைக் கழக மாணவர் பருவத்திலிருந்து அவர் மறை யும் வரை மார்க்சியவாதியாகவே திகழ்ந்தார். மார்க்சியத்தை அதன் வளர்ச்சியான லெனினிச மாகவும் சமகாலத்தில் மற்றொரு வளர்ச்சியான மாசேதுங் சிந்தனையாகவும் ஏற்றுச் செயற்பட்டு வந்த மார்க்சியவாதியாவார். சமத்துவ சமூகத்தை உருவாக்க கலை இலக்கியத்துவத்தை நெறிப் படுத்தலில் கைலாசபதி அவர்கள் பெரும் பங்காற் றியுள்ளார். தேசிய எழுச்சிக்கு இலக்கியத்தை ஊடகமாகப் பயன்படுத்தி மக்கள் நலன்சார்ந்த அரசியலை அவர்கள் நிகழ்த்தியுள்ளார். இவ் வாறு பல்முகப்பட்ட ஆளுமைகளை உடைய பேராசிரியர் கைலாசபதி தமது நாப்பத்தொம்ப தாம் அகவை யில் 1982 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் ஆறாம் நாளில் இவ்வுலக வாழ்வை நீத்தார். தமிழ் இலக்கிய வரலாறு இருக்கும் வரை அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார். ■

## அட்டைப்பட விளக்கம்

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடத்திய இரா உதயணன் இலக்கிய விருது விழா - 2017; அன்று 'உயர் தமிழ் இலக்கிய விருது' இந்தியப் பேராசிரியர் எச்.பாலசுப்பிரமணியத்துக்கு வழங்கப்பெறுவதையும், விழாவுக்கு வருகைதந்த உள்நாட்டு, வெளிநாட்டு அதிதிகளையும், வவுனியூர் இரா உதயணன் ஏற்புரை வழங்குவதையும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை ஒட்டிய அழகுமிகு காட்சிகளையும் 'பொங்கல் சிறப்பிதழ்' அட்டையில் தரிசிக்கலாம்

# கறுப்பும் வெள்ளையும்

சின்னத்துரையரும் பொன்னம்மாவும் தங்கள் மகனுக்கு ஒரு பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்து வைக்க எண்ணினர். சின்னத்துரையர் தனது பக்கத்துத் தோட்டக்காரர் பொன்னுத்துரையின் மகளை மகனுக்குச் செய்து வைத்தால் என்ன என்று தனது மனைவி பொன்னம்மாவிடம் சொல்லுகிறார்.

"ஓம் அப்பா நல்ல இடம். சொத்துச் சுகங் களும் இருக்கு. இவன் தம்பி சம்மதிக்கிறானோ தெரியாது."

"பிள்ளை கறுப்பிதான். ஆனால் சாந்தமான முகம்பாரும். நல்ல குணமானபிள்ளை. மிதிச்ச இடத்துப் புல்லுச் சாகாது. தாய் சின்னம்மாவை ஒரு வேலையும் செய்ய விடாமல் தானே எல்லா வேலைகளையும் செய்யும். குடும்பப் பொறுப்பான பிள்ளை. எங்கள் குடும்பத்துக்குள் வந்து சேர்ந்து விட்டால் எங்களுக்கும் ஆறுதல் இருக்கும்."

"நீங்கள் சொல்லுகிறது உண்மைதான் பாருங்கோ. தம்பியையும் ஒரு வார்த்தை கேட்டுப் பார்ப்பம்"

"உங்க மோட்டச்சயிக்கிள் சத்தம் கேட்குது. தம்பி வாரான் போல"

"ஓம் அப்பா தம்பிதான் வந்துவிட்டான்"

மகன் மன்மதன் கால்முகம் கழுவி விட்டு வந்து தாயார் கொடுத்த தேனீரைக் குடித்தபடி அன்று வெளிவந்த பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு இருந்தான்.

தாய் பொன்னம்மா அருகில் வந்து இருந்தபடி மகனைப் பார்த்து "தம்பி எங்கட தோட்டத்துக்குப் பக்கத்தில தோட்டம் செய்கிற பொன்னுத்துரையர் தன்ர மகளுக்கு உன்னைக் கேட்டு வந்தவர். அப்பரும் நானும் ஓம் எண்டு சொல்லிப்போட்டம்.

"அம்மா நான் உங்களிட்டையும் அப்பரிட் டையும் எனக்குக் கல்யாணம் கட்டிவைக்கச் சொல்லிக் கேட்டனானோ?

"இல்லையடா தம்பி நாங்கள் கண்ணை மூடுவதற்கு முந்தி பேரப்பிள்ளைகளைக் கண்டிடுவம் என்ற ஆசையில்த்தான் இந்த முடிவுக்கு வந்தனாங்கள்.

"அம்மா பொன்னுத்துரை மாமாவின்ர மகள் சுமதியை எனக்குத் தெரியும். அவ படிக்கிற காலத்தில பெடியள் கரிக்கட்டி எண்டுதான் கூப்பிடுவாங்கள். எனக்கு அந்த கறுப்பி வேண்டாம். அழகான நல்ல நிறமான பெட்டையாய்ப் பாருங்கோ கட்டுகிறன்."

"தம்பி கறுப்புச் சிவப்பில என்ன இருக்கு குணமான பிள்ளதான்ரா குடும்பத்துக்கு நல்லது. நீ ஓமெண்டால் வாறமாதமே கல்யாணத்தை வைச்சிடலாம்."

"அம்மா எனக்குப் பிடிக்கேல்ல எண்டால் விட்டு விடுகிறதுதானே. ஏன் கரைச்சல் கொடுக்கிறியள்."

"சரிமேனே நாங்கள் உன்ர வருங்கால வாழ்வு நல்லாயிருக்க வேணுமெண்டுதான் சொன்னாங்கள். உனக்கு விருப்பமில்லாட்டிக் கட்டாயப்படுத்தமாட்டம்.

* * *

"இஞ்சரெணஆத்த நான் எங்கட சுன்னா கம் கந்தையர் என்னை ஒருக்கா வரட்டாமெண்டு

சொல்லியனுப்பினவர். நான் போய்விட்டு வாறன். துலாச் செய்யிறத்துக்கு எங்கட பின்வளவுக்குள் இருக்கிற பனை ஒன்றைத் தறிக்க தவத்தான் வாறனெண்டு சொன்னவன். வந்தால் நல்ல வயிரப்பனையாய்ப் பார்த்து தறிக்கச் சொல்லும்."

"சரி அப்பா நான் சொல்லுகிறன். நீங்கள் சுணங்காமல் வாங்கோ".

தவத்தானும் வேறு இருவரும் கோடரிகள் கைக்கத்தி கயிறுகளுடன் பொன்னுத்துரையர் வீட்டுக்கு வந்ததைக் கண்டதும் சின்னம்மா அவர்களிடம் சென்று "ஐயா சுன்னாகம் போய் விட்டார். உங்களை நல்ல வைரமான பனை யாய் பார்த்துத் தறிக்கட்டாம்."

"சரி நாங்கள் பார்த்து வெட்டுகிறம்"

"தவத்தான் இண்டு மரத்தில குருத் தோலையும் வெட்டித் தாரும். இப்ப பழையபடி பெட்டி, கடகம், உமல் பை எண்டு பாவிப்பதற்குச் செய்ய வேண்டியிருக்கு. பொலித்தீன், பிளாஸ்ரிக் சாமான்கள் பாவிக்கக் கூடாதென்று சட்டம் வந்திருக்காம். எங்கடை பனையோலைச் சமான்களுக்கு எப்பவும் மவுசுதான்.

"சரி கதைக்கேக்கதை உன்ர மகள் யூனிவசிற்றிக்குப் போய் படிச்சவள் அல்லே. இப்ப என்ன செய்கிறாள்."

"படிச்ச பல்கலைக்கழகத்தில் தான் உதவி நூலகராக வேலை பார்க்கிறாள். மகனும் பிரதேச செயலகத்தில் பிளானிங் ஒவ்வீசராக இருக்கிறான்.

"உமக்கென்ன இரண்டு பிள்ளையளும் உழைக்கினம்"

"பிள்ளையள் உழைச்சாலும் நாங்கள் எங்கட சொந்தத் தொழில விடமுடியுமோ."

"நீ சொல்லுறதும் சரிதான். 'தாயும் பிள் ளையும் எண்டாலும் வயிறும் வாயும் வேறை' எண்டு சும்மாவா சொல்லியிருக்கினம். சரி நீங்கள் போய் வேலையைத் தொடங்குங்கோ. தேத்தண்ணி போட்டுக் கொண்டுவாறன்.

* * *

பொன்னுத்துரையர் வீட்டுக்கு வந்ததும் மனைவி சின்னம்மாவை அழைத்து பக்கத்தில் இருக்கச் சொன்னார்.

"என்ன சந்தோஷமாக இருக்கிறியள் விசயத்தைச் சொல்லுங்கோவன்?"

"சுன்னாகம் கந்தையர் தன்ர மகனுக்கு எங்கட சுமதியைக் கட்டிவைக்க விரும்புகிறாராம். எங்கட சின்னத்துரை அண்ணரும் கந்தைய ரிட்டை எங்களின்ர பிள்ளையைப் பற்றி நல்லாகச் சொல்லி கட்டாயம் செய்யுங்கோ எண்டு சொன்ன வராம். கந்தையற்றை மகனும் நல்ல பெரிய உத்தியோகமாம். முல்லைத்தீவில் பிதேச செயலா ளராக இருக்கிறாராம்.

"ஏதோ என்ர பிள்ளையின்ர நல்ல காலம் கடவுள் அருள் புரிஞ்சிருக்கிறார்."

"எல்லாம் சின்னத்துரை அண்ணற்றை உதவியால தான் சரி வந்திருக்கு. நான் ஒருக் கால் அவரைக் கண்டு சொல்லிப்போட்டு வாறன்."

"அப்பா இப்ப சின்னத்துரை மாமா வீட்டை போகாதேங்கோ. அங்க ஒரே ஒப்பாரியாயிருக்கு"

"என்ன சங்கதியாம்"

"சின்னத்துரை மாமாவின் மகன் மன்மதன் தவத்தான்ரை மகளைக் கூட்டிக்கொண்டு கொழும்புக்குப் போய்விட்டாராம். தவத்தான்ர மகள் நல்ல வடிவான பெட்டை இருவரும் ஒருவரையொருவர் விரும்பி இருந்தவையாம்."

"சரி என்னெண்டுபோய்ப் பார்த்திட்டு வாறன்" எண்டு சொல்லி பொன்னுத்துரையர் சின்னத்துரையர் வீட்டுக்குச் செல்லுகிறார்.

சின்னத்துரையர் வீட்டில ஊர்ச்சனம் எல்லாம் நின்று ஒருவருக்கொருவர் ஏதோ குசுகுசுத்தபடி விடுப்புப் பாக்கினம். சின்னத்துரை யற்ற மனிசிக்காறியும் ஒரு மூலையிலிருந்து அழுதபடி இருக்கின்றார்.

பொன்னத்துரையைக் கண்டதும் சின்னத்துரையர் வந்து பொன்னுத்துரையரின் கைகளைப் பிடித்துக் கொண்டு என்ர மகன் சொல்லாமல் கொள்ளாமல் இப்படிச் செய்து போட்டானே என்று சொல்லி வேதனைப்பட்டார். என்ர மகன் தவத்தான்ர மகளை கட்டுகிறதில எனக்குப் பிரச்சினையில்ல. ஆனால் பெட்டை யைக் கூட்டிக்கொண்டு ஓடிப்போட்டான் எண்டு உலகம் கதைக்கேக்க அதைக் கேட்க வேதனை யாயிருக்கு.

"சரியண்ண கொழும்புக்குத்தானே போய் விட்டினம். இஞ்ச வந்துதானே ஆகவேண்டும்."

"அவை எனி இஞ்ச வரமாட்டினம் திட்டம் போட்டு வேலைமாற்றம் பெற்றுத்தான் போயிருக் கினம்"

"எனியோசிச்சு என்னண்ண செய்கிறது. சின்னம்மா அக்காவைத்தான் யோசிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கோ ஏதாவது தேவையெண் டால் சொல்லியனுப்புங்கோ வாறன்.

வீட்டுக்கு வந்ததும்பொன்னுத்துரையர் தனது மனைவி சின்னமாவுக்கும் மகள் சுமதிக் கும் சின்னத்துரையர் வீட்டு விபரங்களைச் சொல்லுகிறார்.

சின்னம்மாவும் சுமதியும் சின்னத்துரை யர் வீட்டுக்குச் செல்லுகின்றார்கள். அங்கு சின்னத்துரையரும் மனைவி பொன்னம்மாவும் பறிகொடுத்த நிலையில் யோசித்துக் கொண்டிருக் கின்றார்கள். வீடு ஒழுங்காக இல்லை. சமையல் சாப்பாடு இல்லை. இதைக் கண்ட சுமதி, வீட்டைத் துப்பரவு செய்து விட்டு இருவருக்கும் தேத்தண்ணி போட்டு குடிக்க வைத்துவிட்டு சமையல் வேலை யில் கவனத்தைச் செலுத்த, சின்னம்மா இருவருக்கும் ஆறுதல் வார்த்தை கூறிக் கொண்டி ருந்தார்.

சுமதி சமைச்சு முடிச்சு இருவருக்கும் கோப்பையில் சாப்பாட்டைப் போட்டு வந்து கொடுத்து கைகழுவ செம்பில் தண்ணியும் கொண்டு வந்து கொடுத்து "மாமா சாப்பிடுங்கோ மாமி சாப்பிடுங்கோ" என்று கூறியபடி அருகில் இருந்து இருவரையும் பார்த்துக்கொண்டிருந் தாள். இருவரின் கண்களிலிருந்தும் கண்ணீர். ஓடிச் சென்று ஒரு துணியை எடுத்து வந்து இருவரின் கண்ணீரையும் துடைத்து விட்டாள் சுமதி.

வீட்டு வாசலில் கார் ஒன்று வந்துநின்றது. கந்தையரும் அவர் மகனும் வீட்டுக்குள் வருகி றார்கள். சின்னத்துரையர் எழுந்து நின்று இருவரையும் வரவேற்று கதிரையில் அமரச் செய்தார்.

"பிள்ளை சுமதி தேத்தண்ணி கொண்டு வாங்கோ" சுமதி கந்தையருக்கும் மகனுக்கும் தேத்தண்ணியைக் கொண்ட வந்து கொடுத்தாள்.

"சின்னத்துரையர் உங்களுக்கு இப்படி ஒரு பிள்ளை இருக்கக் கூடியதாக பொன்னுத்துரை யின்ற மகளை ஏன் செய்யச் சொன்னனிங்கள். எனக்கும் தம்பிக்கும் உங்கட மகளை நல்லாய் பிடிச்சிருக்கு. இந்தப் பிள்ளையைச் செய்யலாமா அப்பா என்று என் மகன் கேட்கிறான். பொன்னுத்துரையர் கோபிக்கமாட்டாரே."

"கந்தையா அண்ணை பொன்னத்துரை யற்ற மகள்தான் இவ. எங்களுக்கும் அவ பிள்ளைதான். உங்கள் விருப்பம்போல் எங்கள் பிள்ளையை உங்கள் மகனுக்குத்தான் தருவம்"

சுமதி கந்தையருடைய மகன் சாந்தனைப் பார்த்தாள். அவரும் சுமதியைப் பார்த்துச் சிரித்தார். கண்களாலே இருவரும் கதைத்துக் கெண்டனர்.

**- இணுவை வசந்தன்**

# போர்முனையை புறந்தள்ளும் ஏர்முனை!



கண்ணம்மா கண்ணம்மா
கலங்காதே என் மகளே
பொன் விளையும் பூமியிலே - நாம்
புவியாள்வோம் நாளையம்மா!

சேற்றிலே கால் புதைய
நாற்று நட்டோம் நாங்களம்மா - அவை
காற்றிலே ஆடுவதை - நீ
கண்குளிர பார்மகளே!

புழுதியிலே நாம் வீசி
போட்டு வைத்த நெல்லுமணி
வான் மழையில் குளித்தெழுந்து
வானம் பார்த்து சிரிக்குது பார்

நாம நட்ட பயிருக்குள்ளே
நாச கார களைமுளைத்து
நெற்பயிராய் வேஷமிட்டு
நிமிர்ந்து நின்று ஆடுதுபார்

களத்தில் நாம இறங்கிடுவோம் - அந்த
களைகளை உடன் பறித்தழிப்போம்
சமுதாய வயலிலும் இந்த
சங்காரம் வேண்டுமடி!

பச்சைக் கதிர் மணிகள்
காற்றி லாடும் அழகைப்பார்
பால்கட்டி நெல் மணிகள்
பண்பாடும் ஓசையைக் கேள்

முற்றித் தலை சாய்ந்து - நிலம்
முத்தமிடும் கதிர் மணிகள்
அறுவடைக்கு வந்தோமென
ஆலோலம் பாடுது பார்.

வெட்டரிவாள் கையிலேந்தி
வெட்டிக் கதிர் குவிப்போமடி
பட்ட துயர் எல்லாமே
பதர்போலே மாயுமடி

மலைபோல குவியட்டும்
மாண்புடைய நம் உழைப்பு
ஏது நிகர் இங்கு உண்டு - நம்ம
ஏர்முனைக்கு முன்னாலே!

**- ஷெல்லிதாசன்**



# காலம் கடந்து நிற்கும் படைப்புகள்

எழுத்துக்களம், இன்றைய காலகட்டத்தில் விரிவுபெற்றிக்கிறது என்பதை எண்ணி நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இலத்திரனியல் ஊடகங்கள் வழியான எழுத்தாக்கங்கள் ஒரு புதிய தளத்திற்கு முன்னெடுத்துச் சென்றுள்ளமை ஆரோக்கியமான வளர்ச்சி என்றும் சொல்லாம். ஆனால் எழுத்துக்கள் மீதான வீரியத்தன்மை பற்றி நிறையச் சிந்திக்க வேண்டியுள்ளது. எழுத்துக்கள் காலத்தின் பதிவாக இருக்க வேண்டுமேயொழிய கடமைக்கான பதிவாக அமைத்தல் கூடாது.

இணையப் பக்கங்களின் எழுத்துக்களுக்கு உலகளாவிய வரவேற்புக் கிடைக்கிற வேளை, அதனூடாக பிரச்சினைகளும் வந்த வண்ணமே இருக்கின்றது. முழுமையாக சிரத்தன்மையுள்ள படைப்புக்களை எத்தனை எண்ணிக்கையானவர்கள் பதிவிறக்கம் செய்கிறார்கள் என்பதும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. சிலர் என்ன எழுதுகிறார்கள் என்பதே புரியாமல் தடுமாற்றமான கருத்துக்களை எழுத்துக்களாக பதிவு செய்திருக்கிறார்கள். இச்சூழ்நிலையில் அநேகம் பேர் எழுதுவதற்குக் கருத்துக்களைத் தேடி இணையத்தையே நாடி ஓடுகிறார்கள். அதிலே இருப்பவை சரியான பதிவா சரியான கருத்தா என்று சிந்திக்காமல் அவற்றைப் பயன்படுத்துவது வருந்தக் கூடிய செயற்பாடாகும்.

இணையத்தில் இருக்கும் எழுத்துக்கள் எல்லாம் உண்மையானவை என்று எப்படி நம்புவது. இன்று நம்மவர்கள் இணையத்தை நம்பியே இயங்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டு விட்டோம். சுயமாகச் சிந்தித்து எழுதுவதற்கு முயலாமல் இணையத்தைத் தேடி அலைகின்றோம். இன்று ஒரு படைப்பை உருவாக்க வேண்டுமானால் உட்கார்ந்து சிந்திக்க வேண்டிய அவசியமேயில்லை. இணையத்தில் அங்கும் இங்கும் தேடி, வெட்டி ஒட்டினாலே போதும் படைப்பு ஊருவாகிவிடும். இந்தச் செயற்பாடு நடத்துகொண்டுதான் இருக்கிறது என்ற உண்மையை மறுக்க முடியாது.

தொடர்ந்து புத்தகங்களை வாசிக்காமல் இணையப் பக்கத்தை வாசிப்பவர்களை எளிதில் கண்டு கொள்ள முடியும். சில இதழ்களில் கூட இணைத்திலிருந்து பெறப்படும் கட்டுரைகளைப் பிரசுரிக்கிறார்கள். இதில் சரி, தவறு என்பது பற்றி அபிப்பிராயம் சொல்ல முயலவில்லை. ஆனால் ஒரு சிறந்த படைப்பை உருவாக்க நாம் ஏன் எமது ஆற்றலைப் பயன்படுத்த முயலவில்லை என்பதே எம்முன் எழுந்துள்ள கேள்வி.

நவீன தளத்தில் இயங்கத் தொடங்கி விட்டோம். இதை மற்றவர் ஒருவர் எழுதியதைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவதால், நாம் சிந்தனையாற்றல் இல்லாத சோம்பேறிகளாக இருப்பதை ஒத்துக் கொண்டே ஆகவேண்டும்.

புதிய புதிய சிந்தனைகள் தானே வளர்ச்சிக்கு உரமிடும். அதைவிடுத்து, ஏற்கனவே பதிவு செய்ததை மீண்டும் பயன்படுத்துவதால் மூளைக்கு வேலை கொடுக்காமல் மழுங்கடித்துக் கொள்கிறோம் என்பதுதானே உண்மை. முழுக்க முழுக்க இணையத்தை மட்டுமே நம்பி எழுத முயற்சித்தோமானால் அந்தப் படைப்பு தனித்துவம் இல்லாததாகிவிடும்.

வாசிப்புத் தேடல் ஒரு மனிதனை அறிவுள்ள மனிதனாக்கும். நூல்களின்பால் வாசிப்பை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளும் புதிய கருத்தாடல்களின் மூலம் உருவாக்கம் பெறும் படைப்புக்கள் தான் காலம் கடந்தும் நின்று வீரியம்பெறும். இதைத் தான் நாம் நம்பிக்கையுடன் வரவேற்கின்றோம்.

இணைய வசதிகள் அற்ற காலத்தில் தோன்றிய படைப்புக்கள் தானே இன்றும் தன்னிலை மாறாமல் தனித்துவமாக நிற்கின்றன. திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியன இன்றும் தனித்துவத்தைக் கட்டிக்காக்கவில்லையா? பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டையாரை நாம் என்ன மறந்து விட்டோமா?

எத்தனை நவீனங்கள் வந்தாலும் இவற்றுக்கு இணையாக எவற்றை நாம் கோடிட்டுக்காட்ட முடியும். இணையம் ஒரு தகவல் பலகை அவ்வளவுதான். அதையே முழுமையாக நம்பாமல் புதிய கோணத்தில் சிந்திக்கப் பழகுவோம். உயிர்புள்ள படைப்புக்களை சமுதாய முன்னேற்றம் கருதி உருவாக்குவோம்.



**- ந.சந்திரசேகரன்**

■

**இப்படியும் வேடிக்கை மனிதர்கள்**

## " பலவேடிக்கை மனிதரைப் போல நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ!"

சில சில்லறைகள் விபரத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், மலையுடன் மோத - சில புல்லுருவிகளின் ஏவல்கள் காரணமாக இருப்பதை அறிந்து அவர்களுக்காகப் பரிதாபப்படுகின் றேன். கேள்வியும் நானே! விடையும் நானே! துணிவின்றி அப்பாவிகளை அம்பலத்துக்குக் கொண்டு வந்து பொம்மலாட்டம் காட்டப்படுகின்றது.

ஒன்றுமே தெரியாதவர்கள் எப்படி, அப்படியாக எழுதமுடியும் என்பதை எழுதிக் கொடுத்தவர் கள் வாசகர்களை ஏமாற்றலாம். ஆனால் உண்மையை எந்தச் சக்தியாலும் மூடி மறைத்துவிட முடியாது? காலம் அவர்களுக்குப் பதில் சொல்லியே தீரும். இது யாருக்காக? என்று 'தாயக ஒலி' வாசகர்களாகிய நீங்கள் கட்டாயம் கேட்பீர்கள். மன்னிக்கவும், இது உங்களுக்காகவல்ல! என்பதே உண்மை.

**- பிரதம ஆசிரியர்**

## பேனாமுனையில் எழுத மறந்த செய்தி...

வயது போகப் போகச் சிலருக்கு அறளை பேருது என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். கண்டபடி கதைப்பார்கள். கண்டபடி ஏதோ எழுதுவார்கள். இதுவும் ஒரு வகை மனநோய் என்று உளவியலாளர்கள் சொல்லுவார்கள். இவர்களையும் மனநோயாளர் பட்டியலிலே இணைத்துக் கொள்ளுவோம் என்று சொல்லுவது பொருந்துமா? சிந்திக்கத் தெரிந்தவர்கள் சிந்தித்துச் சொல்லுங்கள்.

**- ஆசிரியர்**

# விடியுமா?

***வேலையற்ற பட்டதாரிகள் மாவட்ட ரீதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதை தொலைக்காட்சி வாயிலாகவும் பத்திரிகை வாயிலாகவும் அன்றாடம் கண்டுவந்த சின்னத் தம்பியருக்கு மனதில் ஒரு சோகம். பாவம் இந்தப்பிள்ளைகளை பல்கலைக்கழகம் அனுப் பிப் படிப்பிக்க அவர்களின் பெற்றோர் எவ்வளவு அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்க வேண்டும் என்று நினைக்கும் போது தான் அவரின் சோகம் நியாயமானதுதான் எனப்பட்டது. சின்னத் தம்பியருக்கு இரண்டுபிள்ளைகள். இரண்டு பேரும் பட்டதாரிகள். அவர்களுக்கும் வேலை கிடைக்கவில்லை. பிள்ளைகள் சோர்ந்து போன வேளைகளில் அவர்களுக்கு உந்துசக்தியாக இருந்து தொடர்ந்தும் படிப்பதற்கான உற்சாகத் தைக் கொடுத்தார். அதன்படி மகன் அரவிந்தனும் மகள் பாமினியும் மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் இணைந்து கணக்கியல் டிப்ளோமா கற்கை நெறியைத் தொடர்ந்தனர்.***

இந்த முன்னுரையுடன் 'விடியுமா' என்னும் கதை தொடர்கிறது.

"பாறுவதம் அக்கா சின்னத்தம்பி அண்ணர் நிக்கிறாரோ?"

"ஏனடி பிள்ளை கேட்கிறாய்?" மழையுக் குள் நனையாமல் முதல் வீட்டுக்குள்ள வா"

"இது என்ன மழையாக்கா? எத்தனை மழையுக்குள் நனைஞ்சு நிற்கிறம். என்ர அவர் அண்ணணிடம் கேட்டுவரச் சொன்னவர் அதுதான் வந்தனான்."

"என்ன விசயம் எண்டு சொல்லன் மங்களம். ஏன் எனக்குத் தெரியக்கூடாதா?"

"இல்லை அக்கா வந்து..."

"என்ன வந்து, போய் எண்டு சொல்லு வதை விட்டுப் போட்டு உன்ர புருசன் கேட்டதைச் சொல்லன்"

"இல்லை அக்கா எங்கடை மகன் சாந்தன் சும்மாய் வீட்டில இருக்கிறான். அதுதான் சின்ன தம்பி அண்ணையின்ர தோட்டக் காணியைக் குத்தகைக்கு எடுத்துச் செய்யத் தருவாரோ எண்டு அவர் கேட்கச் சொன்னவர். அதுதான் வந்தனான்.

"மங்களம் உன்ர மகன் சாந்தனும் பட்ட தாரியல்லோ. ஏன் அவனைத் தோட்டம் செய்ய வைக்கிறியள்"

"என்னக்கா செய்கிறது. நாலுவருசமாய் வேலைக்கு அலைஞ்சு பைத்தியம் பிடிச்சவன் மாதிரித் திரிகிறான். அதுதான் தோட்டத்தைச் செய்யவிடுவம் எண்டு எண்ணினம்"

"சாந்தனைத் தொடர்ந்து படிக்க விட்டி ருந்தால் அவன் நல்ல நிலைக்கு வந்திருப்பா னல்லோ?"

"நாங்கள் இரண்டு பேரும் கூலிவேலை செய்து உழைச்சு கடன்பட்டுத்தான் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிப் படிப்பிச்சனாங்கள். பட்ட கடனும் வட்டியும் கட்ட அவர் படும்பாடு... என்று சொல்லி அழத் தொடங்கிவிட்டாள்.

மழையும் சோ... என்று பெருமழை யாகப் பெய்யத் தொடங்கியது. இடிமுழக்கம் காதை அடைக்க மின்னல் கண்ணைப் பறித்து நின்றது.

மங்களத்தின் மனதிலும் இடிமுழக்கம். கவலை வாட்ட கண்கள் கண்ணீரைச் சொரிந் தன. மழைவிடுவதாக இல்லை.

"எடி பிள்ள மங்களம் இந்தத் தேத்தண் ணியைச் சுடச்சுடக் குடி, தேகத்துக்குத்தென்பா யிருக்கும் என்று சொல்லி தேத்தண்ணிக் கோப் பையை மங்களத்தின் கையில் கொடுத்தார் பறுவதம்.

புகைஞ்சு கொண்டிருந்த வயிற்றுக்கு தேத்தண்ணி இதமாக இருந்தாலும் மனச்சுமை இறங்கவில்லை.

"வேலையில்லாப் பட்டதாரிகள் சத்தியாக் கிரகமும் உண்ணாவிரதமும் இருந்து பெரும் கஷ்டப்படுவதாக இவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். எனக்கும் பிள்ளைகளை நினைக்கக் கவலையாக இருக்கும்." பறுவதம் சொல்வதைக் கேட்டு பார்த்துக் கொண்டிருந்த மங்களத்தின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

"ஏழையளுக்கு ஏன் அக்கா படிப்பு. மகனுக் குப் படிப்புக்காகச் செலவழித்த காசை வைச்சிருந் தாலும் அவனுக்கு ஒரு கடையைப் போட்டுக் கொடுத்திருக்கலாம். எங்கள் தலை எழுத்தை மாற்றேலாது. ஏழைகளுக்கு எப்ப விடிவுகாலம் பிறக்கும் அக்கா"

"எடி பிள்ளை மங்களம் படைச்சவன் படி அளப்பான் நீ யோசியாத"

"அக்கா படைச்சவனும் பணக்காரருக்குத் தான் படி அளக்கிறான். ஏழைகளைத் திரும்பியே பாக்கிறானில்ல. நாங்கள் என்ன செய்கிறது.

"மங்களம் அப்படிச் சொல்லாத. கடவுளை நம்பு அவர் கருணை காட்டுவார்."

"பறுவதம் அக்கா மழை குறைஞ்ச மாதிரி யிருக்கு. சின்னதம்பி அண்ணரையும் காண வில்ல நான் நாளைக்கு வாறன். கேட்டு வையுங்கோ."

"சரி மங்களம் போயிட்டுவா. அவர் வந்ததும் கேட்டு வைக்கிறன். குடை தரட்டே?"

"வேண்டாம் அக்கா நான் வாறன்."

* * *

"அம்மா, அண்ணை எங்களோட படிக்கிற ஒரு பெட்டையை விரும்புகிறான்"

"எங்கத்தே பெட்டையடி மேனே"

"எனக்குத் தெரியாது, கிளிநொச்சி எண்டு கேள்வி."

வீட்டுக்குள் இருந்து தாய்மகள் இருவரின தும் சம்பாசணையைச் செவிமடுத்து கொண்டி ருந்த சின்னதம்பியர் வெளியில் வந்து "உவள் என்னவாம்" என்று மனைவி பறுவதத்திடம் கேட்டார்.

"உவன் தம்பி யாரோ பெட்டையை விரும் புகின்றானாம். அவளைத்தான் கல்யாணம் கட்டப் போறானாம்"

"நல்லகரியம் தானே"

"உங்களுக்கு என்ன விசரே. பெட்டை எந்தப் பகுதி? யார் ஆட்கள்? எண்டு தெரியாமல் உவன் காலை வைச்சிருக்கிறான். நீங்கள் நல்ல காரியம் எண்டு சொல்லுகிறியள்"

"இஞ்சரும் பறுவதம் இரண்டும் விரும்பி விட்டுதுகள் எண்டா கட்டி வைக்கிறது தானே?"

"சரி அவன்தான் எங்கையெண்டாலும் போய் துலையட்டும். உவள் பாமினியை கொஞ் சம் கவனிச்சு வையுங்கள் அவளும் யாரோடை யும் ஓடிப்போகப்போறாள்."

"என்ர பிள்ளை எங்கையும் ஓடமாட்டாள். எனக்கு நல்லாத் தெரியும்."

"எப்பிடி நம்பிக்கையோடு சொல்லுகிறியள்"

"அவள் மங்களத்தின்ர பெடியனை யல்லே விரும்புகிறாள். அதாலை அவள் வீட்டை விட்டுப் போகமாட்டாள்."

"மங்களததின்ர பெடியனோ? அவன் தோட்டக்காரனல்லோ"

"சொந்தக் காலில் நிக்கிறவன். உவள் பாமினியை நல்லாய் வைச்சுப் பாப்பான் எண்டு எனக்குத் தெரியும்"

மழை பெய்து வானம் வெளித்தது.

பறுவதம் ஒன்றுமே புரியாதவளாய் கணவன் முகத்தைப் பார்த்தபடி நிற்கிறாள்.

**- யாழ் மைந்தனார்**

**உண்மைச் சங்கதிகள்**

# அப்பவே சொல்லிவிட்ட தீர்க்கதரிசி ஈ.வே.ரா பெரியார்

(60 ஆண்டுகளுக்கு முன் வந்த செய்தி)

*"அவனவன் பணம் சம்பாத்தியம் பண்ணுகிறதற்காக தனித்தனியே கழகம் என்றும் கட்சி என்றும் ஆரம்பித்துவிடுகிறான். கழகம் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிற எல்லாமே பணம் சம்பாதிக்கிறதுக்காக ஏற்பட்டவைதான். ஒரு கழகம் கூட யோக்கியமானது இல்லை. அரசியல் பேசுகிறவங்க பதவியைப் பிடிப்பதிலேயே கருத்தாக இருக்கிறாங்க. ஆளுக்கொரு பதவியைப் பிடித்துக்கொள்வது, பணம் பண்ணுவது, இதுதான் தொழிலாகிவிட்டது. ஒழுக்கம், நாணயம், தர்மம், நேர்மை இதெல்லாம் இல்லாமலேயே போய்விட்டது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மக்கள் மடையர்களாக இருப்பதுதான்."*

என்று பெரியார் கூறிய தீர்க்கதரிசனம் தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் இன்றுவரை பெரும் உண்மையாகவே இருக்கின்றது. இச் செயற்பாடு மேலும் உக்கிரமடைந்து வருங் காலத்திலும் தொடரும் என்பதிலும் எதுவித ஐயப்பாடுமில்லை.

பெரியார் கூறிய கருத்துக்கள் எமது நாட்டுக்கும் பொருந்தும் என்பதைப் பொது மக்கள் அறிவார்கள். ஆனால்.....!

தமிழ் நாட்டில், சொத்துக்குவித்தவர்கள் மேல் வழக்குகள் தொடரப்பட்டு தண்டனை களும் வழங்கப்பட்டு வருகின்றன.

எமது நாட்டைப் பொறுத்தளவில் பல அரசியல்வாதிகளும் உயர் அதிகாரிகளும் சொத்துக் குவிப்பதாகச் சொல்லப்படுகின்றது. எனவே இவற்றையெல்லாம் அம்பலத்துக்குக் கொண்டுவர... இங்கும் ஒரு பெரியார் தோன்ற வேண்டுமல்லவா? தோன்றுவார்கள் என நம்புவோம்

**- சமரன்**

# நல்லாசிரியர்கள்

மணமாலை மலர்மாலை மனம்மகிழ்ந்து
மாணவர்கள் பலர்மாலை சூட்டினார்கள் - நானோ
வாடாத கவிமாலை 'வள்ளல்களுக்குச்' சூட்டுகிறேன் இது
சூடாத புதுமாலை சுந்தரமாகட்டும் உங்கள் தோள்களுக்கே!

மாணவரை மனிதராக்கி மனமகிழ்ச்சி காண்பீர் - மனதார
தானவரை தன்மகவாய் தண்ணழி செய்வீர் - வகுப்பிலே
மக்குப் பிள்ளைக்கும் மனமுவந்து அருகமர்ந்து
பக்குவமாய் பாடம்புகட்டும் பண்பாளரும் நீவிரே!

சாதனைகள் நாங்கள் சாத்தியமாய் செய்வதற்கு - நற்
போதனைகள் செய்யும் பெருமகன்கள் நீங்களே! ஆண்டு
சோதனைகளில் நாங்கள் சோர்ந்து விடாமல் நாம்படும்
வேதனைகள் தீர்க்கும் வித்தகர்களும் நீங்களே!

கல்வியை எமக்காக கனிவாய் அள்ளித்தரும்
கலியுக கொடை வள்ளல்களும் நீங்களே! களைப்பின்றி
கேட்டதைச் சொல்லிக் கொடுக்கும் கற்பகதருக்களும் - புராணப்
பாட்டிலே புகழும் காமதேனுக்களும் நீங்களே!

கல்வியில் மேற்செல்ல நாம் கால்வைக்கும் படிக்கற்கள் நீங்கள்
சொல்லிய துறைகளில் எமை ஏற்றிவிடும் ஏணிகள் நீங்கள்
பள்ளியில் முகம்பார்க்கும் பளிங்குக் கண்ணாடிகள் நீங்கள்
தெள்ளிய அறிவூட்டும் அறிவுப் பொக்கிஷங்களும் நீங்களே!

மரமொன்று கைகாட்டும் திசைபோகும் கடுகதிக்கு - ஆசானின்
கரமொன்று கைகாட்டும் துறைபோகும் கல்விக்கே
வற்றாத ஜீவநதிகள் வறுமையில்லாக் கல்விச்செல்வர்கள்
நற்றாய்கள் நற்தந்தையர்கள் நல்லாசிரியர்கள் நீங்களே!

கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம் கல்வி - அதை
எடுத்து எடுத்து கொடுக்கும் அமுதசுரபிகள் நீங்கள்
தன்னலம் கருதாத தகைமயர் நீங்கள் - எம்மை
கண்ணிமை போலக்காக்கும் காவலர்களும் நீங்களே!

மாணவர் மாடசிக்காய் மறுப்பில்லாது கல்வி
பாமணம் பரப்பும் ஊதுபக்திகள் நீங்கள்- எமக்காய்
உருகி எரியும் கற்பூரங்கள் - அறியாமை
இருள்அகற்றும் மெழுகுவர்த்திகளும் நீங்களே!

நல்லாசிரியர் சேவை நானடுக்காய் சொல்லத்தான் வேண்டுமோ?
எல்லா இதயங்களிலும் என்றுமே குடியிருக்கும் ஏந்தல்கள் - எண்ணில்
இன்றைய உலகின் இணையில்லாக் கதாநாயகர்கள் வானில்
என்றும் தவறாது எழுகின்ற எழுகதிர்கள் ஆசிரியர்களே!

கண்கண்ட தெய்வங்களாய் கலங்கரை விளக்கங்களாய்
விண்கொண்ட புகழோடு விழுப்பமாய் வாழ்ந்துவரும் - எங்கள்
நல்லாசிரியர்க்கு நன்றியாய் வாழ்த்துச் சொல்ல இந்நாளில்
எல்லோரும் கூடிநின்றோம் ஏந்தல்களே வாழியநீவிர் பல்லாண்டு

*(ஆசிரியர் தினத்தையொட்டி எழுதப்பட்ட கவிதை)*

**நா.தியாகராசா**
**திருநாவற்குளம்**
**வவுனியா**

## 'தாயக ஒலி' சந்தா விபரம்

ஒரு வருடச் சந்தா : ரூபா 900(அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு : $30(U.S), £20(U.K)

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

**தொடர்பு :**

**திருமலை பாலா**
(Thirumalai Bala)
London
07956486014

**வங்கிக் கணக்கு விபரம்**
T.Sivasupramaniam
A/C No : 8100086490
Commercial Bank
Wellawatte, Sri Lanka

# என்பார்வையில் புதுமைப்பித்தன்

(மே 2010, யுகமாயினியில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம்



கடந்த அறுபது ஆண்டுகளாகத் தமிழகம், இந்தியா, உலகம் என்னும் பரந்துபட்ட அரங்கில் நிகழும் அரசியல் பொருளாதார, சமுதாய, கல்வி - கலாசாரத் துறைகளில் நிகழும் போக்குகளை உன்னிப்பாகக் கவனித்து வருகிறேன். அவை அவ்வப்போது எனது உரைகளாகத் தமிழக ஏடுகளிலும் இதழ்களிலும் பதிவாகி உருவாகின்றன.

1906 ஏப்ரல் மாதம் 25ஆம்தேதி புதுமைப்பித்தன் பிறந்து 104 ஆண்டுகளாகி விட்டன. மறைந்து 62 ஆண்டுகளாகி விட்டன.(2010இல்)

மகாகவி பாரதிக்குப் பின்னர் தமிழிலக்கியத்தின் தரத்தை உலக அளவுக்கு உயர்த்திய மேதைகளில் ஒருவர் புதுமைப்பித்தன். சிறுகதைத்துறையில் மட்டுமன்றி கட்டுரை, இலக்கிய விமர்சனம், மொழிபெயர்ப்பு, கவிதை, நாடகம், வாழ்க்கை வரலாறு, கடித இலக்கியம் முதலிய பலதுறைகளில் தமது தன்னிகரற்ற தனித்த முத்திரையைப் பதித்துச்சென்றவர் புதுமைப்பித்தன்.

மணிக்கொடி காலத்திற்குப் பின்னர், அதாவது 1930ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதுமைப்பித்தனின் படைப்புக்களின் வீச்சையும், வேகத்தையும், தமிழிலக்கியம் படிப்படியாக உணரலாயிற்று.

அந்த 48 வரையிலான 18 ஆண்டுகால இடைவெளியில் ஆனந்தவிகடன், கல்கி, சுதேசமித்திரன், கலைமகள் முதலிய வார, மாத இதழ்களின் செல்வாக்கில் பெரும்பாலான வாசகர்கள் கட்டுண்டிருந்த காலம் அது. சுருங்கச் சொன்னால் பொழுது போக்கு இலக்கியம் என்னும் கருத்தாக்கத்தின் கை ஓங்கியிருந்த காலம் அது.

இந்தச் சூழ்நிலையில் புதுமைப்பித்தனின் எழுத்துக்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைத்திட அவரும் பல மணிக்கொடி எழுத்தாளர்களும் தொடர்ந்து பல முனைகளில் போராட வேண்டிய நிலைமையே இருந்தது. பல வழிமறிச்சான் சந்துகளைத் தாண்டித்தான் அவர்களது படைப்புக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வாசகர்களை எட்டிப்பார்த்தன.

1934 முதல் 1944 வரை தினமணி, தினசரி முதலிய நாளோடுகளில் ஒரு உழைக்கும் பத்திரிகையாளராகத்தான் சொ.விருத்தாசலம்(சொ.வி) என்னும் புதுமைப்பித்தன் அன்றாடம் தம் வாழ்நாளை ஒட்ட வேண்டியிருந்தது. இரண்டாம் உலகப்போர் மூண்டு நடந்து கொண்டிருந்த காலமது. பாஸிஸமும், ஹிட்லரிஸமும் ஐரோப்பாவைக் காவுகொண்டு தலைவிரித்தாடின. அதேவேளை 1930 உப்பு சத்தியாக்கிரகம் முதல் 47 இல் தேசவிடுதலை பெறும் வரையில் வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பு அலைகள் நமது வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் வீசிக்கொண்டிருந்த காலம் அது. இந்தக் காலத்தில்த் தான் பாரதி பாதையில் வந்த புதுமைப்பித்தனைப் போன்ற சுதந்திர வேட்கை கொண்ட எழுத்தாளர்கள்

தம் வயிற்றுப்பாட்டையும் கவனித்துக்கொண்டு படைப்பு இலக்கியத்தின் தரத்தையும் உயர்த்த முயன்றார்கள். அது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை இப்போது நினைத்துப் பார்க்கையில் பிரம்மிப்பாகவும் அச்சமாகவும் இருக்கிறது.

1937 அல்லது 38 வாக்கில் பி.எஸ்.ராமையாவின் மணிக்கொடி நின்ற பிறகு, புதுமைப்பித்தன், ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், சி.சு.செல்லப்பா, நா.சிதம்பரசுப்பிரமணியம், க.நா.சுப்பிரமணியம் முதலிய எழுத்தார்களின் வேடந்தாங்கலாயிற்று கலைமகள். மிக குறைந்த ஊதியமே கிடைத்த போதிலும் தம் படைப்புக்காக அளிக்கப்பட்ட சுதந்திரத்தையே புதுமைப்பித்தன் போன்றோர் மிக முக்கியமாகக் கருதினர்.

கலைமகள் வெளியிட்ட காஞ்சனை என்னும் சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் தமக்கு அளிக்கப்பட்ட படைப்புச் சுதந்திரம் குறித்து புதுமைப்பித்தன் பாராட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கலைமகளின் பிரதிகள் சில ஆயிரங்களே விற்ற நிலையில்த்தான் இருந்தது. எனினும் புதுமைப்பித் தனின் சாகாவரம் பெற்ற படைப்புக்கள் அதில்த்தான் வந்தன.

அதேவேளையில் திருச்சி மாவட்டத்திலிருந்து வெளிவந்த கிராம ஊழியன், சிவாஜி போன்ற சிற்றிதழ்களிலும் சன்மானம் ஏதுமின்றியே புதுமைப்பித்தன் முழுமனத்துடன் எழுதி வந்தார். கலைமகளை விட அந்தச் சிறுபத்திரிகைகளில் தான் புதுமைப்பித்தனுக்கு முழு சுதந்திரமும் இருந்தது. அவரின் கவிதைகள் எல்லாம் மேற்கண்ட சிற்றிதழ்கள்தான் வெளியிட்டன. கி.வா.ஜ.போன்ற மரபியல்வாதிகள் கவித்துறையில் தம் பரிசோதனை முயற்சிகளுக்கு இடம் தரமாட்டார்கள் என்பதனையும் புதுமைப்பித்தன் நன்கறிவார்.

1945இல் மிக இளம் வயதில் மணிக்கொடி எழுத்தாளர் கு.ப.ராஜகோபாலன் மறைந்த பொழுது மிகவும் வேதனையுற்ற நிலையில், “ஓஹோ! உலகத்தீர் ஓடாதீர்” என்னும் பிரபலக் கவிதையைப் புதுமைப்பித்தன் எழுதினார். அதன் பின்னர், “இணையற்ற இந்தியா” என்னும் புதுமைப்பித்தனின் இணையற்ற நையாண்டிக் கவிதையும் ஒரு சிற்றேட்டில் தான் வந்தது. இவையெல்லாம் கலைமகள் போன்ற மிதவாத ஏட்டில் வெளிவரும் என்று எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? சிறந்த சிறுகதையாசிரியர் என்ற முறையில் மட்டுமே புதுமைப்பித்தனுக்கு கலைமகளில் இடம் கிடைத்தது என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

1944இல் தினசரி நாளேட்டிலிருந்து விலகிய பிறகு வறுமையும் பிணியும் விரட்டிய நிலையில் அவர் ஜெமினி திரைப்பட நிறுவனத்திற்கு கதை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த வசனமும் பின்னர் தூக்கி எறியப்பட்டது. ஒதுக்கித்தள்ளப்பட்டது. காச நோய் தொடங்கிய நிலையில் பானுமதியும் எம்.கே.தியாகராஜ பாகவதரும் நடித்த ராஜபக்தி என்னும் படத்திற்கு வசனம் எழுத புனா நகருக்குச் சென்றார். அங்கு போதிய வருமானம் அவருக்குக் கிடைக்கவில்லை. “கண்மணி கமலாவுக்கு என்றும்”, தன் மனைவிக்கு எழுதிய கடிதத்திலும், இரகுநாதன் எழுதிய புதுமைப்பித்தன் வரலாறு என்னும் நூலிலும் இந்த விபரங்களைக் காணலாம்.

வெறும் 42 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்து தமிழிலக்கியத்துறையில் மாபெரும் சாதனைகள் புரிந்த புதுமைப்பித்தன்தான் வல்லிக்கண்ணன், தொ.மு.சி.ரகுநாதன், கு.அழகிரிசாமி முதலிய முழுநேர

எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். அவர் அனுபவித்த துன்பதுயரங்களை இந்த முழுநேர எழுத்தாளர்களும் அனுபவித்தார்கள் என்பதே உண்மை.

1948 ஜூன் 30இல் புதுமைப்பித்தன் மறைந்த பிறகு பத்திரிகை உலகத்திலும், பதிப்பக உலகத்திலும் வாசகர்கள் மத்தியிலும் புதுமைப்பித்தனின் புகழ் ஓங்கலாயிற்று. புதுமைப்பித்தன் மலர்கள் வெளியிட்டு தமிழகத்தின் முக்கிய நகரங்களிலும், இலங்கையிலும், மலேசியா போன்ற நாடுகளிலும் புதுமைப்பித்தனின் நினைவு விழாக்கள் கொண்டாடப்பட்டன. கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. 1952-62 வரை வ.விஜய பாஸ்கரனை ஆசிரியராகக் கொண்ட 'சரஸ்வதி' என்னும் இலக்கிய மாத இதழ் புதுமைப்பித்தன் புகழ் பரவுவதற்கான பல விவாதக் கட்டுரைகளை வெளியிட்டது. 1957இல் சரஸ்வதி வெளியிட்ட புதுமைப்பித்தன் மலரில் புதுமைப்பித்தன் பற்றி நானும் சில கட்டுரைகள் எழுதியுள்ளேன். ஜெயகாந்தன், சுந்தரராமசாமி,கிருஷ்ணன் நம்பி முதலிய தலை சிறந்த சிறுகதை ஆசிரியர்களின் படைப்புக்களை வெளியிட்ட பெருமையும் சரஸ்வதிக்கு உண்டு.

தொ.மு.சி ரகுநாதனின் 'சாந்தி' என்னும் இலக்கிய மாத இதழும் சுந்தரராமசாமி போன்ற படைப்பாளிகளின் ஆரம்பகால கதைகளைவெளியிட்டு, தமிழ்ச் சிறுகதை உலகினை வளப்படுத்த உதவியது. ஜீவாவின் 'தாமரை' இதழும் புதுமைப்பித்தன் பாதையில்தமிழிலக்கியம் வளர்வதற்கு தம் பங்களிப்பைச் செய்தது. இப்போது செம்மலரும் இப்பணியைத் தொடர்வது பாராட்டுக்குரியது.

புதுமைப்பித்தன் கலை கலைக்காவே என்ற கொள்கையைக் கடைப்பிடித்த போதிலும் மகாகவி பாரதியின் அடிப்படைக் கொள்கைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் தத்துவப் பாதையிலிருந்து விலகவில்லை. இந்தக் கண்ணோட்டத்துடன் சமுதாயத்தில் தான் கண்ட குறை நிறைகளையும், இருண்ட பகுதிகளையும், கலை அழகுடன், துணிச்சலாக மக்களிடம் கொண்டு சென்றார். அவரது படைப்புப் பாதையை விமர்சன யதார்த்தவாதம் (Critical Realism) என்று வகைப்படுத்தலாம். இதே பாதையில் சென்றவர் விந்தன் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இதற்குப் பிந்தைய காலகட்டத்தில் சோஷலிஸ யதார்த்தவாதத்தைத் தம் படைப்பு முறையாகக் கொண்ட எழுத்தாளர்களாக தொ.மு.சி.ரகுநாதன், டி.செல்வராஜ், கு.சின்னப்பபாரதி, கந்தர்வன், பொன்னீலன், ச.தமிழ்ச்செல்வன், மேலாண்மை பொன்னுசாமி மற்றும் சிலரைக் குறிப்பிடலாம்.

வல்லிக்கண்ணன், கு.அழகிரிசாமி, ஆதவன், கி.ராஜ நாராயணன், தோப்பில் முகம்மது மீரான், ஆர்.எஸ்.ஜேக்கப் மற்றும் நூற்றுக்கணக்கானோர் புதுமைப்பித்தனின் விமர்சன யதார்த்தவாதப் பாதையில் சிறப்பாகச் செய்துள்ளனர். பல சிற்றேடுகளும் இவற்றில் அடங்கும்.

**- தி.க.சிவசங்கரன் (தி.க.சி)**

**கவிதை**

# வீடு

பரம்பரைக் காணிகளையும்,
தாயின் தாலிக்கொடியையும்,
நகைகளையும் அடகுவைத்து

மகளுக்குச் சீதனமும்,
டொனேஷனும் கொடுத்தார்கள்.

அதுமட்டுமா!



குடியிருக்கும் வீட்டையும்
சீதனமாய்க் கொடுத்தார்கள்.

திருமணம் முடிந்த கையோடு
வீட்டைக் காலி பண்ணித் தருமாறு
நெருக்குகின்றார் மாப்பிள்ளை.

**- கவிஞர் கா.தவபாலன்**



## வராதே!

பார்த்தால் அழகாம்,
படித்தால் அறிவாம்!
சேர்த்தால் தொகுப்பாம்,
திறந்தால் வாழ்வாம்!

அறை கட்குள்ளே,
அழகறை நூலறை!
இறைவன் விரும்பும்,
இன்ப நல் லறையே!

பன்னூல் இருக்கும்,
பா நூல் இருக்கும!
நன்னூல் இருக்கும்,
நற்பொருள் இருக்கும்!

நினைத்தால் இனிக்கும்
நெடுநாள் வாழும்!
புனைந்தால் பாவே,
போட்டால் வராதே!

## மாட்டாரே!

எழுபத்தொன்று - குறிப்பறிதல்
இயம்பின் நூற்றுப் பத்துந்தான்!
பழுதில் குறிப்பறி வுறுத்துவது
பார்த்தால் நூற்றிரு பத்தெட்டே!

குறிப்பறிதல் பொருட்பாலாகும்
கூறிடின் இன்பப் பாலுமதாம்!
அறிமின்குறிப்பறி வுறுத்துவது
ஆமாம்இன்பத் துப்பாலே!

கூறியதையே கூறவில்லை
குறளைமறுவற வுணர்ந்தார்கள்
வேறு வேறென் றறிவார்கள்
விந்தைக்குறளினை வெறுக்காதார்!

குறள் அதிகாரம் பாடமெனில்
கூறிடலா மொரு மறைமொழியை!
மறக்கமுடியா மறைமொழியை
மற்றவர் அறிந்திட மாட்டாரே!

**'தாமரைத்தீவான்'**
**ஈச்சந்தீவு-கிண்ணியா**



## பொங்கல் வாழ்த்துக்கள்

**'தாயக ஒலி'யின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்து ஆதரவு நல்கிவரும் பெருமைக்குரிய விளம்பரதாரர்கள், சந்தாதாரர்கள் மற்றும் எழுத்தாளர்கள், ஆக்க இலக்கியப் படைப்பாளிகள், வாசகப் பெருமக்கள், விமர்சனதாரர்கள், மற்றும் பல வகையிலும் உதவி வரும் நல்லுள்ளங்கள், நண்பர்கள் எல்லோருக்கும் எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்.**

**"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"**

**- ஆசிரியர்குழு**

# AA Accounting & Business Solutions Associates

## 265 Haydons Road / London SW19 8TY

**Accountants and Management Consultants**

*for Efficient and Quality Professional Accounting Services*

**WE SPECIALISE IN**

- Year End Accounts Preparation
- Management Accounts
- Solicitors Accounts
- Book Keeping
- Self Assessment Tax Returns
- Vat and TAX Investigations
- Payroll Preparation
- Business Startup Advice
- Business Plans and Cash Flow Forecasts
- Management Consultancy

*Also through our contacts we are able to raise Finance for New Business*

Contact :

**UTHAYANAN or SASI**

Mob : 0774 7794 358 / 07786 966 207 Tel : 020 8545 0205

www.aa-accounts.co.uk

சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்

# Rasiah & Co
## Solicitors

- Conveyancing
- Residential & Commercial
- Matrimonial
- Immigration
- Landlord & Tenants

**Tel : 020 8543 4040**
**Fax : 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX : 300004 Wimbledon South

rasiahsolicitors@btconnect.com



# HENSHOU ISSHINRYU KARATE ACADEMY

59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF

Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com

AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND
ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA



## DEVELOP YOUR SELF DEFENCE, SELF CONTROL SELF DISCIPLINE, COURAGE & LEADERSHIP



*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmaster Kichiro Shimabuku(Japan)

*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs-male and female).

*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA

தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது





### OUR BRANCHES:

EASTHAM, MANOR PARK, NEWBURY PARK
WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM
CROYDON, MITCHAM, BRISTOL, HARROW
SOUTHEND, SWINDON

**CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN** (6th DAN BLACK BELT)

TEL : 020 8518 3288
MOB : 07950 346 432

Email : info@henshou.com Web : www.henshou.com

# Easan & Co

**Chartered Management Accountants**

SPECIALISTS IN ARRANGING COMMERCIAL LOANS

- *Self Assessment Tax Return*
- *CIS Refunds*
- *Accounts & Book Keeping*
- *VAT Returns*
- *PAYE*
- *Management Accounting*

PERSONAL LOAN

## S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel : 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 078 01227017

சி.அருந்தவன்

## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடத்திய

# இரா உதயணன் இலக்கிய விருது விழா - 2017

கொழும்புத் தமிழ்ச் சங்கம், பல விழாக்களைத் தரிசித்துப் பெருமை பெற்று நிற்கும் வரலாற்றுப் பாரம்பரியத்தை கொண்டிருக்கிறது. அந்த வகையில் சென்ற மாதம் (16.12.2017) நடைபெற்ற 'இரா உதயணன் இலக்கிய விருதுவிழா 2017' மிகப் பெரிய ஆச்சரியத்தையும், தனித்துவப் பண்பையும் பெற்றிருந்தமையை அவதானிக்க முடிந்தது. நாலரை மணிக்கு வி.பிரபா குழுவினரின் இன்னிசை காதுக்கு விருந்தாக அமைய, விழாவுக்கு வருகை தந்தவர்கள் சிற்றுண்டி உண்டு தேனீரும் அருந்திக் கொண்டு உரையாடல்களுடன் இருந்த கட்சி ரம்மியமான மாலைவேளையில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. கலாகீர்த்தி உடுவை எஸ்.தில்லைநடராசா அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

சரியாக ஐந்து மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமாகியது. அதைத் தொடர்ந்து தமது தேனிசைக் குரலில் 'சக்தி சுப்பஸ்டார்' செல்வி. வைசாலி யோகராஜன் தமிழ் வாழ்த்தினை இசைத்தார். நிகழ்ச்சித் தொகுப்பினை செல்வி எம்.அபிராமி அற்புதமாக வழங்கிக் கொண்டிருந்தார். தமிழ் வாழ்த்தினைத் தொடர்ந்து திருமதி பவானி குகப்பிரியாவின் மாணவி செல்வி ஜதுசனா சுதாகரின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அபிநயத்துடனான நடனம் அற்புதமாக இருந்ததை சபையோரின் கைதட்டல்கள் எடுத்தியம்பியது. ஆரம்ப நிகழ்ச்சிகள் அனைத்தும் மிகச் சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந் தமை அவதானத்தைப் பெற்றிருந்தது என்றே சொல்ல வேண்டும். வரவேற்புரையை முன்னாள் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் அதிபர் திருமிகு ஐ.இராசரத்தினம் அவர்கள் இரத்தினச் சுருக்கமாக வழங்கினார். இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் ஆற்றி வருகின்ற இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு ஆகியவற்றின் பணிகளை தொடக்கவுரையாற்றிய கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவரும் 'தாயக ஒலி' யின் பிரதம ஆசிரியருமாகிய திருமிகு.தம்பு சிவசுப்பிரமணியம் விபரமாக விளக்கினார். அதை தொடர்ந்து வாழ்த்துரையை டென்மார்க்கிலிருந்து வருகை தந்த திருமிகு வி.ஜீவகுமாரன் வழங்கிச் சிறப்பித்தார். தலைமையுரையை விழாத் தலைவர் கலாகீர்த்தி உடுவை எஸ்.தில்லைநடராஜா அவர்கள் வழங்கி விழாவைப் பெருமையாக்கினார்.

சிறப்புரை வழங்க வருகை தந்திருந்த பேராசிரியர் சபா ஜெயராசா மற்றும் பேராசிரியர் வ.மகேஸ்வரன் ஆகியோர் புலமை வழிநின்று தத்தமது உரையை கனதியாக முன்வைத்தனர்.

விருது வழங்கல் நிகழ்வு ஆரம்பமாகியது. மேடையில் தலைவர், பேராசிரியர்களான சபா ஜெயராசா, வ.மகேஸ்வரன், மற்றும் இரா உதயணன் ஆகியோர் வரிசையாக நின்று மேடைக்குப் பொலிவை ஏற்படுத்தினர். முதலில் 'உயர் தமிழ் இலக்கிய விருது' டெல்கிப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியரும், சிறந்த மொழி பெயர்ப்பாளருமாகிய பேராசிரியர் எச்.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்கப் பெற்றது. தலைப்பாகை, பொன்னாடை, மாலை மரியாதையுடன் சான்றிதழும், விருதும் மேடையில் நின்ற பிரமுகர்களால் வழங்கிய காட்சி பெரும் ஆவலை ஏற்படுத்தியது. தொடர்ந்து வாழ்நாள் சாதனையாளர் விருது நால்வருக்கு வழங்கப் பெற்றது. கலாநிதி தமிழ்மணி அகளங்கன், தமிழ்மாமணி அல் அஸூமத்,

கவிஞர் தாமரைத்தீவான், திருமிகு மு.சிவலிங்கம் ஆகியோரே வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு உரியவரானார்கள். இன நல்லுறவு இலக்கிய விருது திருமிகு.ஹேமச்சந்திர பத்திரனவுக்கு வழங்கிக் கௌரவித்தனர். இது ஒரு வரவேற்புக்குரியதென்று பலரும் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

'விசேட சாதனையாளர் விருது' ஆயிரம் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பாளர் திருமிகு யோ.புரட்சிக்கு வழங்கப் பெற்றது. சிறந்த ஊடகவியலாளர் விருதை திருமிகு. சின்னத்தம்பி தில்லைநாதன் பெற்றுக்கொண்டார். இதைத் தொடர்ந்து கனடாவிலிருந்து வருகை தந்த முதன்மை விருந்தினர் கலாநிதி தம்பிராசா வசந்தகுமார் உரையாற்றினார்.

இலக்கிய விருதுக்கான நூல்களை நடுநிலை நின்று போற்றத்தக்க வகையில் தெரிவு செய்த நடுவர்களை அறிமுகப்படுத்தி அவர்களைக் கௌரவித்து பரிசில்களும் வழங்கப் பெற்றன.

அதைத் தொடர்ந்து நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், தமிழ் வளர்ச்சி இலக்கியம், அயலகப்படைப்பு, மொழிபெயர்ப்பு ஆகிய ஏழு துறைகளுக்கும் பணப்பரிசும் சான்றிதழும் விருகளும் வழங்கப் பெற்றன.

நாவலுக்கு சாகித்யரத்னா தெளிவத்தை ஜோசேப், சிறுகதைக்கு திருமதி மைதிலி தயாபரன் மற்றும் திருமிகு சிவனு மனோஹரன், கவிதைக்கு திருமிகு.மெய்யன் நடராஜ், சிறுவர் இலக்கியத்திற்கு அருட்தந்தை செ.அன்புராசா, அயலகப்படைப்பு திருமிகு சுப்ரபாரதிமணியன் (தமிழ்நாடு) மற்றும் திருமதி.நவஜோதி யோகரட்ணம்(இலண்டன்), தமிழ் வளர்ச்சி இலக்கியத்திற்கு திருமிகு ம.ந.கடம்பேசுவரன், மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்கு திருமிகு.திக்குவல்லை கமால் ஆகியோர் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். சிறந்த படைப்பாளிகளாகிய அவர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்கள்.

அயலக விருந்தினர் உரையை இலண்டனிலிருந்து வருகை தந்த திருமதி நிர்மலா விஜயகுமார் ஆற்றினார். விருது பெற்றவர்கள் சார்பில் பேராசிரியர் எச்.பாலசுப்பிரமணியம், தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் உரையாற்றினர். ஏற்புரையை இலண்டன், இலங்கை தமிழ் இலக்கிய நிறுவனங்களின் தலைவர் வவுனியூர் இரா உதயணன் அவர்கள் வழங்க, நன்றியுரையை திருமிகு கி.பொன்னுத்துரை நல்கினார். மண்டபம் நிறைந்த ஜனக்கூட்டம் விழாவின் சிறப்புக்குக் கட்டியம் கூறியது. இராப்போசன விருந்துடன் விருது விழா தனிமுத்திரை பதித்து நிறைவெய்தியது. இந்த தமிழ் இலக்கிய விருது விழா இரண்டாவது ஆண்டும் சிறப்பான முறையில் நடைபெற எல்லா வகையான ஒத்துழைப்பையும் வழங்கிய வவுனியூர் இரா உதயணனின் இலக்கியப் பணியை எல்லோரும் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தமை சிறப்பு அம்சமாகும். வரலாறு படைத்த பெருவிழா என்பதை வருகை தந்தவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

## இரா உதயணன் இலக்கிய விருது – 2017
## விருது பெற்றவர்கள் விபரம்

01. திரு.சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஷ்ணா, திருமதி கமலநாயகி ஸ்ரீ இராமகிருஷ்ணா ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது
**"உயர் தமிழ் இலக்கிய விருது"**
பேராசிரியர் எச்.பாலசுப்பிரமணியம்(இந்தியா)

02. திரு.சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஷ்ணா, திருமதி கமலநாயகி
ஸ்ரீ இராமகிருஷ்ணா ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது
**"வாழ் நாள் சாதனையாளர் விருது"**
கலாநிதி தமிழ்மணி அகளங்கன்
தமிழ்மாமணி அல்அஸூமத்
திருமிகு. தாமரைத்தீவான்
திருமிகு. மு.சிவலிங்கம்

03. டாக்டர் எம்.என் ஸ்ரீஸ்கந்தராசா ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது
**"இனநல்லுறவு இலக்கிய விருது"**
திருமிகு.ஹேமசந்திர பத்திரன

04. சின்னவட்டர் ஐயம்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது
**"சிறந்த ஊடகவியலாளர் விருது"**
திருமிகு.சின்னத்தம்பி தில்லைநாதன்

05. சசிதேவி சிவனேசன் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது
**"விசேட சாதனையாளர் விருது"**
நூல் : 1000 கவிஞர்களின் கவிதைத்தொகுப்பு
தொகுப்பாசிரியர் : திருமிகு.யோ.புரட்சி

06. டாக்டர் யோவான்பிள்ளை சந்திரசேகரம், திருமதி பாக்கியம் சந்திரசேகரம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது
**"சிறுகதை இலக்கிய விருது"**
சிறுகதை : பாதம் காட்டும் பாதை
ஆசிரியர் : திருமதி.மைதிலி தயாபரன்
சிறுகதை : மின்களைத்தின்றஆறு
ஆசிரியர் : திருமிகு.சிவனு மனோஹரன்

07. திரு.திருமதி வேலுப்பிள்ளை சிவஞானம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது
**"நாவல்இலக்கிய விருது"**
நாவல் : நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983
நாலாசிரியர் : சாகித்யரத்னா தெளிவத்தை ஜோசேப்

08. சசிபாரதி சபாரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது
**"அயலகப் படைப்பு இலக்கிய விருது"**
அயலகப்படைப்பு : முறிவு (நாவல்)
ஆசிரியர் : திருமிகு.சுப்ரபாரதிமணியன்(தமிழ்நாடு)

09. திரு.திருமதி தம்பு - தையல்நாயகி அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது

**" தமிழ் வளர்ச்சி இலக்கிய விருது"**

தமிழ்வளர்ச்சி இலக்கியம் : "காப்பியதாசன்கட்டுரைகள்"

ஆசிரியர் : திருமிகு.ம.ந.கடம்பேசுவரன்

10. திரு.திருமதி.கிட்னர் - பாப்பாத்தி அம்பாள் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது

**"சிறுவர்இலக்கிய விருது"**

சிறுவர்இலக்கியம்: சிறகடிக்கும் சிட்டுகள்

ஆசிரியர் : அருட்தந்தை செ.அன்புராசா

11. தவமணி சிவஞானம் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது

**"கவிதை இலக்கிய விருது"**

கவிதை : படிக்கட்டு

ஆசிரியர் : திருமிகு.மெய்யன் நடராஜ்

12. திரு.திருமதி வேலுப்பிள்ளை வன்னியசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது

**"மொழிபெயர்ப்பு இலக்கிய விருது"**

மொழிபெயர்ப்பு : "போகல சவுந்திரிஸ்" (சிங்களத்திலிருந்து தமிழுக்கு)

ஆசிரியர் : திருமிகு.திக்குவல்லை கமால்

13. வைரமுத்து தம்பிராசா அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் விருது

**"அயலகப்படைப்பு இலக்கிய விருது"**

நூல் : மகரந்தச்சிதறல்

ஆசிரியர் : திருமதி.நவஜோதி ஜோகரட்ணம்(இலண்டன்)

**நகைச்சுவைக் கதைகள்** — இணுவை இரகு

## அம்மாவும் அப்பாவும் - வித்தியாசம்

வெளிநாட்டில் தனது உயர்கல்வியை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்த மகள் களைப்புக் காரணமாக ஓடிப்போய் குளிர்சாதனப் பெட்டியைத் திறந்தவள் இன்ப அதிர்ச்சிக்கு ஆளானாள்.

ஒரு அழகான பதினெட்டு வயதுப் பெண்ணின் படம் நீச்சலுடையில் 'பிரிட்ஜ்' இல் ஒட்டப்பட்டிருந்தது. 'வாவ்' என்று புகழ்ந்து மகிழ்ச்சியுடன் தாயை அணைத்த செல்ல மகள் கேட்டாள் "நல்ல ஐடியா மம்மி, ரிசல்ட் எப்படி?".

அலுத்துக் கொண்ட தாயார், "எனக்கு பன்னிரெண்டு கிலோ குறைந்துள்ளது, ஆனால் உது அப்பாவுக்குத்தான் ...." என்று இழுத்தாள்.

"மம்மி அப்பாவுக்கு என்ன நடந்தது?"

தலையிலடித்துக் கொண்ட தாயார் "முப்பது கிலோ வெயிட் கூடியுள்ளது!" என்றாளே பார்க்கலாம்.

மகள் குளிர்சாதனப் பெட்டியில் ஒட்டியிருந்த ஸ்டிக்கரை ஆத்திரத்துடன் கிழித்தெறிந்தாள்!

# சிக்கெனப் பிடித்தேன்

எந்தக் காரியத்தையும் நாம் முறையோடு செய்ய வேண்டும். நியாயம் என்றால் முறை என்றும் பொருள்படும். பாதையில் நாம் நடக்கும் போது வலது பக்கமாகப் போவதுமுறை. பெரியோர்கள் ஒவ்வொரு காரியத்துக்கும் பொதுவான முறைகளை ஏற்படுத்தி உள்ளார்கள். அவர்கள் காட்டிய வழியில் செல்வது தான் எல்லோர்க்கும் நல்லது.

ஆண்டவனிடம் போவதற்கும் இரண்டு வழிகள் எமக்கு வகுக்கப்பட்டுள்ளன. ஒன்று குரங்குக் குட்டி முறை. மற்றையது பூனைக்குட்டி முறை. சமஸ்கிருத மொழியில் குரங்கு என்றால் மார்க்கடம் என்றும், பூனை என்றால் மார்ஜாரம் என்றும் பொருள் பெறும். கிசோரம் என்றால் குட்டி என்றும் அர்த்தம்.

ஆகவே வடமொழியில் மார்கட கிசோர நியாயம் என்றும் மார்ஜார கிசோர நியாயம் என்றும் கூறும் வழக்கம் உண்டு.

பூனை குட்டி போட்டால் அக்குட்டி தானாக நடக்கும் வரை தாய்ப் பூனை தானே தன் வாயால் தனது குட்டியைக் கவ்விச் செல்லும். பூனைக்கும் புலிக்கும் தம் குட்டிகள் மேல் ரொம்பப் பிரியம், வாத்சல்யம்.

இறைவனுக்கும் அப்படித்தான். இறைவன் எல்லாக் குழந்தைகளுக்குமே, தாயை மயக்கக் கூடிய சக்தியைக் கொடுத்திருக்கின்றார். அப்போது தான் இக் குழந்தைகள் வாழ வழி உண்டு என இறைவன் இந்த மாயா வித்தையைச் செய்துள்ளார். இதனால் ஆண்டவனை ஒரு மாயாவி என்றும் கூறலாம். இல்லையா?

நாம் எமது கர்மங்களை அனுபவிக்க உடல் வேண்டும். உடல் வளர உணவு வேண்டும். எமக்கு இந்த உண்மை புலப்படுகின்றதோ இல்லையோ நாம் வயிற்றுக்கு ஆகாரத்தைக் கொடுத்து, உடலை வளர்க்கின்றோம்.

உடல் வளர்கின்றது. இதற்காக நாக்கு என்னும் உறுப்பை இறைவன் எமக்குத் தந்துள்ளான். நாக்கில் ருசியைக் கொடுத்து அதன் மூலம் உணவைக் கொடுத்து, உடலை வளர்த்து, நாம் எமது கர்மாவை அனுபவிக்கப் பண்ணும் வித்தகர் ஆண்டவன். இந்த உண்மை எமக்குச் சில சந்தர்ப்பங்களில் தான் புலப்படுகின்றது. மற்றைய நேரங்களில் எல்லாமே நாம் தான் என்றும் எண்ணி விடுகின்றோம். இது எத்தனை பெரிய தவறு தெரியுமா? எல்லாம் அவன் கைகளில் அல்லவா? இறைவனை அடையும் மூன்று வழிகளில் பூனைக் குட்டி முறையும் ஒன்று. அதுவே தான் மார்ஜாரம் கிசோர நியாயம்.

பூனைக்குட்டியானது தன் முயற்சியின்றி தாய்விட்ட வழி என்றிருப்பது போலவே ஒரு வகைப் பக்தர்கள் பகவானே கதி என்றிருப்பர். அதாவது இறையைப் பணிந்து துதித்து தோத்தரித்து அவன் புகழ் பாடி தம்மை அவன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து எம்மை ஆட்கொள்வது பகவானது பொறுப்பு என்று இருத்தலாம். இவ்வித பக்தி மார்ஜார கிஷோர நியாயம் என்பது.

இம்முறைக்கு நேர்மாறானது. இந்தக் குரங்குக் குட்டி முறை. இந்தக் குரங்குக் குட்டி போன்றவர் இன்னொரு வகைப் பக்தர்கள்.

குரங்குக் குட்டி தன் தாய் வயிற்றைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளும். தாய்க் குரங்கு

மரத்துக்கு மரம் தாவும் போது தன்குட்டியை பற்றி சிறிதும் கவலைப்படாது. குட்டியே தான் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுமாறு தாயின் வயிற்றை மிகக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளும். ஆண்டவன் அதற்கு இப்படி ஒரு சக்தியைக் கொடுத்துள்ளார்.

கடித்ததெல்லாம் கரும்பு
பிடித்ததெல்லாம் இரும்பு என்பார்கள்.

எதையுமே குரங்கு பலத்துடன் பிடித்துக் கொள்ளும். இதனாலே தான் "குரங்குப் பிடி" என்கிறார்களோ!.

இது மார்க்கட கிஷோர நியாயம் என்ற ழைக்கப்படுகின்றது. இந்த வகையிலும் பக்தர்கள் உள்ளார்கள். அவர்கள் ஆண்டவனை மிக இறுக்கமாகப் பற்றிக் கொள்வார்கள். ஆகவே ஆண்டவன் செய்யட்டும் என்றிராமல் அவன் உதறித் தள்ளினாலும் நாம் விடுவதில்லை என்று இறைவனைக் கெட்டியாகப் பற்றிக் கொள்வர்.

"சிக்கெனப் பிடித்தேன்" என்று மாணிக்க வாசகர் பெருமான் பாடியுள்ளதைப் பாருங்கள்! அவரே திருவாசத்தில் ஆண்டவனை "பக்தி வலையில் படுவேன்" எனவும் பாடியுள்ளார்.

எனவே பக்தர்கள் பகவானைச் சிக்கெனப் பிடிப்பது ஒரு வகை. இறைவன் பக்தர்களின் பக்தி வலையில் சிக்கிக்கொள்வதும் ஒரு வகை. சில சந்தர்ப்பங்களில் பக்தர்களின் பக்தி வெள்ளத்தி லிருந்து இறைவனாலேயே தப்பிக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களும் உண்டு.

எனவே நாமும் பக்தி செய்யவே, நிஜ பக்தியை எமக்குக் கொடு என இறைவனைப் பிரார்த்திப்போம்.

அப்புறம் எவ்வழியில் இறையைப் பற்று வது என்று சிந்திப்போம் செய்வோமா!!

**கலாபூஷணம்**
**திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு**

## இரா உதயணன் இலக்கிய விருது விழா - 2017 நிகழ்வில்...









# அரங்கமும் மனிதமேம்பாடும் ஒரு கண்ணோட்டம்

இன்று நாம் அரங்கமும் மதிப்பீடுகளின் நெருக்கடி என்கிற இறுக்கமான காலகட்டத்தை சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். வன்முறையும் மனித உறவுச் சிக்கல்களும் மிகுந்து நம்முடைய தொடர்புகளுக்கான வழிகள் இறுக்கமாகிக் கொண்டு வருகின்றன. இன்றைய உலகமயமாக்கல் சூழலில் தனிமனிதன் தன்னுடைய வேர்களை இழந்து தனிமையில் உழன்று கொண்டிருக்கின்றான். அவனுடன் ஒரு அந்தரங்கமான உரையாடல் என்பது சாத்தியமற்றதாக உள்ளது.

உண்மையில் இன்றைய மனிதன் தன்னுடைய அடிப்படையான தத்துவார்த்த உறுதிப்பாட்டை இழந்தவனாக, நிரந்தரத்துடன் தன்னுடைய பிடிப்பை இழந்தவனாக தன்னுடைய காலடிப்பிடிப்புகள் கூட அற்ற நிலையில் உள்ளவனாக இருக்கிறான். வீணுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றோம் என்று தெரியாமல் அவன் காத்துக் கொண்டிருக்கிறான். ஒரு சாராம்சமான அம்சத்தைச் சொல்ல வேண்டியதன் அவசியம் அவனை வாட்டுகிறது. ஆனால் அவன் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நினைவு கூர்வதில் ஒரு முக்கிய விஷயம் இருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் நினைவு கூர்வதற்கு ஒன்றுமில்லை. அவன் எங்கோ சென்று, எதையோ தேடி, தன்னுடைய அடையாளத்தை திரும்பப் பெறப்போவதாகத் தன்னிடமும் மற்றவர்களிடமும் பொய் சொல்லிக்கொள்கிறான். தனக்கு நெருக்கமானவர்களை தான் நன்கு அறிந்ததாக நினைக்கிறான். ஆனால் யாரையும் அவன் அறிந்திருக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

உடலும் மனமும் அந்நியமாகிப் போன இத்தகைய ஒரு சூழலில் தன்னுடைய உடல் தன்மையின் லயத்திலிருந்தே அவன் மீட்புக்கான சாத்தியங்களை முன்வைக்கிறது. ஓசைகளும் அசைவுகளும் கொண்ட ஒரு செறிவான மனித இயக்கம் அங்கு சாத்தியப்படுகின்றது. நெடுந் தூரத்திலிருந்து ஒலிக்கும் விவசாயப் பெண்ணின் பாடலில் உள்ள சோகம் ஒரு கவிஞனின் மனத்தை அலைக்கழிக்கிறது.

இன்று பறை, துடும்பு, தம்பட்டம் போன்ற இசைக் கருவிகள் விடுதலை உணர்வின் குறியீடாக நாடகங்களில் ஒலிக்கின்றன. நம்முடைய நாட்டுப் புறக் கூத்துக்கள், நடனம், நாடகத் தன்மை, கதை சொல்லுதல், பாடல், பாலியல்தன்மை, மதம் எல்லா வற்றையும் உள்ளடக்கி அதிகபட்ச பங்கு கொள்ளு தலை உறுதி செய்வதை இங்கு நாம் பார்க்க வேண்டும்.



நம்முடைய சமூகத்தில் பல்வேறு காரணங்களால் வாழ்க்கைத் தரம் கட்டுப் பட்டதாக இருக்கின்றது. கலாசார ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் ஒடுக்கப்பட்டதாக இருக்கிறது. கலை அனுமதிக்கிற அபூர்வமான சில தருணங்களில்த்தான் அவன் தன் தளைகளிலிருந்து வெளிப்படுகின்றான். ஒரு விதத்தில் கலை வெளிப்பாடு என்பது பொழுதுபோக்கு என்கிற அம்சத்தைத் தாண்டி ஒரு விதமான இயற்கையைச் சரிக்கட்டும் போக்காக இருக்கின்றது. கலாசார ரீதியாகவும் சமூக ரீதியாகவும், ஒடுக் கப்பட்ட உணர்வுகளுக்கான ஒரு வடிகாலாக இந்த அனுபவத்தை அவன் எதிர்கொள் கிறான். ஒடுக்கப்பட்ட மனிதன் தன்னுடைய வாழ்வியல் பிரச்சினைகளைத் தாண்டி இங்கு தான் தன்னை ஒரு முழு மனிதனாகப் பார்க்கிறான். எங்கே அவனுக்கு விடுதலை நிகழ்கிறதோ அது அவனுடைய உடனடி எல்லைகளைத் தாண்ட அவனுக்கு அனுமதி வழங்குகின்றது. ஒரு வகையில் கட்டுப்பாடுகள் விலக்கப்பட்ட இடமாக இது இருக்கிறது.

அவனுடைய உடலும் மனமும் பெறும் திளைப்பை பார்வையாளனும் பெறுகிறான். நடிகனின் சுதந்திரம், பார்வையாளனின் சுதந்திரமாக இருக்கிறது. ஒரு சமூகத்தின் நினைவுகளுக்கு உயிரூட்டி செயலூக்கம் வழங்குவதற்கான உந்துதலை அரங்கம் கொண்டிருக்கிறது.

தொன்மங்கள் வீறு கொண்டு எழும் காலகட்டமாக இது உள்ளது. இன்றைய பயன்பாட்டுக் கலாசாரத்தால் நம்மைச் சுற்றியுள்ள இயற்கை மாசுபடுத்தப்படுகிறது. காடு, மணல், பாறைகள், நீர்நிலைகள் ஆகியவை நாசப்படுத்தப்படுகின்றன. ஆதி இனங்கள் அழிக்கப்படுகின்றன. இந் நிலையில் நம்முடைய தொன்ம விளக்கக் கலைகள் மறு விளக்கம் பெற சூழலாக இது இருக்கிறது. விளிம்பு நிலை மக்கள் சமூக நீரோட்டத்தில் இணைக்கிற இடமாகவும் இது இருக்கிறது. நம்முடைய நாட்டார் மரபுகள் என்றைக்கும் அவர்களை உள்ளடக்கியதாகவே உள்ளன. சடங்குகள் சார்ந்த நம்முடைய தொன்மை அரங்கம் அதீத நிலைகளுக்கான ஆற்றுதல் தன்மை கொண்டு ஸ்பரிசம் மற்றும் கூட்டுணர்வுக்கான தளமாக விளங்குவதை நாம் பார்க்க முடியும்.

முக்கியமாக ஒன்றைக் குரல்களில் ஆதிக்கங்களும் அபாயங்களும் பெருகி வருகிற இன்றைய சூழலில் பன்மைக் குரல்களும், சிறுகதையாடல்களும் செயற்படும் தளமாக அரங்கம் இயங்குவதற்காக சாத்தியங்கள் உள்ளன. கண்முன்னே நிகழ்த்தப்பட்டு நேரடியான உறவு நிலைகளை உறுதி செய்யக் கூடிய அரிய கலையாக அரங்கம் இருந்தால் இன்று வேகமாகச் சென்றடையக்கூடிய காட்சி ஊடகங்களின் ஆக்கிரமிப்புகளால் அரங்கத்தின் இருப்பும், செயற்பாடும், பின்னடைவு கொண்டதான தோற்றமும் உள்ளது. இனக்குழு சமூக அமைப்பிலிருந்து விஞ்ஞானம் தனி மனிதனை விடுவித்ததுமே இனக்குழுவின் அடையாளமாகப் பேணப்பட்ட அரங்க செயற்பாடுகள் மாறுதலைச் சந்தித்தன.

விஞ்ஞானம் தனிமனிதனின் ஈடுபாடுகளை பல தளங்களிலும் விரிவு படுத்தினாலும் இன்று தனிமை, மன அழுத்தம், உறவுகளின் சிதைவு, மரணபயம் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டுள்ள தனிமனிதன் மீண்டும் மனித ஸ்பரிசம் மற்றும் கூட்டுணர்வுக்கான தளங்களை நாட வேண்டிய தேவை உள்ளது. அவ்வகையில் உடலின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் ஆத்மலயத்தையம் விழிப்படையச் செய்து சுயச்சார்பையும் நம்பிக்கைகளையும் மீட்டெடுக்க ஒரு அரங்கின் அண்மையே தேவைப்பட்டதாக உள்ளது. அந்த அண்மையை உருவாக்கும் தளங்கள் குறித்த கவனத்தையே இன்று அரங்கம் ஆராய வேண்டும். ஆனால் அது தனி மனிதன் எட்டும் தூரத்தில்த்தான் உள்ளது.


இன்று வேலைசெய்யும் இடங்களில் கூட வேலை அழுத்தத்தைக் குறைக்கவும் செயல்திறனை அதிகப்படுத்தவும் அரங்க செயல்முறை பயன்படுத்தப்படும் நிலை உள்ளது. குறைந்த பட்சம் நம் உடலே எமக்கு அந்நியமாய்ப் போய்க் கொண்டிருக்கிற நிலையிலிருந்து உடலின் ஆற்றல்களை நாம் மீண்டும் ஒன்று திரட்ட வேண்டியுள்ளது. அரங்கம் அதற்குள் ஒரு மகிழ்ச்சியான சூழலைக் கொண்டு வருகின்றது. இன்றும் மனப்பிறழ்வு, ஊனம் ஆகியவை கொண்ட விளிம்பு நிலை மனிதர்களையும் சமூக நீரோட்டத்தில் இணைப்பதற்கான உத்திகளையும் அரங்கம் மேற்கொள்ள முடியும். ஒரு படைப்புச் செயற்பாட்டில் பங்குகொள்ளும்போது அவர்களிடம் மறைந்திருந்த ஆற்றல்களை அது நினைவுபடுத்தி அவர்களுடைய நம்பிக்கைளைப் புதுப்பிக்க முடியும்.

இன்று உலகின் கவனம் மீண்டும் மனித நேயப் பண்புகள் பக்கம் திம்பியிருக்கிறது. மனிதவள மேம்பாட்டுக்கான சாத்தியங்களை அதிகரிப்பது குறித்த உலகின் கவனம் தீவிரப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு நுண்கலைகள், நாடகம், இலக்கியம், தத்துவம், சரித்திரம் ஆகியவை குறித்த நம் அறிவுமுறைகள் கூர்மைப்பட வேண்டியுள்ளது. அரங்கம் அந்தப் பயணத்தை அண்மைப்படுத்தும் சாத்தியங்கள் கொண்டிருக்கிறது.

**- வெளி ரங்கராஜன்**

**இலங்கையைப் பொறுத்தளவில் தமிழ் அரங்கச் செயற்பாடுகள் முயற்சிக் குறைவினால் திருப்பதிகரமாக முன்னெடுக்கப்படுவதில்லை என்று பரவலாகப் பேசப்பட்டாலும் கலைஞர்களை ஒன்று திரட்டி முன்னெடுக்கப்படுவதில் உள்ள சிரமங்களால் அரங்கச் செயல்கள் மந்தகதியிலேயே உள்ளன என்பதே உண்மை.**

**குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம் 21.01.2018 அன்று நடத்திய 50வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதன் அவர்களுக்கு 'இலக்கிய செல்வர்' என்னும் விருது வழங்கிச் சிறப்புச் செய்துள்ளது.**




குரும்பசிட்டி பெற்றெடுத்த
குறுங்கதையின் பிதாமகனார்
குன்றாத புகழ் கொண்டு
வாழுகின்ற பெருமகனார்
தலைமுறைகள் தளைப்பதற்கு
பசளையிட்ட பண்பாளர்,
தனக்குரிய பாணியிலே
அறிவுரைகள் வழங்கிடுவார்.
தரணி போற்றும் தகைசார் பெருந்தகையை
'தாயக ஒலி' யும் வாழ்த்திப் போற்றி மகிழ்கிறது.

# புது உலகம் படைப்போம்

பெண்ணியம் பற்றிப் பேசுகின்ற
பித்தரைப் பார்க்கின்றேன் அவர்தம்
கண்ணியம் அற்ற பேச்சுக்களில்
கவிதை கதை கட்டுரைகளில்
பெண்ணுக்கு சமஅந்தஸ்து சமஉரிமை
பெற்றுத் தரவே போராடுவது
எண்ணினில் இனித்திடும் வீட்டினிலோ
எதற்கும் அடிஉதை மனைவிக்கு!

இப்படி எத்தனை சமுதாயத்தில்
இனிப்புப் பேசிடும் பேச்சாளர்கள்?
செப்பிடும் வார்த்தைகள் மட்டுமிங்கே
சீர்கொண்டு வந்திடுமா கேளுங்கள்
பாப்பாபாரதி போலிங்கு ஒருகவிஞன்
பாரினில் பிறந்திங்கு வரவேண்டும்!
இப்பிறப்பில் இதுசாத்தியமா என்றிங்கு
எண்ணிநான் ஏங்குகின்றேன் கன்னியரே!

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும்
நீதியை நிலைநாட்ட பாரினிலே
அஞ்சாமல் பேசிடும் வார்த்தைகளும்
அறிவை ஊட்டுமா பெண்களுக்கு?
கஞ்சிக்கு வழியில்லை ஆயினுமவர்
கால்வயிறு நிறைவது பேச்சாலே
வஞ்சியர் வாழ்ந்திடவே போராடி
புதுமைப் பெண்ணைப் படைத்தாரடி!

அவர் பாட்டைக் கேட்டுநாம்
அறிவின்றி இன்னமும் தூங்குகின்றோம்!
சுவர்ணமும் நகையும் கேட்டவர்
சொன்னதைத் தரச்சொல்லி அனுப்பிடுவார்
இவரெல்லாம் மானிடர் என்றிடலாமோ?
இல்லறம் இனிதாய் நடத்திடலாமோ?
சுவர் இன்றிச் சித்திரம் எதுக்கடி
சுந்தரி சற்றுநீயும் சிந்தியடி!

ஆணுக்குப் பெண்நிகர் என்றிடலாமா?
அவளுக்கு ஈடுஇணை யாரிங்கே?
பெண்ணுக்கு ஆண்நிகர் இல்லையடி!
பெற்று வளர்ப்பவள் அவளடியோ!
கண்ணுக்குள் மணியாக வைத்திடாவிடில்
காலால் உதைத்து அனுப்பிடடி!
பெண்ணுக்குள் சக்தியும் உறைகின்றாள்
பெருமையும் வணக்கமும் உனக்கடியோ!

எத்தனை தேவியர் உன் வடிவம் இங்கு
எழில்பெற்ற வணக்கத்துக் குரியவர்கள்
சுத்தமும் நேர்மையும் உனக்கிருந்தால்
சொல்லிடும் வார்தையும் தூய்மையாம்!
புத்தரைத் தங்கமாய் மாற்றிவிடும்
பாரினில் ஈடு இணை யாரிங்கே?
புத்தராய்போகட்டும் போதிமரம் நடட்டும்
புது உலகம் படைப்போம் நாமிங்கே!

**சந்தாதாரருக்கு அன்பு வேண்டுகோள் :**

**ஐந்து வருடங்களைத் தாண்டி ஆறாவது வருடத்தில் தடம் பதித்துள்ளோம். உங்கள் சந்தாப் பணத்தினை எமது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு, வங்கிப் பிரதியை எமக்கு அனுப்பி வைத்து மேலான ஆதரவைப் பெருந்தன்மையுடன் நல்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.**

**- ஆசிரியர் குழு**

# நவீனத்துவம் (Modernism)

பேரா.எஸ்.தோதாத்ரி, எம்.ஏ.

நவீனத்துவம் பற்றிய விவாதம் தமிழில் குறைவாக உள்ளது. அது அண்மைக் காலத்தியதும் கூட, தற்காலத் தமிழ், இலக்கியத்தில் இது புதுக்கவிதையின் தோற்றத்துடன் இணைந்து காணப்படுகிறது. என்றைக்கு மகாகவி பாரதி வசன கவிதை என்ற வடிவத்தினைப் பரிசோதனை செய்யத் தொடங்கினானோ அன்றே நவீனத்துவம் துவங்கிவிட்டது என்று கூடக் கூறலாம். புதுக்கவிதையில் இதன் தாக்கத்தை இன்று வரையிலும் காணலாம். இன்றைய சிறு பத்திரிகைகளில் எழுத்து, நிகழ், மேலும், கல்குதிரை, கசட தபற, கணையாழி போன்றவற்றில் இது வளர்ந்து வருவதைக் காண முடியும். தற்காலத் தமிழ்க் கவிதைக்கு அடுத்த படியாக தற்காலத் தமிழ் நாடகத்தில் பரிசோதனை நாடகங்களில் - இதன் பல அம்சங்களைக் காண முடிகிறது. ஆனால் தமிழ்ச் சிறுகதையிலும் நாவல் இலக்கியத்திலும் யதார்த்த வாதம், இயல்பு நெறி இரண்டும் அதிக வலுவாக உள்ளன. ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, நகுலன், இந்திரா பார்த்தசாரதி ஆகியோரது படைப்புக்களில் இதன் அம்சங்கள் காணப்படலாம். அவர்களது படைப்புக்களில் யதார்த்த வாதத்தின் கூறுகளோ அல்லது இயல்பு நெறியோ தான் அதிகம் காணமுடியும்.

எனவேதான் நவீனத் தமிழ் இலக்கியத்திலும் நகுலன், பிரம்மராஜன், விக்கிரமாதித்தன், அபி, அப்துல் ரகுமான், தருமு சிவராமு, ஞானக்கூத்தன், சுந்தர ராமசாமி ஆகிய பல எழுத்தாளர்களின் படைப்புக்களில் றியலிஸ்டுகளின் கருவிகள் காட்சிகள் நமக்குக் காணக் கிடைக்கின்றன.

## நவீனவாதம்

ஒரு நூற்றாண்டு காலத்து மேற்கத்திய நவீனவாதம், தேவையற்ற பழமைவாத மரபுகளை ஒதுக்கி, தனக்கு முந்தைய மிகைக் கற்பனைவாதம், யதார்த்தவாதம், இயற்கைவாதம் முதலியவற்றைக் கடந்து, தன்கால கட்டத்திய இஸங்களின் சில கூறுகளை தன்னிடம் ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த கோட்பாட்டோடு பொருத்திக்கொண்டு பன்முகத் தன்மைகள் பெற்ற ஓர் இலக்கிய இயக்கமாக வளர்ந்தது.

மேலைநாடுகளில் பிறப்பெடுத்த நவீனவாதம், தமிழ்நாட்டில் கால்கோளியதை இனிக்காண்போம். 1883 ஆம் ஆண்டிலிருந்து 1953ஆம் ஆண்டுவரை உள்ள எழுபது வருடங்கள், தமிழ் மலர்ச்சிக்கான காலகட்டம் எனப் பகுத்துக் கூறுகிறார். க.நா.சுப்பிரமண்யம்.

கிறிஸ்துவச் சமயக் குழுவினரால் மதப்பிரசாரப் பணிக்காக ஏற்கனவே தமிழ்நாட்டில் ஸ்தாபிக்கப் பட்டிருந்த அச்சுவாகனத்தால் இந்த மறுமலர்ச்சிக் காலத்தில் உ.வே.சாமிநாத ஐயர் தாம் திரட்டிய பழந்தமிழ் ஓலைச்சுவடி இலக்கியங்களை அச்சில் பதிப்பித்தார். ஆங்கிலேயர் கல்வி வழியாகவும் இதழ்கள் பத்திரிகைகள் நூல்கள் வாயிலாகவும் மறுமலர்ச்சிச் சிந்தனைகள் தமிழ் மக்களிடம் வெகுவாகச் சென்றடைந்தன.

மறுமலர்ச்சிக் காலத்திற்குப் பிறகு, சீர்திருத்தக்காலம் பிறந்தது. அ:ப்போது சுயமரியாதை இயக்கம், தமிழ்த்தேசிய இயக்கம், தனித்தமிழ் இயக்கம் முதலான இயக்கங்கள் தோன்றி, தமிழ்நாட்டில் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பின.

மறுமலர்ச்சிக்காலம் - சீர்திருத்தக்காலம் முதலானவற்றை அடுத்து, தமிழகத்தில் நவீனவாதம் உருவாகியது. அறுபதுகளில் தோன்றிய இந்த நவீனத்துவ இலக்கியப் போக்கு இன்று வரை தமிழ்நாட்டில் நீடித்து வருகிறது.

மறுமலர்ச்சிக் காலத்தில் சி.சுப்பிரமணிய பாரதியார் 'காட்சி' என்ற தலைப்பில் வசன கவிதையைத் தமிழில் தோற்றுவித்தார். 1933 இல் பிறந்த 'மணிக்கொடி' தன்னை ஒரு மறுமலர்ச்சிச் சிற்றேடாக அறிவித்துக் கொண்டது. அதில் ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன் முதலியோர் பாரதியைப் பின்பற்றி வசன கவிதைகளை எழுதினார்கள்.

1959இல் சி.சு.செல்லப்பா தோற்றுவித்த 'எழுத்து' இதழும் புதுக்கவிதையை வளர்த்தெடுத்தன. கோவை 'வானம்பாடி' கவிஞர்களும் புதுக்கவிதையை மார்க்சிய உள்ளடக்கத்துடன் வாசகர்களிடம் செல்வாக்குப்பெற வைத்தனர். அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியாலும், போக்குவரத்து மேம்பாட்டாலும், நவீன உலகம் ஒரே பந்தாகச் சுருக்கம் பெற்றது. இந்த உலகில் வாழ்கின்ற நவ மனிதனின் அக புறச் சிக்கல்களைப் பாடிய புதுக் கவிதைகள் எண்பதுகளில் நவீன கவிதைகள் எனப் பெயர் மாற்றம் பெற்றன.

வசன கவிதை, கவிஞருடைய மனக்குரலின் ஏற்ற இறக்கத்தைக் காட்டும் புதுக்கவிதை, கவிதைக் காரனின் பேச்சுச் சத்தத்தை வெளிப்படுத்தும் நவீன கவிதை, கற்கால மனிதனின் அகச்சிடுக்குகளையும், புற நெருக்கடிகளையும் மௌனப் படிமங்களாகக் காட்சிப்படுத்தும்.

எண்பதுகளின் மத்தியிலிருந்து நவீன கவிதைகளோடு ஜப்பானியரிடமிருந்து பெறப்பட்ட மூன்று வரி ஹைக்கூ கவிதையும் உறவாடி வருகிறது.

நவீன சிறுகதை, மறுமலர்ச்சிக் காலத்தில் வ.வே.சு.ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' கதையிலிருந்து துவங்குகிறது. பி.எஸ்.ராமையாவின் கதை 'மணிக்கொடி' தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் வடிவம், உள்ளடக்கம், நடை முதலியவற்றில் சோதனை முயற்சிகளை ஊக்குவித்தது.

தமிழ்நாட்டின் எழுபதுகள், சிற்றேடுகளின் பொற்காலம் எனலாம். அவை நவீன சிறுகதைகளை மிகவும் செழிக்க வைத்து, அவற்றில் நவீனத்துவ அழகியலையும், பொதுவுடைமை முற்போக்குச் சிந்தனைகளையும் மேலோங்கச் செய்தன. எண்பதுகளின் மத்தியிலிருந்து அமைப்பியல், பின்நவீனத்துவம், பெண்ணியம், சூழலியம் போன்ற கோட்பாடுகள் சிற்றிதழ்கள் ஊடாக, தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் கண்டன. தொண்ணூறுகளில் தலித்தியம் புத்துணர்ச்சி பெற்றது. நவீன தமிழ் அரங்கை கூத்துப்பட்டறை ந.முத்துசாமி, பேராசிரியர் இராமானுஜம், டாக்டர்அ.மங்கை, இந்திரா பார்த்தசாரதி, இன்குலாப் முதலானோர் வளப்படுத்தப் பங்காற்றினர்.

தமிழ்நாட்டின் இன்றைய நவீனத்தமிழ் இலக்கியம் இலக்கிய வகைகளிலிருந்து தன்னைக் கட்டவிழ்த்துள்ளது.

**இராம.கண்ணபிரான் (சிங்கப்பூர்)**

# தரிசனம்

தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களில் சிலவற்றை வாங்கிச் சேகரிப்பதில் அலாதியான பிரியம். வாங்கிய காலத்தில் மேலோட்டமாகப் பார்த்துவிட்டு அப்படியே வைத்துவிடுவேன். தேவை கருதி இடையிடையே சில தகவல்களைப் பெறுவதற்காக எடுத்துப் பார்ப்பது உண்டு.


கடந்த கால எழுத்தாளர்களையும் அவர்களின் இலக்கியப் போக்குகளையும் அறிய வேண்டும் என்ற ஆர்வ மேலீட்டினால் அவர்கள் எழுதிய ஓரிரு நூல்களை மட்டும் படிப்பதால் அவர்களைப் பற்றிய புரிவு ஏற்படும் என்று எண்ணிய போதிலும், அது முழுமையானதாக இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன்.

பழைய சிற்றிதழ்களை ஆற அமர இருந்து முழுமையாக வாசிக்க எண்ணி அண்மைக் காலமாக அதை ஆரம்பித்துள்ளேன். இதனால் தமிழகத்தின் முதுபெரும் எழுத்தாளர்களின் இலக்கியம் சார்ந்த, சாராத இருப்புக்களை ஓரளவுக்குத் தெரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. மேலும் அக்காலச் சஞ்சிகைகள் மக்கள் மத்தியில் எவ்வித தாக்கங்களை ஏற்படுத்தின. அவற்றின் ஆசிரியர்கள் சிற்றேடுகளைக் கொண்டு நடத்துவதில் எதிர்கொண்ட இடர்பாடுகள் போன்ற பல விடயங்களை அறிந்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. அன்றைய பிரபலமான எழுத்தாளர்களைப் பற்றியும் அவர்களுக்குக்கிடையேயிருந்து வந்த முரண்பாடுகளும் கருத்து வேறுபாடுகளும் பற்றிய பல தகவல்களையும் தெரிந்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. எழுத்தையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்த எழுத்தாளர்கள் வறுமையிலேயே கடைசிக் காலத்தில் இருந்துள்ளார்கள் என்பதை அறியும்போது ஒருவித வேதனை மனதில் உருவாகியுள்ளதையும் மறைப்பதற்கில்லை. இத்தகைய நிலையில் எழுத்தாளர்கள் சஞ்சிகையாளர்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டி 'தாயகஒலி' வாசகர்களுடன் அவற்றைப் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணி **அறிந்தைச் சொல்லவந்தோம்** எனும் பகுதியைத் தொடர்ந்து முன்வைக்க எண்ணியுள்ளேன்.

**- தேடலோன்**

**அறிந்ததை சொல்ல வந்தோம்**

# வல்லிக்கண்ணன்



வல்லிக்கண்ணன் அவர்கள் படைப்பாளி என்ற வகையில் எல்லோராலும் அறியப்பட்ட மனிதர். அவரிடம் வேறும் பல ஆற்றல்களும் இருந்ததுடன் மனிதநேயப் பண்பும், ஒழுக்கம் மிக்க வாழ்க்கையுடன் கூடிய நல்லெண்ணமும் கொண்டவர். எல்லோரிடமும் அன்பாகப் பேசும் ஒரு பண்பாளர் என்று சொன்னால் அது மிகையாகாது. எத்தகைய நிலையிலும் தன்னை மாற்றிக் கொள்ளாமல் சாதாரண மனிதராகவே தம்மைக் காட்டிக் கொள்ளுவார். தமிழக எழுத்தளர்களைப் போலல்லாமல் வித்தியாசமான தனித்துவம் மிக்க சிறப்புடன் வாழ்ந்து காட்டினார்.

வல்லிக்கண்ணன் மேடையில் பேசும்போது, மடைதிறந்த வெள்ளம் போல் மூச்சு விடாமல் ஏற்ற இறக்கம் இல்லாமல் ஒரே சீராகப் பேசுவார். ஒரு முறை ஆய்குடி அமர்சேவா மாணவர்கள் பாடசாலையில்

நடைபெற்ற நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தார். நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பாகவே அந்தப் பாடசாலைக்குச் சென்ற வல்லிக்கண்ணன் பள்ளியைச் சுற்றிப் பார்க்க வேண்டும்; உடல் குறைபாடுள்ள மாணவர்களுக்கு, குறிப்பாக மூளை வளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு எவ்வாறு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பியமையால் நிர்வாகத்தினர் அவரை அழைத்துச் சென்று, ஒவ்வொரு வகுப்பறையிலும் பாடம் நடப்பதைக் காட்டினார்கள். வல்லிக்கண்ணனும் ஆர்வத்துடன் வகுப்பறைக்குள் சென்று சில மாணவர்களுடன் உரையாடினார். குறிப்பாக மனநலம் குன்றிய, மூளை வளர்ச்சியற்ற மாணவர்களிடம் ஆர்வத்துடன் கதைத்தார்.

மூன்று மணிக்கு அப்பள்ளியின் கலையரங்கில் நிகழ்ச்சி நடைபெற்றது. வல்லிக்கண்ணன் அந்நிகழ்ச்சியில் பேசுவதைத் தவிர்த்து அன்று, உடல் குறைபாடுள்ள அந்த மாணவர்களுக்கு உணர்ச்சிமயமான ஒரு தேர்ந்த கதை சொல்லியின் லாவகத்துடன் சில நாட்டுப்புறக் கதைகளையும் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நீதிக்கதைகளையும் ஏற்ற இறக்கமான வட்டார வழக்கு மொழி நடையில் சொன்னார். அவர் சொன்ன கதைகளை அந்த மாணவர்கள் ரொம்பவும் ரசித்துக் கேட்டார்கள்.

வல்லிக்கண்ணன் சென்னைக்குத் திரும்பி வந்ததும் ஆய்குடி அமர் சேவா சங்கப் பாடசாலை நிர்வாகத்திற்கு ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை அனுப்பி வைத்துள்ளார். வல்லிக்கண்ணன் அவர்களின் பொருளாதார நிலை மிகவும் கீழ்மட்டத்தில் இருந்த போதிலும் அவர், மூளை வளர்ச்சி குன்றிய மாணவர்களுக்குத் தன்னால் இயன்ற பொருள் உதவியை எவ்வித விளம்பரமும் இன்றிச் செய்துள்ளார் என்றால் அவரின் பெருந்தன்மையை எவ்வாறு சொல்ல முடியும்.

வல்லிக்கண்ணன் ஏராளமான நூல்களுக்கு அணிந்துரைகளை எழுதித் தள்ளியிருக்கிறார். வாழ்நாள் முழுவதும் பெரும் பொருளாதார சிரமத்திலேயே அவர் இருந்தார். அணிந்துரை எழுதியதற்காக யாரும் அவருக்கு சன்மானம் கொடுத்தது கிடையாது. அத்தகைய மரபு தமிழில் இல்லை. அணிந்துரை என்பது எப்பொழுதும் இலவசப் பணிதான். அதுமட்டுமல்ல அவர் அணிந்துரை எழுதிய பல படைப்புக்கள் நூலான பின் அதன் ஒரு புத்தகப் பிரதிகூட அவருக்கு அனுப்பப்படவில்லையாம்.

வல்லிக்கண்ணன் அணிந்துரை எழுதிய நேரத்தில், படைப்பிலக்கியம் படைத்திருந்தால் இன்னும் எத்தனையோ நாவல்களும் சிறுகதைகளும் எழுதியிருக்கலாம். ஆனாலும் இளம் படைப்பாளிகளைக் கடிதங்கள் எழுதியும் அணிந்துரை வழங்கியும் ஊக்குவிப்பதை அவர் ஒரு வாழ்க்கைக் கோட்பாடாகக் கொண்டிருந்தார். எண்ணற்ற இளம் படைப்பாளிகள் அவரால் உத்வேகம் பெற்றவர்கள் என்பதல் இலக்கிய உலகில் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை. ஆனால் அவர் எழுதிய அணிந்துரைகளெல்லாம் வாழ்த்துக்கள். அவரிடம் மிகச் சராசரியான நூலுக்கெல்லாம் கூட இப்படி அணிந்துரை கொடுக்கின்றீர்களே? என்று ஒரு இலக்கிய நண்பர் அவரிடம் கேட்டாராம். அதற்கு வல்லிக்கண்ணன் "ஒரு மங்கலச் சொல் சொல்லி ஊக்குவிப்போம். வளரும் செடி வளரட்டும். வளராவிட்டால் அது தன் விதி. தொடக்கத்திலேயே முளையைக் கிள்ளவது சரியல்ல. பெரும்பாலும் நான் புதிய இளம் எழுத்தாளர்களுக்குத் தான் அணிந்துரை வழங்குகிறேனே தவிர சாதனையாளருக்கல்ல என்று கூறியுள்ளார். இளம் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டியர்கள் என்று வல்லிக்கண்ணனின் நோக்கம் முன்மாதிரியானதே!

# தனிமை பற்றி ஒரு எழுத்தாளர்

பேப்பர் மீது என் பேனா அதீத காதல் கொண்ட காலத்தில், நான் தெரிந்து கொண்டது எழுத்தாளனுக்கு வேண்டியதெல்லாம் தனிமை. தனிமையைத் தவிர வேறொன்றுமில்லை என்பதை உணந்துள்ளேன். தனிமையில் படைக்கப்படுவதை ஒரு பெரிய கும்பலே கூடி வாசிக்க வேண்டும் என்று படைப்பவன் நினைக்கவில்லையானால் அவன் எழுத்தாளனே இல்லை. "என் எழுத்து எனக்கு மட்டும்தான். நான் வேறு யாருக்காகவும் எழுதவில்லை" என்று சொல்வதெல்லாம் எனக்கு ஒரு பம்மாத்து வேலையாகவே தெரிகிறது.

எழுத்தின் ரகசியம் தனிமை. இந்த ரகசியத்தைப் பற்றி தெரிந்து கொள்ளவே எனக்குப் பல ஆண்டுகள் ஆயின. புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்திலும் உலக நகரமாம் ஆரோவில்லும் வாழும் பல மாநில பல நாட்டு எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் தனிமையில் தான் வசிக்கிறார்கள். இவர்கள் அனைவருமே என் நண்பர்கள் என்பதால் இவர்களிடம் அவர்கள் வாழ்க்கை முறை பற்றி பல கேள்விகளை வாய்ப்புக் கிடைக்கும் வேளைகளில் கேட்டு விடுவதும் உண்டு.

என் அமெரிக்க நண்பர் ஒருவரிடம் "எத்தனை நாட்களுக்குத்தான் தனிமையில் வாழ்க்கை நடத்துவாய்" என்று கேட்டபோது... "நான் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேன் என்று நீ ஏன் நினைக்கிறாய்? என்னுடைய நூலாகத்தில் எவ்வளவு எழுத்தாளர்கள், அறிஞர்கள் குடியிருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியாதா என்ன? காலையிலிருந்து மாலை வரை சில நாட்களில் நடுராத்திரி வரை என் கம்பியூட்டரோடு தான் உறவாடிக் கொண்டிருக்கிறேன். தனிமையை அனுபவிப்பவனுக்குத்தான் அதன் இனிமை தெரியும்" என்று கூறியிருந்தார்.

எழுத்தாளனைப் பொறுத்தளவில் அவன் எத்தனை பேர் மத்தியில் இருந்தாலும் அவன் உலகம் முகட்டுவளையில் தான். மற்றவர்களுக்கு அவன் என்ன முகட்டுவளையையே வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண்டிருக்கிறான் என்று தோன்றலாம். அவர்களுக்குத் தெரியாத செய்தி அவன் முகட்டு வளையில் தன் உலகத்தையே சிருஷ்டி செய்து கொண்டிருக்கிறான் என்பது. ஆக ஒவ்வொரு எழுத்தாளனும் அவனது உலகத்தில்த்தான் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறான். படைப்பு முடிந்து அது பூலோகத்திற்கு மற்றவரின் பார்வைக்கு வரும் வரை அதை யாராலும் தரிசிக்க முடியாது.



எழுத்தாளர்கள் தனிமையை எப்படியெல்லாம் புரிந்துகொண்டிருக்கின்றார்கள் என்று தெரிந்து கொள்ள ஒரு எழுத்தாளருக்கு திடீரென்று ஆசை வந்து விட்டது. அந்த எழுத்தாளர் ஒரு புதுடில்லிவாசி. அங்கேயுள்ள தனது சக எழுத்தாளர்களுக்கு அவன்

வேண்டுகோள் விடுத்து, எல்லோரிடமும் தனிமையைப் பற்றி ஆளுக்கு ஒரு கட்டுரை வாங்கி அவை களைத் தொகுத்து ஒரு அற்புதமான ஆவண மாக்கியிருக்கிறார் பைசந்தத் பட்டேல். புத்தகத்தின் பெயர் சேஸிங் த குட்லைவ் (Chasing the goodlife: on being single). இந்நூல் 2006 ஆம் ஆண்டு வெளிவந்தது.

இந்தப் புத்தகத்தின் சிறப்பு அம்சம் என்னெவன்றால் இதில் கட்டுரை எழுதியுள்ள இருபத்தெட்டு எழுத்தாளர்களுமே எந்தவித ஒளிவு மறைவுமின்றி மனம் திறந்து பேசியிருக்கிறார்கள். எம் எழுத்தைத் தட்டிக் கேட்க யாருக்கும் எந்த உரிமையும் இல்லை என்ற துணிச்சலோடு எழுதியிருக்கிறார்கள்.

தனிமை பற்றி எழுத்தளார்கள் என்ன சொல்லியுள்ளார் என்பதைத் தெரிந்துகொள்ள இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்ப்பதே சிறந்து.

இப்படி எல்லாம் தனிமையில் தாம் காணுவதைப் பற்றி இன்றைய இந்திய எழுத்துலகம் பரவலாகப் பேச ஆரம்பித்து அசுர வேகத்தில் வளர்ச்சியைக் கண்டு கொண்டிருக்கிறது. இதைத் தான் சிங்கிள்டன் லிட்ரேச்சர் (Singleton on literature) என்று அழைக்கிறார்கள்.

**ராஜ்ஜா**
**புதுச்சேரி** ■

## வாய்விட்டுச் சிரிச்சால் நோய்விட்டுப் போகும்

பதினோராம் லூயி என்ற மன்னனை உலக சரித்திரம் படித்தோர் நன்றாகவே அறிவார்கள். இவன் ஏழாம் சார்லஸ் மன்னனு டைய மகன். அப்பாவுக்கு அழகான ஒரு வப்பாட்டி. அவள் பெயர் ஆக்னஸ். அழகான சித்தி மீது லூயிக்கு மையல் வந்துவிட்டது. ஒரு நாள் அவளிடம் ஏதோ எசக்குப் பிசக்காக நடந்து விட்டான். அவனுக்குப் போதாத நேரம் வந்து விட்டது. அப்பாவுடைய இரத்தம் குடிக்கும் கத்திக்குப் பயந்து கொண்டு இராத்திரியோட இராத்திரியாக பிரான்சு நாட்டிலிருந்து தப்பி பர்கண்டி நாட்டுச் சிற்றரசனின் அரண்மனையில் தஞ்சம் புகுந்தான். அப்பாவுடனே போன அன்பு, சிநேகிதர்களுடைய பிரிவு, இங்கே தனிமை இதெல்லாம் சேர்த்து கொண்டு லூயியை படுத்த படுக்கையாகப் போட்டுவிட்டது.

சிற்றரசனும் அரண்மனை வைத்தியர் கள் எல்லோரையும் அனுப்பி வைத்து லூயியைக் கவனிக்கச் சொன்னான். என்ன பிரயோசனம்! நாளுக்கு நாள் லூயியின் நிலைமை மோசமா கிக் கொண்டே போனது. இந்தச் சூழ்நிலை யில்த் தான் அந்தொனி டிலா சால் (Antoine dela sale) என்ற கதைசொல்லி அங்கு வந்து சேர்ந்தார். நிறையக் கதைகளை லூயிக்குச் சொன்னார். ஆக மொத்தம் நூறு கதைகள். பல பலவான விஷயம் சம்பந்தப் பட்டவை. அவன் சொன்ன கதைகளைக் கேட்டு லூயியும் நன் றாகச் சிரி சிரி என்று சிரிச்சான். அவனுடைய மனநோய் இருந்த இடம் தெரியாமலே ஓடிப்போய் விட்டது.

வாய்விட்டுச் சிரிச்சால் நோய்விட்டுப் போகும். கதைகளை மருந்தாக உபயோகிக்கப் படுத்திய அந்தொனி டிலா சால் ஆறு நூற் றாண்டுகளுக்கு முன்னாள் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்தவர். அவருக்குப் பின் தோன்றிய கதை செல்லிகளும் கதைகளைப் பொழுது போக்குக் காக மட்டும் சொல்லவில்லை மனநோயையும் குணப்படுத்த மருந்தாகவும் பாவித்தனர்.

நூல் அறிமுகம்

# சாதனை படைத்த சரித்திர நாயகி

## 01.10.1940 - 20.12.1955



மனித எண்ணங்கள் எல்லோருக்கும் விசாலமாக இருப்பதில்லை. ஒரு சிலருக்கு மட்டுமே அத்தகைய எண்ணங்கள் உதிக்கும். தாம் கற்ற கல்வியை இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று அர்ப்பணிப்புடன் வழங்குகின்ற ஆசானானவர் தெய்வத்தன்மை பொருந்தியவராக மதிக்கப்படுவார்.

*"தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந் தார்"*

நல்ல நூல்களைப் படித்து உலக அறிவு பெற்றவர்கள் அந்தக் கல்வியின் பத்தை மற்றவர்களுக்கும் தந்து மகிழ்வார்கள் என்கிறார் பொய்யாமொழிப் புலவர். இந்தப் பின்புலத்தில்த் தான், அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் கிராமத்தில் மூன்றாந்தரத்தோடிருந்த முஸ்லிம் பெண்கள் பாடசாலையின் தலைமை ஆசிரியையாக 1940 இல் பொறுப்பேற்று பாடசாலையின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு உழைத்து 1944இல் ஒரேயொரு மாணவியுடன் ஐந்தாம் தரத்தையும் ஆரம்பித்து, அம் மாணவியை புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை மட்டத்தில் முதலாமிடத்தில் சித்திபெறச் செய்து பாடசாலையின் பெயருக்கு மதிப்பைத் தேடிக்கொடுத்தார். மேலும் அந்த மாணவியின் கல்வியில் அக்கறைகொண்டு எஸ்.எஸ்.சி.வரை படிப்பித்து 1950ஆம் வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற பரீட்சைக்கு அனுப்பி முதல் முறையில் சிறந்த பெறுபேற்றுடன் சித்தியடைய வைத்து மீண்டும் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார்.

இலங்கையிலேயே முதலாவது முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயம் என்ற வரலாற்றுப் புகழ்மிக்க பெயரை 1950 ஆம் வருடமே பெற்றுக் கொடுத்து சாதனை படைத்த சரித்திர நாயகியான சிரஞ்சீவி அமரர் மகிழம்மா கிருஷ்ணானந்தன் அவர்களின் அழியாப்புகழுடைய சேவை வரலாற்று நூலை 62 வருடங்களுக்குப் பின் அவருடைய அன்புக்குப் பாத்திரமான மாணவி ஹாஜியானி மைமூனா காதர் செயினுலாப்தீன்(நல்லம்மா) வெளிக்கொணர்ந்துள்ளார். இது ஒரு வரலாற்றுச் சாதனை என்று சொன்னால் மிகையாகாது.

*"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலிற் பெரியது"*

அதாவது பயன் கருதாது தக்க சமயத்தில் செய்த உதவியை ஆராய்ந்தால் அது சமுத்திரத்தை விடப் பெரியதாகும். "பணிபுரி பலனை எதிர்பாராதே" என்ற மகாத்மாவின் வாக்குக்கு அமைவாக வாழ்ந்து காட்டிய அம்மணிக்கு "நன்றி மறப்பது நன்றன்று" என்ற வகையில் அவரின் வரலாற்று நூலைத் தந்து அவருக்கே காணிக்கையாக்கியுள்ளார் அவரின் மாணவி நல்லம்மா என்னும் மைமூனா.

"மனிதம் மறையவில்லை என்பதற்கு இம்மலர் ஒரு எடுத்துக்காட்டு. வரலாறு பெருமை கொள்ளும் மாதரசிகளில் மகிழம்மாவும் ஒருவர். முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாற்றை மாற்றி எழுதிய பெருமை மட்டுமல்ல மாற்றங்களின் நிலைபேறாய் இக்கல்லூரியை மாற்றியமைத்த மைமூனா

எனும் சரித்திர நாயகியை உருவாக்கிய பெருமையும் இவருக்கேயுண்டு" என்று கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் அல் ஹாஜ் எம்.ரி.ஏ.நிசாம் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் பகர்ந்துள்ளார்.

அறிமுகவுரையில் பாடசாலை பற்றியும், அதிபர், அசிரியர்களைப் பற்றியும், பொன்விழா பற்றியும் வேறும் பல தகவல்களை ஆதாரத்துடன் தந்துள்ளார் திருமதி மைமூனா அவர்கள்.

இந்நூலில் பல வரலாற்றுத் தடயங்களையும் அத்துடன் கல்வி வளர்ச்சிக்கு பேராதரவு நல்கிய பெரியார்களையும் நல்லாசிரியர்களையும் அறிமுகப்படுத்தி வெளிப்படுத்திய கருத்துக்களும், படங்கள் பற்றிய விளக்கங்களும் மனம் கொள்ளத்தக்க வகையில் பதிவாகியுள்ளன. பல வகைப்பட்ட விடயங்களை ஒன்றுடன் ஒன்றைத் தொடர்புபடுத்தித் தந்த விதம் அற்புதம். பொதுவாக நோக்குமிடத்து இந்நூல் ஒரு வரலாற்றுப் பொக்கிஷமாகவே பெருமை பெறுகிறது. 'நிந்தவூரின் வரலாறும் வாழ்வியலும்' என்னும் நூலைத் தந்து பெருமை பெற்று நிற்கும் கலாபூஷணம் ஹாஜியானி மைமூனா செயினுலாப்தீன் அவர்கள் இந்த நூலின் தொகுப்பாசிரியராக இருந்து அரும் பணியாற்றியுள்ளார். அவருக்குப் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் தெரிவிப்பதுடன் அவர் பல்லாண்டு நலத்துடன் வாழ்ந்து சமுதாய மேம்பாட்டுக்குப் பணியாற்ற எல்லாம் வல்லவன் துணைநிற்க வேண்டுகின்றேன்.

**- தம்பு சிவா**

**அறிந்ததைச் சொல்லவந்தோம்**

# 17 மில்லியன் குழந்தைகள் மூளை வளர்ச்சி குன்றியுள்ளனர்

**ஐ.நா.அறிவிப்பு**

தெற்காசிய வலய நாடுகளைச் சேர்ந்த சுமார் 12,202 ஆயிரம் குழந்தைகள் மாசடைந்த வாயுக்களை சுவாசிப்பதனால் மூளை வளர்ச்சியின்மைக் குறைபாட்டுக்கு ஆளாகியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாசடைந்த வளிமண்டல காற்றினைச் சுவாசிப்பதனால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குன்றுகிறது. குறிப்பாகக் கிழக்காசியா மற்றும் பசுபிக் வலய நாடுகளில் 4293ஆயிரம் குழந்தைகளும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் 314 ஆயிரம் குழந்தைகளும் மேற்கு மற்றும் வடஆபிரிக்க நாடுகளில் 55 ஆயிரம் குழந்தைகளும் மூளை வளர்ச்சியின்மையால் பாதிக்கப்படுவதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 17 மில்லியன் குழந்தைகள் நச்சு வாயுக்களை சுவாசிப்பதனால் மூளை வளர்ச்சி குன்றியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வான் மாசுகள் அல்லது வேறு வழிகளில் நுண்துகள்கள் கலந்த காற்றினைச் சுவாசித்தல் என்பனவே இத்தகைய தாக்கத்திற்கு முக்கிய காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாசுத் தன்மையுடைய காற்றினை சுவாசிப்பதனால் மூளை திசுக்கள் சேதமடைந்து மூளை வளர்ச்சி குறைபாடு ஏற்படுகின்றது. மூளையை மட்டுமன்றி நுரையீரலையும் விரைவில் பாதிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதுக்கவிதை வளர்ச்சி

பாரதியார் வசனக் கவிதைகளையே முன்வைத்தார். யாப்பைத் துறந்து வசனத்தில் கவிதை எழுத முயன்ற ஒரு பரிசோதனையாகவே இவற்றை ஏற்றுக்கொள்ள முடியும். தமிழில் ஒரு முன்மாதிரியான ஆரம்பமாகவே வசன கவிதைகள் தோற்றம் பெற்றன.

1934இல் புதுக்கவிதை எழுதத் தொடங்கிய ந.பிச்சைமூர்த்தி பாரதியின் காட்சிகளும், வால்ட் விட்மனின் வசன கவிதைகளும் ஏற்படுத்திய பாதிப்பே தம்மைப் புதுக்கவிதை எழுதத் தூண்டியது என்று கூறுகின்றார். தமிழில் முதலில் புதுக்கவிதை எழுதியவர் ந.பிச்சமூர்த்தி தான். புதுக்கவிதைக்குரிய 'நவீனத்துவம்' அவருடைய கவிதைகளின் வடிவத்தில் இருந்தது. பிச்சமூர்த்தியைத் தொடர்ந்து இதே காலகட்டத்தில் கவிதை எழுதிய கு.ப.ராஜகோபாலன், வல்லிக்கண்ணன் ஆகிய மூவரும் ஒரு வகையில் தமிழில் புதுக்கவிதைக்கு வழிதிறந்து விட்டவர்கள் என்ற வகையில் முக்கியமானவர்கள்.

பிறமொழிகளில் நடந்ததுபோலவே தமிழிலும் புதுக்கவிதை, இலக்கியச் சிற்றிதழ்களின் ஆதரவிலேயே தோன்றி வளர்ந்திருக்கிறது. ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளைப் பிரசுரித்ததின் மூலம் தமிழ் புதுக்கவிதைக்குத் தொட்டில் கட்டியபெருமை 'மணிக்கொடி'க்கு உண்டு.

1939இல் தோன்றிய 'சூறாவளி' க.நா.சு.வின் வசன கவிதையை வெளியிட்டதோடு வசனகவிதை பற்றிய விவாதத்தையும் தொடங்கி வைத்தது. இதன் பிறகு புதுக்கவிதை வளர்ச்சிக்கு காலமோகினி, கிராம ஊழியன், சரஸ்வதி இலக்கிய வட்டம், எழுத்து ஆகிய சிற்றிதழ்களைக் குறிப்பிடலாம்.

1959இல் சி.சு.செல்லப்பாவால் தொடங்கப்பட்ட எழுத்து புதுக்கவிதையின் சக்தி வாய்ந்த பிரச்சாரக் கருவியாக இருந்தது. இந்த ஏட்டில் தருமு சிவராமு, தி.சோ.வேணுகோபாலன், எஸ்.வைத்தீஸ்வரன், சி.மணி, சுந்தரராமசாமி(பசுவய்யா), டி.கே.துரைஸ்வாமி(நகுலன்) ஆகியோர் குறிப்பிடத்தகுந்த. புதுக்கவிஞர்களாக அறிமுகமானவர்கள். இவர்கள் கையில் புதுக்கவிதை புதிய பரிமாணமும் பரிணாமமும் பெறத்தொடங்கின.

1968இல் தொடங்கிய 'நடை' 1970இல் தொடங்கிய 'கசடதபற' ஆகிய இதழ்கள் எழுத்தின் வாரிசாக வெளிவந்தன. இக்காலகட்டத்தில் ஞானக்கூத்தன் குறிப்பிடத்தக்க புதுக்கவிஞராக அறிமுகமானார்.

முற்போக்கு அணியின் குரல் புதுக்கவிதைக் காலத்தில் உரத்து ஒலிக்கத் தொடங்கியது. இந்த வரவேற்கத்தக்க மாற்றத்தை 'தாமரை' இதழ் அறுபதுகளில் ஏற்படுத்தியது. இந்த இதழ் தந்த ஆதரவால் புதுக்கவிதையில் முற்போக்கு அணி உருவாகத் தொடங்கியது.

1971இல் கோவையில் தொடங்கிய 'வானம்பாடி' என்ற கவிதை வட்டம், புதுக்கவிதை வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த பாதிப்பை ஏற்படுத்திய பெருமை உண்டு. சமுதாயப் பார்வையும் முற்போக்கு

எண்ணங்களையும் கொண்ட இளைஞர்களால் இலவச வெளியீடாக வெளியிடப்பட்ட 'வானம்பாடி' இளைஞர்களிடையே கிளர்ச்சியையும் உந்துதலையும் உண்டாக்கிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தமிழ் மரபறிந்து தோன்றிய புதுமையும் இடதுசாரிச் சிந்தனையும் 'வானம்பாடி'க்கு ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தின. 'வானம்பாடி'யின் பாதிப்பால் மரபுக் கவிதை எழுதிக்கொண்டிருந்த சிலர் புதுக் கவிதைக்கு கட்சி மாறினர். புதுக் கவிதையைப் புறக்கணித்துக் கொண்டிருந்த தமிழ் மரபு அறிஞர் வட்டமும் சுழன்று கொண்டிருந்த புதுக்கவிதை போக்கால் அந்தக் குறுகிய வட்டத்தை விட்டு வெளியே வந்து செல்வாக்குப் பெறத் தொடங்கியது. புதிது புதிதாகக் கவிதைச் சிற்றிதழ்கள் தோன்ற ஆரம்பித்தன. இந்தக் காலகட்டத்தில் தோன்றிய கவிஞர்களுள் நா.காமராசன், மீரா, சிற்பி, புவியரசு, மேத்தா, கங்கை கொண்டான், அக்கினிபுத்திரன், இன்குலாப், தமிழன்பன் ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

வேறெந்த இலக்கிய வடிவத்தையும் விடப் புதுக்கவிதைக்குச் சக்தி அதிகம். மனித ஆன்மாவை அது விரைவாகவும் நெருக்கமாகவும் சென்று தொடமுடியும். அதனாலேயே இதற்குப் பொறுப்புக்களும் அதிகம் என்று சொல்லப்படுகின்றது.

புதுக்கவிதைக்குக் கிடைத்திருக்கின்ற வரவேற்பும் வாசகர் தொகைப் பெருக்கமும் மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும் இன்னொருபுறம் புதுக்கவிதை கொச்சைப்படுத்தப்படுகிற சூழ்நிலையும் இல்லாமல் இல்லை. எப்படி இருந்த போதிலும் புதுக்கவிதையின் வளர்ச்சியை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. புதுக்கவிதைகள் மரகந்தம் ஏற்றிய சிறகுகளாக இருக்க வேண்டும்.

நாட்டு விடுதலைப் போர், சமூகசீர்திருத்த இயக்கங்கள், ஆங்கில மொழி, பிறமொழி இலக்கிய அறிமுகம், இலக்கிய ஏடுகளின் பணி ஆகிய இந்திய தமிழ் நாட்டு நிகழ்வுகளும் சேர்ந்து தமிழகம் புதுக்கவிதை தோன்றுவதற்குரிய சூழ்நிலையைப் படைத்துத் தந்தன.

இலங்கையிலும் 1946 இல் வெளிவந்த வரதரின் மறுமலர்ச்சி இதழ் புதுக்கவிதைக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. இந்த இதழில் வரதர் மஹாகவி, அ.ந.கந்தசாமி போன்றோர் புதுக்கவிதைகளை எழுதி வரலாயினர்.

முற்போக்கு எழுத்தாளர்களின் மரபுப்போராட்டம் வலப்பெற்றதன் காரணமாகப் பலர் புதுக்கவிதைகளை எழுதி வரலாயினர். எம்.ஏ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம், சி.சிவசேகரம், புதுவை இரத்தினதுரை, சில்லையூர் செல்வராஜன், சேரன், ஷெல்லிதாசன், வில்வரத்தினம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். அன்றைய இலக்கிய ஏடுகளான மறுமலர்ச்சி, மரகதம், வசந்தம், மல்லிகை, சிரித்திரன், கற்பகம், தமிழமுது, அஞ்சலி, மலர் போன்றவை புதுக்கவிதை வளர்ச்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளன.

இன்றைய காலகட்டத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்ற ஞானம், ஜீவநதி, தாயகஒலி, படிகள், தென்றல் ஆகிய இதழ்களும் புதுக்கவிதைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இன்று எமது நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழும் எம்மவர்கள் பலர் புதுக்கவிதைகளை ஏராளமாகப் படைத்து வருகின்றார்கள். அதேவேளை பல படைப்புக்கள் நூலுருப் பெற்றும் வருகின்றன. எனவே புதுக் கவிதையின் வளர்ச்சியை எவராலும் தடுத்துவிட முடியாது.

**- நித்திலன்**

# உண்மையைப் புரிந்துகொண்டு சிந்தியுங்கள்


உலகமயமாக்கல் என்ற போர்வையில் பல்தேசியக் கம்பனிகள் தமது பொருளாதார மேம்பாட்டுக்காக மக்களைப் பொருளாதார ரீதியில் சுரண்டுவதுடன், இளம் வயதினரைக் கல்வி கற்க, சிந்தித்துச் செயலாற்ற, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை பேண, அமைதியான மனநிம்மதியை உருவாக்க, உடற்பயிற்சிகளில் ஈடுபட விடாது அக்கறையீனத்தை உருவாக்கி, நற்பிரஜைகளாக வாழவிடாது அவர்களைத் திசை திருப்பி, பல்வேறு கைபேசிகளை சந்தையில் உலாவ விட்டு அவற்றை கொள்வனவு செய்ய ஊக்குவிப்பதுடன் அவற்றின் பால் ஆசையைத் தூண்டுவதுடன் அவர்களை அடிமையாக்கியும் வைத்திருக்கிறது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தனித்தனியாக கைபேசிகளைப் பாவனையில் வைத்திருப்பதால் எவ்வளவு பணம் வீண்விரையமாகின்றது என்பதை அறியாத மயக்கத்தில் உள்ளனர்.

உண்மையிலேயே கைபேசிப் பாவனையாளர்கள் போகும் இடமெல்லாம் எடுத்துச் சென்று பாதைகளில் நடந்துகொண்டு, பேசிக்கொண்டிருப்பதுடன் பாதையைக் கடக்கும் போதும் அவதானமின்றி கதைக்கும் காதலினால் தங்கள் முன்னால் வருபவர்களையோ, வாகனங்களையோ கவனிக்காது ஆபத்துக்களை எதிர்கொண்ட வரலாறுகளும் பல உண்டு. உயிரை விட்டவர்களும் பதிவாகியுள்ளார்கள்.

பேருந்துகளில், புகையிரதங்களில், வாடகை வாகனங்களில் செல்லும்போது சத்தமாகக் கைத்தொலைபேசியில் கதைப்பதினால் பக்கத்திலிருந்து பயணம் செய்பவர்களுக்கு எவ்வளவு அசௌகரியங்களைக் கொடுக்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்வதில்லை. சிலர் இரவு பகலாகத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றார்கள். சிறிது காலத்தில் அதன் கதிர்த்தாக்கம் காது கேளாமையை உருவாக்கிவிடும். கைபேசியில் தொடர்ச்சியாக முகப்புத்தகத்திலுள்ளவற்றை பார்த்துக் கொண்டிருப்ப வர்களுக்குக் கண்பார்வை குறைவடையும் என்று ஆய்வாளர்கள், டாக்டர்கள் தெரிவித்துள்ளார்கள்.

எனவே ஆபத்தை விலைக்கு வாங்கியவர்களாக இருப்பவர்கள் ஆசைகாட்டி மோசம் செய்கிறார்களே என்று புரிந்துகொள்ள முடியாத அறிவிலிகளாக இருப்பது வேதனையைத் தருகிறது. வேண்டத்தகாதவற்றைப் பார்க்கும் மனோபாவம் கொண்ட நிலைக்குத் தள்ளப்படுவதனால் உளரீதியாகப் பலர் பாதிக்கப்பட்டள்ளார்கள். இதனால் மனநோயாளராகவும் மாறிவிடுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் தற்கொலைக்கும் தூண்டப்படுகின்றார்கள். இத்தகைய பெரும் ஆபத்துக்களை உருவாக்க கங்கணம் கட்டிக்கொண்டு, போட்டா போட்டியுடன் செயற்படும் இத்தகைய கைபேசிகளை உருவாக்கி விற்பனை செய்யும் பல்தேசியக் கம்பனிகளும் அவற்றின் முகவர் நிலையங்களும் அவற்றைத் தொடர் பாவனையைக் கொண்டு நடத்தும் மொபெயில் நிறுவனங்களும் சமுதாயத்திற்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பது பற்றி எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. கூடிய தொகைக்கு றீலோட் செய்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்ற அறிவித்தலுக்குச் செவிமடுத்து அங்கலாய்த்துத் திரியும் அப்பாவிகள் சற்று நிதானமாகச் சிந்திப்பார்களேயானால் தாங்கள் எவ்விதம் சுரண்டப்படுகின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்வார்கள். இன்று இலங்கையைப் போன்று சிறிய நாடுகளில் கைத்தொலைபேசியின் பாவனை அதிகரித்தே செல்கின்றது. சிலர் இரண்டுக்கு மேற்பட்ட கைபேசிகளைப்

பாவனையில் வைத்துள்ளார்கள். கவர்ச்சியான விளம்பரங்களுக்கு அடிமையாகி இன்று அவற்றைப் பாவிப்பது நாகரிகம், கௌரவம், மதிப்பு என்று மக்கள் எண்ணி தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டிருக்கின்றார்கள்.



சில குடும்பங்களிலே அடுத்த வேளை உணவுக்கு அரிசி வாங்காவிட்டாலும் வைத்திருக்கும் காசுக்கு கைபேசிக்கு றீலோட் செய்வதற்கு மறக்க மாட்டார்கள். இதிலிருந்து அதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வீர்கள். குறிப்பாக இளம் வயதினரை இது எவ்வளவு தூரம் ஆட்டிப் படைக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். உண்மையிலேயே அநேகர் அடிமையாகி விட்டார்கள். மாய வலைக்குள்ள அகப்பட்டு மீளமுடியாதுள்ளனர்.

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பிரகாசமாகவும் கல்வியில் மேலோங்கி மதிப்பான பிரஜைகளாக வாழவும் வாழ வழிகாட்ட வேண்டும் என்பதை மறவாமல், உங்களையே முதலில் திருத்திக் கொண்டு பிள்கைளுக்கு அன்பாகப் புத்திமதிகூறுங்கள். ஒரு பிள்ளையோ அல்லது கட்டிளம் பருவத்தினரையோ கைபேசிப் பாவனையை தேவைகருதி மட்டும் வீட்டில் மட்டுமேயன்றி பாதையிலோ பொது இடங்களில்லோ வாகனங்களிலோ பாவிப்பதை முற்றாகத் தடை செய்து, அவர்களை ஆரோக்கியமான பிள்ளைகளாக, அறிவாற்றல் கொண்டவர்களாக வாழவிடுங்கள். பொன்னான நேரம், கல்வி, உழைப்பு என்பன மற்றவர்களால் சுரண்டப்படுவதை ஒரு போதும் அனுமதிக்காதீர்கள்.

அடிமைப்பட்டவர்களை மீட்கமுடியாத நிலையிலும், சமுதாய நன்மைகருதி இதைச் சொல்லியே ஆகவேண்டும். சிந்தித்துச் செயற்படுவீர்களா?

**- சி.அருந்தவன்**



## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் யாழ்ப்பாணத்தில் நடத்திய கலை இலக்கியப் பண்பாட்டுப் பெருவிழாவில்



இலங்கையின் மூத்தபடைப்பாளியும், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், "தாயக ஒலி"யின் பிரதம ஆசிரியரும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவற்றின் இணைப்பாளருமாகிய கலாபூஷணம், தமிழ்மணி தம்பு சிவசுப்பிரமணியம்(தம்பு சிவா), 'தமிழ்த்திறலோன்' என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப் பெற்றுள்ளார். அன்னாரைப் பெருமிதத்துடன் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**- இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்**

# ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அறிக்கை

உலக சனத்தொகையில் ஏழைகளின் தொகை அதிகரித்துள்ள நிலையில், ஒரு சதவீத மாகவுள்ள செல்வந்தர்கள் 82 சதவீதமான செல் வத்துக்கு உரிமையாளராக உள்ளனர்.

வரி ஏய்ப்பு, தொழிலாளர்கள் உரிமைக ளைத் தீர்மானித்தல், தமக்குச் சாதகமாகக் கொள்கை வகுப்பு, கொள்ளை இலாபம், மக்க ளையும் தொழிலாளர்களையும் சுரண்டுதல், ஏமாற்றுதல், கறுப்புப் பணமுடக்கம் போன்ற இன்னோரன்ன காரணங்களால் செல்வந்தன் மேலும் கொழுந்த செல்வந்தனாகிறான்.

முதலாளித்துவ வர்க்கம் தன்னை மேலோங்கச் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. சாதாரண மக்கள் தாம் எவ் விதம் சுரண்டப்படுகின்றோம் என்பதைத் தெரி யாத அப்பாவிகளாக இருக்கும் வரை முதலாளித் துவம் வளர்ந்து கொண்டே இருக்கும் என்பதே உண்மை.

இந்த நிலையில், ஒக்ஸ்பாம் நிறுவகம், உலக பொருளாதார மையத்தின் வருடாந்தக் கூட்டம், சுவிட்ஸர்லாந்தின் டாவோஸ் பிராந்தியத் தில் நடைபெற்ற போது தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதாவது, உலகின் அதி செல்வந்தர்களாக வுள்ள சொற்ப தொகையினர் உலக செல்வத்தில் அதிகூடிய தொகையை உடைமையாகப் பெற் றுள்ள நிலையில் அவர்களுக்கும் வறுமையில் வாடும் மக்களுக்குமிடையிலான இடைவெளி என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாகத் தொண்டு ஸ்தாபனமான ஒக்ஸ்பாம் அறியத் தந்துள்ளது.

கடந்த வருடம் ஈட்டப்பட்ட பணவருமா னத்தில் சுமார் 82 சதவீதம், உலக சனத்தொகை யில் ஒரு சதவீதமாகவுள்ள பெரும் செல்வந்தர் களையே சென்றடைந்துள்ளது. அதேசமயம் ஏழைகளில் அரைப்பங்கினர், அதிகரிப்பு எதனை யும் பெறாத நிலையில் உள்ளதாக மேற்படி ஒக்ஸ் பாம் ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை யில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் பெரும் செல்வந்த தனிநபர்களின் தொகை 42 எனக் குறிப்பிட்டு, அவர்கள் உலக வறியவர்கள் தொகை அரைப் பங்கினர் பெற்றுள்ள மொத்தச் செல்வத் தைப் பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

உலகின் பெரும் செல்வந்தர்களும் ஏழை களும் உண்மையில் எவ்வளவு செல்வத்தை தம்வசம் வைத்துள்ளனர் என்பதைக் கண்டறிவது மிகக் கடினமானது எனத் தெரிவித்த ஒக்ஸ்பாமின் தலைமை நிறைவேற்று அதிகாரி மார்க் கோல் டிங், பெரும் செல்வந்தர்கள் தமது உண்மையான செல்வம் தொடர்பான தரவுகளை வெளியிடுவ தில்லை எனவும் உலகின் ஏழை நாடுகள் தமது மக்களின் தல வருமானம் குறித்து உரிய புள்ளி விபரங்கள் பேணப்படாத நிலை காணப்படு வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கயமை நிரம்பிய உலகப் பண்பாடு வழங் கும் பொருளாதாரச் சமமின்மை காரணமாக செல்வந்த நாடுகள் ஏழை நாடுகளின் வளங்களைச் சுரண்டித் தம்மைப் பலப்படுத்திக் கொண்டு கடன் என்ற போர்வையில் நாடுகளை முன்னேற்றம் காணவிடாது தடுத்து வருகின்றன. ஏழை நாடுக ளின் அதிகாரத்திலுள்ளவர்களும் கடன் செலுத்தப் பட வேண்டியுள்ளதால் நாம் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று மக்களுக்கு உபதேசம் வழங்கியபடி தாம் சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு பொது மக்களின் மேல் சுமைகளை ஏற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப் பாடு, பொருட்களின் விலையேற்றம், வாழ்வாதா ரப் பிரச்சினைகள், பசி பட்டினி நோய்கள் என்ப வற்றின் தாக்கத்தால் செய்வதறியாது மக்கள் தவிக்கின்றார்கள். ■

# 'முற்போக்குச் செல்நெறியைத் தொடும் ஏடு'




"தாயக ஒலி" இரு திங்கள் ஏட்டின் 30ஆம் (ஆடி-ஆவணி 2017) இதழ் செழுமையான எழுத்து நடையில் ஆக்கங்களைக் கொண்டிருப்பது தமிழ் வாசகருக்குப் பெருவிருந்துதான்!.

பேராசிரியர் சபா ஜெயராசா "ஆடலியற்றலின் எழுகோலங்கள்" என்ற கட்டுரையை அவரது திறனாய்வுப் பார்வைகளுடன் தந்திருக்கிறார். "மரபு வழி முகிழ்ந்த பரதநாட்டியம் என்பது மீற முடியாத வரையறைகளுக்கு உட்பட்டவை" எனவும் "வரையறைகளை மீறியும் மீறிய எண்ணக் கருவாக ஆடல் இயற்றியல் என்பது மேலைப்புலத்தில் விளங்குவதைக் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது" எனவும் பேராசிரியர் பரதநாட்டியத்தின் தனித்தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

"மனிதம் மரணித்துவிட்டது" என ஆசிரியத் தலையங்கம் குமுறுகிறது. நிலை மாற்றம் ஏற்படும் இன்றைய உலகமயமாதல் யுகத்தில் இப்பொறிமுறை பெருந் தருவாகிவிட்டது. இரு கரங்களையும் கூப்பி மனிதன் உலக இரட்சகர் முன்னிற்பது அவன்தன் உள்ளத்தையும் வணங்கித் தன்னை நல்வழிப்படுத்தலை வேண்டுகிறானென்பதை மனங்கொண்டால் நிச்சயம் மனிதம் தீர்க்காயுசுடன் நீடு வாழும்.

"மாணவரின் சிந்தனையைக் கிளறி விடுவதே கல்வி. இத்தகைய தன்மையை இன்று நம் நாட்டில் எதிர்பார்க்க முடியாதென" மனதைத் தொட்டதும் சுட்டதும்" என்ற தமது கட்டுரையில் சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வரும் வாணமதி கருத்துரைத்துள்ளார். " இன்றைய மாணவர் சமுதாயம் சமூகம் சார்ந்த கல்வியைக் கற்பதற்கான வாசிப்பே இல்லை" எனவும் குறிப்பிட்டு, பின்லாந்து, சுவிஸ்சர்லாந்து போன்ற நாடுகளின் கல்விப்பொறிமுறையை சிலாகிக்கிறார். தமிழ்ச் சிறுகதை, நாவல் போன்றவற்றையும் பாடப்புத்தகத்தில் சேர்த்துக் கொண்டால் சமுதாய சிந்தனை மாணவருக்கு ஏற்படக்கூடும். அதைக் கட்டுரையாக சுட்டிக்காட்டி இருக்கலாம்.

"உலகளவில் முதன்மை பெற்றிருக்கும் பின்லாந்து என்ற நந்தவனத்தின் எழுத்துரு. வாணமதியின் வேண்டுகோளை அங்கீகரிக்க முனைகின்றது". ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில் பின்லாந்து நாட்டு அரசு மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள் தான் அங்கு கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கியுள்ளது. எனக் கல்வியில் ஆசிரியரின் வகிபாகத்தின் முக்கியத்துவத்தைப் புகட்டுகின்றது. ஈழத்து கல்விப் புலம் இவைகளைக் கவனித்துச் செயலாற்றுவது புதியதோர் அறிவு சார்ந்த உலகைப் படைக்க உதவும்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர், சாகித்தியரத்னா நீர்வை பொன்னையன், இளங்கீரன், ஜெயகாந்தன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கஸ்தூரி ரங்கன் பற்றிய அரிய தகவல்களின் பரவலால் ஒரு சிறந்த நவீன இலக்கிய ஏடாக இச்சஞ்சிகை உயர்ந்து நிற்கின்றது.

இளங்கீரன் பற்றி தம்பு சிவா உணர்வு பூர்வமாக எடுத்துரைக்கிறார். ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் எழுகோலத்தையும் சாதீயம் ஆகியவற்றில் தன் பேனாவை ஆக்ரேஷத்தோடு பயணிக்க வைத்தவர் இளங்கீரன். தமிழ் தினசரியில் தொடர் நாவலெழுதி வாசகரின் மனதைக் கவர்ந்த இளங்கீரன் இலக்கிய மேடைகளில் தனது பேச்சாற்றலை வெளிப்படுத்தியவர். இவரது பேச்சைக் கேட்ட சைவப் பழமான பெரியார் சு.நடேசபிள்ளையை முற்போக்கு எழுத்தாளர்களின் கருத்துகள் முழுவதையும் முற்றாகப் புறக்கணிக்க முடியாது. அவற்றில் கொள்ளத்தக்கவையும் உள்ளன எனப் பகர வைத்த திறமை இளங்கீரன் மேடைப் பேச்சுக்கு உண்டென்பதை தம்புசிவாவின் கட்டுரை நிரூபிக்கின்றது.

சாகித்திய ரத்னா நீர்வை பொன்னையன், ஆக்கஊடிய சிறுகதைகளைப் படைத்த ஈழத்துப் படைப்பாளியெனவும் மதிக்கப்படுகிறார். மனித வாழ்வில் கோலமிடும் உயர்வு தாழ்வுகள் தொழிலாளர் பிரச்சினைகள் என்பவற்றை மார்க்கிய நோக்கில் படைப்பிலக்கியமாக்குபவர். வாழ்வில் தனித்துவம் பேணும் இந்நாடறிந்த எழுத்தாளர் குறித்து எம்.கே.முருகானந்தம் எண்பத்தேழு வயதில் மனிதநேய எழுத்துப் பணிதுறக்காதவர் என்ற தலைப்பில் இவ்விதழில் எழுதியுள்ளார்.

தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர் என்ற எழுத்தாக்கத்தை த.சிவசுப்பிரமணியம் எழுதியுள்ளார். சிறுவர் செந்தமிழ் தந்த தங்கத் தாத்தா பற்றிய பல தகவல்களை நினைவுபடுத்தியுள்ளார்.

குழந்தைக் கவிஞராகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் தன் ஆற்றிலை வெளிப்படுத்தி இன்றும் தமிழ் நெஞ்சங்களில் வாழ்கிறார்.

இன்றைய அச்சு ஊடகங்கள் உருவகக் கதையை மறந்து விட்டன. இருந்தும் இவ்விதழ் செங்கதிரோனின் "தாபம்" உருவகக் கதையை வெளியிட்டு ஓர் அருட்டுணர்வைக் கொடுத்துள்ளது.

வ.கலைச்செல்வி படைத்திருக்கும் "யார் புத்திசாலி" புதிர்க் கதை வாசகனின் விவேகத்தைக் கூர்மைப்படுத்துவது தொடர வேண்டும். இன்னும் பலவற்றைப் படித்தறிய இந்த இதழின் அனைத்துப் பக்கங்களுக்கும் பயணியுங்கள்.

**செல்லக்கண்ணு**
**(வீரகேசரி)**

## தாயக ஒலி

ஆடி-ஆவணி 2017ன் தாயக ஒலியின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பொது ஸ்தாபனங்களில் "பல்லாலே இதழ் அதக்கி - எரிச்சல் - பொறாமை - சூது - வஞ்சகம் - அண்டிக் கொடுத்தலாகிய பஞ்சமா பாதகங்களை சமூக முன்னேற்றச் செயல்பாடுகளுக்குக் குந்தம் விளைவித்துச் சதி செய்யும் கும்பல்களின் கிழித்தெறியப்பட்ட முகமூடிகள் தொங்க, ஒவ்வொரு சொல்பதத்தின் பின்புலத்திலும் நிதானமாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அம்பலமாக்கப்பட்ட சதிகாறர்களை நிச்சயமாகத் தெய்வம் நின்றறுக்கும்.

துணிச்சலான ஆசிரியரின் தூய்மையான பேனா முனையின் அறிவாயுதம் தொடரட்டும்!

**- சங்கமித்ரன்**
**வெள்ளவத்தை**



**பாரெல்லாம் புகழ்பாடும் சுழற்பந்துவீச்சுக் கிறிக்கற் மன்னன்**
**முத்தையா முரளீதரனின் முன்னறிதெய்வங்களான**
**பவளவிழா நாயகர்கள் திரு.திருமதி முத்தையா தம்பதிகளையும்**
**அவர்களைக் கௌரவித்த திரு. தம்பு சிவசுப்ரமணியம் (தம்புசிவா)**
**அவர்களையும்**
**பாராட்டிக் கௌரவிக்கும்**

# வாழ்த்துப்பா

பவளவிழாக் கொண்டாடும் மாதா பிதா இருவரையும்
பார்த்து மகிழும் கிறிக்கற் மன்னன் முரளீதரன் நிழற்படத்தை
முன்னட்டை பொலிவுபெற முழு உலகும் பாராட்ட
பிரசுரித்துக் கௌரவித்த பிரதம ஆசான் தமிழ்ச்சங்கத்
தலைவரான தம்புசிவ சுப்ரமணியம் அனுப்பிவைத்த
'தாயகஒலி' பார்த்ததுமே மனம் மகிழ்ந்து முத்தையா
தம்பதிகள் இருவரையும் தமிழ்ச்சங்கத் தலைவரையும்
சீரோடும் சிறப்போடும் சிறந்த நற்சுகத்தோடும்
பேரோடும் நீடுவாழப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்
வாழ்க! வாழ்க! வளங்கள் பல பெற்று நீடுழி நீவீர் வாழ்க!

**மனமாரவாழ்த்தும்**
**மைமூனா காதர் செயினுலாப்தீன்**
நல்லம்மா அதிபர்
அல்மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை ஸ்தாபக அதிபர்
நிந்தவூர்

25 வருடகால அனுபவம்

# Linga & Co

Legal Advisors & Immigration Specialists



**V.P.Lingajothy**

LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX

Principal

immigration Specialist

E-mail:mrlinga@aol.com

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாகத் தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகின்றோம்

## We Specialise in :

- Asylum and Immigration Matters
- Human Rights Applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Appplication and Appeal
- Injunctions & Judicial Reviews Through Associate Solicitors
- Work Permits
- EEA Applications (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

- Family Law
- Employment Law
- Criminal Law

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்புகொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285

Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY

OISC

**Emergency Line : 07771 646 441**

# Kanaga Solicitors

108 High Street, Colliers Wood
London - SW19 2BT

## KEY PERSONNAL

Kanakavalli Nadarajanpillay

Position in the firm : Principal Solicitor

### Academic / Professional Qualifications :

L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, Solicitor of the Supreme Court of England and Wales.

### Relevant and present Experience :

Immigration Asylum, Residential Conveyancing, Commercial Conveyancing, Civil Litigation, Criminal Litigation, Family & Divorce Cases, Land Lord & Tenant, Wills and Probate.

Successful practitioner of 18 years.




108 High Street, Colliers Wood
London - SW19 2BT
E mail : kanakavalli_ek@yahoo.com

Tel : 078 7827 8131
020 8544 1100

# Western Jewellers

Jewellers & Gem Merchants



வகை வகையான வடிவங்களில்
தரமான தங்க நகைகளை
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள் உங்கள்
வெஸ்டன் ஜுவல்லர்ஸ்க்கு

## First Tamil Jewellery Shop in UK

Specialise in 22ct Gold, White Gold, Platinum & Diamond Jewellery



TOOTING BRANCH
230, UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW
UNITED KINGDOM
TEL 020 8767 3445

WEMBLEY BRANCH
5, PLAZA PARADE
EALING ROAD, WEMBLEY
HA0 4YA
UNITED KINGDOM
TEL : 0208 903 0909

**SEASON'S BEST IS SUMMER, SAREE'S BEST IS SILK EMPORIUM SAREES**

SILK EMPORIUM

122 Upper Tooting Road,
London SW 17 7EN
United Kingdom
Tel : 020 8672 1900

Opening Hours : Monday - Saturday (10.30am-6.30pm), Sunday (11.30am - 6.30pm)

Luckyland

BISCUIT
MANUFACTURERS




NATTARANPOTHA, KUNDASALE, SRILANKA
TEL: +94 081 2420574, 2420217 FAX : +94 081 2420740
E-mail : luckyland@sltnet.lk